பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
டிசம்பர் 2021



பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

தோற்றம் 1972 டிசம்பர் 2021

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸீர் ரஹ்மான்

கவிஞர் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

கவிஞர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி




மேலுள்ள அட்டைப்படத்தில் டச் அல்லது க்ளிக் செய்து ஹைக்கூ திண்ணை 8 இதழினை தவிறக்கம் download செய்யவும்.

தமிழ்நெஞ்சம்

தோற்றம் 1972

600

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப் பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!

கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடத்தயாராகக்காத்திருப்பீர்கள். அத்துடன் வரப்போகும் புத்தாண்டையும் மிகக் கோலாகலமாக வரவேற்கத் தயாராகிக் கொண்டிருப்பீர்கள். இந் நிலையில் பழையன கழித்து புத்தம் புதியவற்றில் புகு முன், நம் மனங்களை ஆட்டிப் படைக்கும் தீய எண்ணங்களைக் களைவோம். எம் மனதுக்குள் பெருவிருட் சமாய் குடிகொண்டிருக்கும் போட்டி, பொறாமையை அடியோடு அகற்றுவோம். நல்லெண்ணங்களைக் கொண்டு எம்மை பூரணப் படுத்திக் கொள்வோம்.

இந்த வருடம் சில கருமங்களைச் செய்து முடிப்பதாய் சபதம் எடுத்து, நிறைவேற்றமுடியாமல் போயிருக்கலாம். இனிவரும் புத்தாண்டில் எம் எண்ணம் ஈடேற விடாமுயற்சியுடன் கடுமையாய் உழைப்போம்.

ஐம்பதாவது ஆண்டு பூர்த்தி யடைந்து, ஐம்பத்தோராம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் தமிழ்நெஞ்சம் இதுவரை வாசகராகிய உங்கள் உறுதுணையால் தான் இந்நெடுந் தூரத்தைக் கடந்து வந்திருப்பதை நன்றியுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மலரும் புத்தாண்டில் வாசகருக்காக புதிய விடயங்களுடன், மகிழ்வுதரும் நற்செய்தியும் காத்திருக்கிறது என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதோடு, இனிவரும் காலங்களிலும் உங்கள் பேராதரவு எங்களை வழிநடத்திச் செல்லுமென நம்புகிறேன். கைகள் இணைத்தே சாதிப்போம் வாருங்கள்! அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்!

நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)



# உறுதியாய் இருங்கள் !

கடைசியில் நான் பயந்தது நடந்தே விட்டது. என் அலுவகத்திலிருந்து என்னை வேலை நீக்கம் செய்து விட்டார்கள். ஒரே நாளில் பதவி, புகழ் அந்தஸ்து எல்லாம் இழந்து, வாழ்க்கையே முடிவுக்கு வந்தது போல் உணர்கிறேன். இந்த அலுவலகமே உலகம் என்று உழைத்த என் கதி இனி அவ்வளவுதானா???

ஒரு மனிதன் உயிரோட்டமாக இருக்கிறான், அவன் வாழ்க்கை உயிரோட்டமாக இருக்கிறது என்றாலே அங்கே ஏற்றத்தாழ்வு இருக்கத் தான் செய்யும் என்பதை முதலில் உங்கள் மனதில் ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஒரு உயிரோட்டமான மனிதனின் வாழ்வில்ஏற்றஇறக்கம்கண்டிப்பாகஇருக்கும் என்று மட்டுமல்ல, இருக்க வேண்டியது மிகவும் முக்கியம் என்றும் சொல்கிறார் 'ரத்தன் டாட்டா'. அதற்கு உதாரணமாக 'நம் இதயத் துடிப்பை அளவிடுகிற 'ஈ.சி. ஜி' மேலும் கீழுமாக இருந்தால் தானே நாம் உயிரோடு இருப்பதாக அர்த்தம்?!' என்று ஒரு அறிவுபூர்வமான கேள்வியையும் எழுப்புகிறார் அந்த அனுபவம் நிறைந்த தொழில் வல்லுனர்.

நங்கூரம் பாய்ச்சப்பட்டு கரையோரமாக நிற்கக் கூடிய கப்பல் நிச்சயமாக பாதுகாப்பாகத் தான் இருக்கும். ஆனால் கப்பல் அதற்காக படைக்கப்படவில்லையே, அலையடிக்கும் கடலில் இயற்கை சீற்றங்களை எதிர் கொண்டு பயணப் படுவதற்காகத்தானே கப்பல் கட்டப்படுகிறது. அது போலத்தான் மனிதனும் வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளையும் சிரமங்களையும் எதிர்கொண்டு வாழ்வதற்கேற்ப தான் படைக்கப்பட்டுள்ளான். வாழ்க்கை என்றால் இன்பமும் துன்பமும் கலந்தது தான் என்று புரிந்து ஏற்றுக் கொள்ளும் போது எந்த ஒரு பிரச்னையையும் நீங்கள் பதற்றமில்லாமல், இலாவகமாகக் கையாளக் கூடியவராக ஆகிவிடுவீர்கள்.

அதே நேரம் எந்த ஒரு பிரச்னையுமே இல்லாமல் எழுதி வைத்த மாதிரி வாழ்க்கை

# Dr. ஃபஜிலா ஆசாத்

**(International Life Coach – Mentor – Facilitator)**

இருக்க வேண்டும் என்று நினைக்கும் போது, எங்கேயோ ஏதோ ஒரு பிரச்னை வந்தால் கூட உங்களுக்குள் பதற்றம் தொற்றிக் கொள்ளும். அது சுழன்று சுழன்று எழுந்து நாளடைவில் உங்கள் தைரியத்தை அழித்து, எதையும் எதிர் கொள்ள விடாமல் செய்து விடும்.

அதனால் தான்... ஏதோ ஒரு கம்பெனியில் வேலை நீக்கம் நடந்தால் கூட, அடுத்து நம் அலுவலகத்தில் இது நடந்து விடுமோ என்ற தவிப்பு எழுகிறது. உங்கள் அலுவலகத்திலேயே வேறு யாரையோ வேலையை விட்டு நீக்கும்போது அடுத்து நம்மை விலக்கி விடுவார்களோ என்ற நடுக்கம் வருகிறது. உங்களுக்கே அது நடக்கும்போது ஏன் என் வாழ்க்கையில் மட்டும் எப்போதுமே ஏதாவது ஒரு பிரச்னை வருகிறதென்ற சோர்வும் சுயபச்சாதாபமும் ஏற்படுகிறது. இந்த அலுவகத்திற்காக இரவு பகல் பாராமல் உழைத்தேனே, எல்லாமே இந்த அலுவகம்தான் என்று இருந்தேனே, இப்படி விசுவாசமாக இருந்த என்னை இவ்வளவு சாதாரணமாக நீக்கி விட்டார்களே என்று, நிகழ்வை ஏற்றுக் கொள்ள முடியாமல் ஈகோ தடுக்கிறது. மனமெங்கும் தனித்து விடப் பட்ட, செயலற்றுப் போன வருத்தம் சூழ்கிறது. தவிர, இந்த வேலைக்கு நான் தகுதியான ஆள் இல்லை என நினைக்கிறார்களா? நான் இன்னும் கவனமாக இருந்திருக்க வேண்டுமோ?! என குற்ற உணர்ச்சி மனதை அழுத்தி, அது கோபமாகவும் வெறுப்பாகவும் உருக்கொள்கிறது. இந்த சமூகம் என் வேலையை வைத்துத்தானே என் தகுதியை நிர்ணயிக்கும், இப்படி வேலை இழந்து நிற்கிறேனே என மனம் கூனிக் குறுகிப் போகிறது.

நம்புங்கள்! இது எல்லாமே ஒரு மாயைதான். எதுவும் நிஜம் அல்ல. இவை உங்கள் மனம் உங்களுக்குள் வரையும் கிறுக்கல்கள். இது நீங்கள் அனுமதிப்பதால் மட்டுமே உங்களை ஆட்கொள்ளும் பெரும் விபரீதம்!.

இந்தவேலைபோனால்..அந்தபிரச்னை வந்தால்..., என்று நெகட்டிவாக உங்கள் மனதிற்குள் ஒரு கேள்வி எழுமுன், பயமும் பதற்றமும் மனமெங்கும் படர்ந்து உங்கள் சிந்தனையையும் உங்கள் ஆற்றலையும் செயலிழக்கச் செய்யுமுன், "அதனால் என்ன?" (What if?) என்ற ஒற்றைக் கேள்வியால் அனைத்து எதிர்மறை சிந்தனைகளையும் உதறி எறியுங்கள்.

'ஒரு கதவு மூடினால் நிச்சயம் வேறு ஒன்று எங்கோ திறந்திருக்கும். ஆனால் நாம் பொதுவாக மூடின கதவையே கவலையுடன் வெகு காலம் பார்த்துக் கொண்டிருப்பதில், திறந்த கதவை பார்க்க மறந்து விடுகிறோம்' என்று அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் கூறுகிறார். ஒரு வேலை போனதற்காக, இந்த வேலைதான் எல்லாமே என்று நினைத்து வாழ்க்கையே முடிந்து விட்டதாக மருகுவது மூடிய கதவையே பார்த்துக் கொண்டு இருப்பதற்குத் தான் சமமாகும்.

"நாம் திரும்புவதற்குத் தயாராக இருந்தால் சாலையின் முடிவு என்பது வெறும் வளைவுதான்" என்கிறார் ஹெலன் கெல்லர். ("A bend in the road is not the end of the road... unless you fail to make the turn" - Helen keller)

ஹெலன் கெல்லர் சொல்வது போல் இதை சாலையின் முடிவாக இல்லாமல் ஒரு திருப்பமாக, வளைவாக எண்ணிப் பாருங்கள்... நீங்கள் இது வரை எதிர்பாராத கோணத்தில் உங்களுக்கான புதிய சந்தர்ப்பங்கள் அங்கு புதைந்திருக்கலாம்.

புத்தம்புதுவாழ்க்கைக்கானஅழைப்பிதழ்கள் அங்கே மறைந்திருக்கலாம்.

பிக் `B` என அன்போடு அழைக்கப் படும் பிரபல நடிகர் பத்மபூஷன் அமிதாப் பச்சனை தெரியாதவர்கள் இருக்க முடியாது. 1999 லேயே `சூப்பர் ஸ்டார் ஆஃப் த மில்லேனியம்`னு போற்றப்பட்டவர். 2000 ஆம் ஆண்டு உலகப் புகழ் பெற்ற லண்டன் 'மேடம் டுஸார்ட்' மியூசியத்தில் அவருக்கு மெழுகுச் சிலை வைக்கப் பட்டது. அதில் இன்னுமொரு சிறப்பு என்னவென்றால் தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு ஆசிய கண்டத்தை சார்ந்தவருக்கு நிறுவப்பட்ட முதலாவது சிலை அவருடை யதுதான். இப்படி உலகளாவிய உயரத்தில் இருந்த அவருக்கு அந்த வருடத்தின் பிற்பகுதியிலே என்ன நடந்தது தெரியுமா? அவர் புதிதாக தொடங்கிய சினிமா தயாரிப்பில் மிகப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. எந்த அளவு நஷ்டம் என்றால் அவர் அது நாள் வரை சேர்த்து வைத்திருந்த அனைத்து செல்வத்தையும் இழந்து விடுகிறார். அவர் குடியிருந்த வீடே ஜப்தி செய்யப்படக் கூடிய நிலை வருகிறது. அந்த கால கட்டத்தில் அவர் படங்களில் நடிப்பதையும் நிறுத்தி இருந்ததால் கையில் எந்த படமும் இல்லை.

இப்படிப் பட்ட சூழ்நிலையில் வேறொருவராக இருந்தால் என்ன செய்திருப்பார்... ஆனால், அமிதாப் எந்த இடத்திலும் தளர்ந்து போகவில்லை. அவருக்கு அந்த நேரம் 57 வயது. ஒரு ரிட்டயர்ட்மெண்ட் டைம்ல எனக்கு இப்படி ஒரு பிரச்னை வரணுமா, இவ்வளவு உயரத்திலே இருந்த எனக்கு இந்த சரிவு வரணுமா, இந்த பிரச்னை என் இளம் வயதில் வந்திருந்தால் கூட எதிர் நீச்சல் போட்டிருப்பேனே என்று இப்படி நடந்திருக்கலாமோ, அப்படி நடந்திருக்கலாமோன்னு கொஞ்சம் கூட பதறலை..

அவர் இதை ஒரு முடிவாக பார்த்து கலங்காமல்,வளைவாக நினைத்து திரும்பத் தயாராகிறார். அந்த நேரம் அவருக்கு ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. முழு மனதோடு ஏற்று செய்கிறார். அந்த வாய்ப்பு அவரை மீண்டும் பெரிய உயரத்திற்கு தூக்கிச் செல்கிறது. இழந்த அனைத்தையும் மட்டுமல்ல, இன்னும் பெரிய பேரையும் புகழையும் அவருக்கு அள்ளித் தருகிறது, ஹிந்தி சூப்பர் ஸ்டாராக இருந்த அவர் இந்தியாவின் சூப்பர் ஸ்டாராகிறார். பின்னொரு நாளில், `உங்களுக்கு நடந்த பிரச்னைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்' என்று கேட்கும்போது 'நான் அதை ஒரு பெரிய பாடமாக நினைக்கிறேன். இனி எல்லா விஷயத்திலும் எப்படி கவனமாக இருக்க வேண்டும் என்பதை அது எனக்கு கற்றுத் தந்து விட்டு சென்றிருக்கிறது' என்கிறார் நிதானமாக!

உங்களுக்கு ஒன்று தெரியுமா? `உன்னால் முடியும் என்று நீ நினைத்தாலும், உன்னால் முடியாது என்று நீ நினைத்தாலும் நீ நினைத்தது சரி` என்கிறார் ஹென்றி ஃபோர்ட்.

நாம் எதை நினைத்தாலும் அதை மெய்யாக்க நம் ஆழ்மனம் தயாராக இருக்கிறது என்கிறது மனவியல்.

உண்மையில் 'என்னால் முடியும்' என்று நீங்கள் நினைக்கும் போது எந்த சூழலிலும் உங்களுக்கான சந்தர்ப்பத்தை உங்களால் இனங்கண்டு கொள்ள முடியும். `முடியாது' என்று நீங்கள் நினைத்தால் நீங்கள் நினைக்கக்கூடிய அந்த வெற்றி நீங்கள் நினைத்த கோணத்தில் வந்தால் மட்டுமே தவிர, வேறு எந்த ரூபத்தில் வந்தாலும், உங்களால் அடையாளம் காண முடியாமல் போய் விடும். நீங்களும் உங்கள் சூழலையும் விதியையும் மீண்டும் மீண்டும் நொந்து கொள்வீர்கள்.

உண்மையில், எந்த ஒரு பிரச்னை வந்தாலும், அந்த பிரச்னையிலேயே தங்கிப் போவதும், அதைத் தாண்டிப் போவதும் உங்கள் கைகளில்தான் இருக்கிறது. 'இத்தோடு நீ முடிந்தாய்' என்று மனம் உங்களை அழுத்தும் போது, இது ஒரு போதும் இறுதி இல்லை என்பதில் உறுதியாய் இருந்தால் `முனை`, `திருப்புமுனை` யாகும். வாழ்க்கை உங்கள் வசப்படும்.

# கண்ணைக் காப்பேன் தமிழ்

பாதையெல்லாம் முட்கள்;
பதமிரண்டில் செங்குருதி;
வாதையெல்லாம் ஐயோ
வளர்பாலை; - ஏதைப்
புரிவதென எண்ணாமல்
பூந்தமிழை மட்டும்
அரியாக எண்ணிவந்தேன்
ஆம்.

தடைகள் கடந்தத்
தமிழ்நெஞ்சம் நூலாய்
மடைகள் உடைத்துநிற்கும்
மாறா; - படைகளெல்லாம்
எவ்வுருவில் வந்தாலும்
என்றமிழைக் காப்பாற்றத்
தவ்விவரும் நாளும்
தனித்து.

நட்டுவைத்தப் பூஞ்செடியாய்
நாளும் தமிழ்நெஞ்சை
பட்டுப்போல் கண்திறந்து
பாதுகாத்தேன் - சுட்டும்
குறைகள் தகர்த்தெறிந்து
குன்றாய் வளர்க்கப்
பிறையாய் வளர்ந்தேன்
பிறகு.

போட்டி நிறைந்தும்
புதுமைப் பலநிறைந்தும்
ஏட்டின்மேல் மட்டும்தான்
என்கவனம் - ஆட்டிவைத்த
எல்லாமும் ஒவ்வொன்றாய்
எட்டி உதைத்துவிட்டு
வில்லாக நின்றேன்
வளைந்து.

கோளெல்லாம் ஈதே
குறியும் இதுவொன்றே
நாளெல்லாம் ஈதே
நடப்பாக்கித் - தேளென்னைக்
கொட்டிடினும் மாறேன்
கொழுந்துவிட்டு நானெரிந்துத்
தொட்டிடுவேன் வானைத்
தொடர்ந்து.

தீண்டாருக் குள்ளும்
திறமை ஒளிந்திருந்தால்
தோண்டி எடுத்துத்
துணியவைக்கும் - ஆண்டாண்டாய்
வெற்றிநடை போடுகிற
வேங்கைத் தமிழ்நெஞ்சம்
பற்றியறி யாதார்
பதர்.

பூமணக்கும் பாட்டைப்
புகழுந் தமிழ்நெஞ்சம்
நாமணக்கத் தாரும்
நறுஞ்சுவையாய் - மாமதுரை
சங்கத் தமிழ்வளர்க்கும்
சாகாமல் அத்தமிழை
எங்கும் சுமக்கும்
இது.

ஒன்றுமட்டும் சொல்வேன்
உறுதி; தமிழ்நெஞ்சம்
வென்றுமண்ணில் நிற்கும்
வெயிலோனாய் - அன்று
வெளிச்சத்தில் கல்வெட்டாய்
வெல்லும்நூல் செய்யும்
உளிச்சத்தம் கேட்கும்
உலகு.

தமிழ்நெஞ்சம் அமின்

## "உனக்காகவே""என்பது ஏற்க மறுத்த பொய்

எல்லாம் உனக்காகவே
என்ற சொல் எவ்வளவு பெரிய
போர்வை தெரியுமா
அது எவ்வளவு பெரிய
மாயை தெரியுமா
அது எவ்வளவு பெரிய
போதை தெரியுமா

எல்லாம் உனக்காகவே
என்பதுள் எவ்வளவு
விஷமங்கள் இருக்கும் தெரியுமா
எவ்வளவு கபடத்தனம்
இருக்கும் தெரியுமா

எல்லாம் உனக்காகவே
என்பது எவ்வளவு பெரிய
மந்திரம்  தெரியுமா
எவ்வளவு பெரிய
தந்திரம் தெரியுமா
எவ்வளவு பெரிய
சூதானமானவொன்று தெரியுமா
எவ்வளவு பெரிய
மாயத்திரை தெரியுமா

எல்லாம் உனக்காகவே என்பது
உனக்கான சிந்தையை
பல நேரங்களில்
எப்படியெல்லாம்
குறுகச் செய்யும் தெரியுமா

உனக்காகவே எல்லாம் என்று
உன்னையே இல்லாமல் செய்து
இரவலில் எப்படியெல்லாம்
நீந்தச் செய்யும் தெரியுமா

உனக்காகவே எல்லாம்
என்றதும் மயங்கி விடாதே
உன் மயக்கம் தான் உன்னை
அவர்கள் ஆக்கிரமிக்க
அடித்தளமாகிப் போகிறது

உனக்காவே என்றதும்
மயங்கிக்  கிடந்தேன்
உனக்காகவே எனும் தலைப்பில்
பிறர் வாழ்ந்து முடித்திருந்தார்கள்
மயக்கம் தெளிந்த நேரமதில்!

**க. ஷியா**

## அ(க)டையாமத்து இருள்

காத்திர இரும்பொன்றை
கவரும் முகங் கொண்ட
காந்தமொன்று இழுத்தணைத்தது.

நித்தமும் ஞாயிறோ
ஒளிரும் கிரணங்களால்
அஸ்தமித்து
அந்தகாரத்தை அகற்றுகிறது.

லயத்தை செய்யும்
சிவனாக அவதரித்து
அங்கமெங்கும் வியாபித்திருக்கும்
நின் நினைவுகளை அழிக்க
ஆளொன்றை உருவாக்கி அனுப்பு.

காதலன்பர்களும்
சிந்தை ஒன்றி லயித்து
கெண்டைமீன் கண்களால்
விழிகள் கடைபுரள
கழியாத இரவின்
அ(க)டையாமத்து இருளினை
அள்ளிப் பருகுகின்றனர்.

திரியாத மனத்தையும்
திரிய வைத்த நீயோ
எங்கெங்கோ அலைந்து
திரிந்த மனத்தினைத்
திசைதிருப்பும் முயற்சியில்
பயணித்துக் கொண்டிருக்கிறாய்.

**- மாலதி திரு**





## நம்பிக்கைதான் வாழ்க்கை புள்ள,
## நான் இருக்கேன் வாடி புள்ள!

கண்ணால சாடை காட்டி
காதலத்தான் வளர்த்தவளே
கண்ணாலம் கட்டிக்கன்னு
கண்ணீரோடு சொல்பவளே
காரிகையேயென் கருவிழியே
நீ காத்திருக்க வேணுமடி
காதலன் நானுன் கைப்பிடிக்கக்
கனநாள் தான் இல்லையடி
கால் கடுக்கக்
காத்திருந்தேன் கனவோடு
கடுமையாகத் தவம்
புரிந்தேனுன்னினைவோடு
கட்டாயம் சேர்ந்து
நாம் நலமாய் வாழ
கஷ்டங்கள் எல்லாமே
கடந்து வந்தேன்
காததூரம் நான் வந்து
கடும்பாடு படுவதெல்லாம்
கட்டுக்கட்டாய்க் காசுழைத்துன்
காலடியில் போடத்தான்
கலைமானே நம்பிக்கையே
வாழ்க்கை நம்பிவிடு
கன்னிகாதானம் பெற்றுக்
கரம்பிடிப்பேன் கவலை விடு

ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

# தடம் பதிக்கும் தன்முனைக்கவிதைகள்

சாதிகள் இல்லையடி பாப்பா
பாடம் சொன்ன ஆசிரியர்
தெருவெல்லாம் சுற்றுகிறார்
சாதிகளைக்  கணக்கெடுக்க

- இராம உபேந்திரன்

இரவில் உனது நினைவுகள்
இதயத்தில் தினமும் பூக்கும்..
உறங்கா இமையின் கனவுகள்
உதயத்தில் உறவை சேர்க்கும். .

- சாரதா க. சந்தோஷ்

நாடகமாடி ஏமாற்றும்
நயவஞ்சகர்கள் கயவர்கள்
வேடதாரிகளை வெல்ல
ரௌத்திரம் பழகு

- ஒசூர் மணிமேகலை

அடைமழை நேரம்
குடைவிரித்தும் பயனில்லை
முழுமையாய் நனைகிறேன்
உனது அன்பில்.

- வைகை பாரதி

வகிடு எடுத்து
வழி கொடுக்கும்
வயல் நடுவே
வரப்பு வெளிகள்

- வண்ணைவளவன்

தொடர் அடை மழை
ஈற விறகுடன் அம்மா.
ஜன்னல் இல்லா சமையலறை,
ருசி பார்க்காத பூனைகள்.

- அகவலன்

அகல் விளக்குகளுக்கு
தீபம் ஏற்றுங்கள்
அந்த ஏழையின் மகள்
படித்துக் கொண்டிருக்கலாம்.

- ஆ.நடராஜன்

தொட்டு விடும் தூரத்தில்
கிளையில் மாங்கனி
கட்டிப் போடுகிறேன் மனதை
பக்கத்து தோட்டம்.

- மூ.மணி திருமுருகன்.

விழுந்த மழையில்
எழுந்த விதைகள்
விருட்சங்களாகிறது
புது விடியல் படைக்கிறது

- தங்க.ஆரோக்கியதாசன்

காலத்தின் சிறகுகளில்
கனவுகளின் பயணம்
ஞாலத்தில் போராடும்
கைகூடும் வரையிலும்

- கவிஞர் கவி நிலா மோகன்

மென்மை எப்படி
உன்னுள் வந்தது?
என்னை உன்னுள்
ஈர்த்துக் கொள்ளவா?

- சுபாஜினி மனோகரன்

வேலைப் பளுவால்
தொடர்புகள் குறையலாம்
புரிதலில் இருக்கிறது
நட்பின் மேன்மை.

- ஆத்தூர் சாகுல்

அறிவியல் வளர்ச்சி
அச்சத்தை தருகிறது
இயற்கையில் மாசு
இறக்கிறது பல உயிர்கள்

- எஸ். செல்வி, இலங்கை

தன்னலம் பேணுதல்
தாய்நாட்டுப் பற்றல்ல,
நாட்டுநலன் காத்தால்
நன்றாகும் நாடும் வீடும்...!

- செண்பக ஜெகதீசன்

துரோகம் என்பது
நம்பிக்கையின் விரிசல்
அதை நிவர்த்தி செய்ய
ஒரு யுகம் போதாது..

- ரசிகுணா

வயிற்றில் சுமந்து
வலிகள் தாங்குவாள்
நிகரில்லா அன்பால்
என்றும் மிளிர்வாள்

- நழீம் ஹனீபா இலங்கை

மழைவிட்டும் இன்னும்
தூவானம் விடவில்லை
வன்புணர்வு வெறியர்
வக்கிரங்கள் தொடராக

- வாசன் சாவி

எத்தனை தள்ளினாலும்
மீண்டும் இணையும்
பிரபஞ்ச ஆற்றலில்
சுற்றும் துகள்கள்

- அன்புச்செல்வி சுப்புராஜ்

ஏகாந்தத்தின் முடிச்சுக்களை
அழகாக பிரதிபலிக்கிறது
தீட்டிய வரைவுகளாய்
தூரிகை ஓவியங்கள்!

- க.சோமசுந்தரி

வைக்கோலைக்கூட கயிராக்க
தெரிந்து வைத்திருக்கிறான் மனிதன்..
மனசை மட்டுந்தான்
பயன்படுத்தத் தெரியவில்லை.

- செல்வா ஆறுமுகம்

உடல் வியர்க்க
உதவும் நடையே
உணர்ந்தால் மட்டுமே
உன்னதம் வாழ்விலே

- மதுரை குமரன்

நம் குடைக்குள் தானே
மழை பொழிந்தது.
ஊருக்குள் ஏனடி
இடி இடிக்கிறது..?

- ஜென்ஸி

பாரம் அறியாது
வார்த்தைகளை வீசுகிறாய்.
கண்களின் ஓரம்
கசிகிறது ஈரம்.

- அய்ஷத்அப்சத்

நிபந்தனையின்றி நாங்கள்
இணைந்து கொள்வோம்
இணைத்திடுங்கள் தாமதமின்றி
ஏங்கும் இந்திய நதிகள்

. கா.ந. கல்யாணசுந்தரம்

# தடம் பதிக்கும் தன்முனைக்கவிதைகள்

தொகுப்பு : கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

# தமிழ்நெஞ்சம் அகவை ஐம்பது

சிந்தனையின் பெட்டகமாம்;
சீர்களுக்கு இல்லறமாம்;
கொந்தளிக்கும் கற்பனைக்குக்
கொட்டகையாம்; - செந்தமிழின்
சொல்லெல்லாம் நாளும்
சுமக்கும் தமிழ்நெஞ்சம்
எல்லாமும் ஆமென்று
இயம்பு.

ஆசு கவிகளையும்
அந்தோ புலவரையும்
பேசு கவியாக்கிப்
பின்னிற்கும் - பூசுகின்ற
வானவில்லின் வண்ணம்
வளர்க்கும் தமிழ்நெஞ்சம்
கானவில்லாம் என்றே
கணி.

கட்டுரையில் காற்று;
கவிதைகளில் காட்டாறு;
கட்டுகின்ற பாட்டில்
கனல்பொறியாம்; - எட்டெடுக்கும்
செய்திகளில் பூமி;
சிறுகுறிப்பில் ஆகாயம்
கொய்யாத மிழ்நெஞ்சம்
கோன்.

நூலைத் திறந்தால்
நுகர மலர்மணத்தைச்
சோலைக் கடன்கேட்டுச்
சொக்கிநிற்கும் - மாலைச்
சரங்கோத்து நிற்கின்ற
சான்றாக நல்ல
வரம்பெற்ற செந்தமிழின்
வார்ப்பு.

பாட்டாக ஓடிவரும்
பாலாறு; வாசித்தால்
ஏட்டோடு பூக்கும்
எழிற்பூக்கள்; - காட்டோ(டு)
அஃறிணையைப் போல்வாழும்
அந்தத் தமிழ்நெஞ்சம்
எஃகனைய தேன்றே
இயம்பு.

எண்ணம் சுமக்கும்
எழிற்சந்தப் பாடல்கொள்
வண்ணம் சுமக்கும்
வரிசுமக்கும் - உண்ணுகிற
சோற்றைபோல் வாசகர்க்கு
சொல்லாற் பசிபோக்கி
நாற்றைபோல் நிற்கும்
நயந்து.

ஆண்டைம்பது ஆகி
அழகுத் தமிழ்நெஞ்சம்
ஈண்டுலகில் பொற்றமிழை
ஏந்திநிற்க - யாண்டு
மனதாற வாழ்த்தி
மகிழ்கின்றேன் நம்முள்
இனத்தாகம் தீர்க்கட்டும்
இஃது.

இன்னும் வளர்க;
இகத்தே புகழ்பெறுக;
மன்னு புகழ்நிலைக்க
மாண்புறுக ; - கன்னல்
அமிழ்தாய்ச் சுவையூட்டி
அத்தனையையும் கண்டு
தமிழ்நெஞ்சம் வாழ்க
தனித்து.

ஏடி வரதராசன்

# சமுத்திரம்

நீ,
நீலவானத்துடன்
தொட்டுக்கொண்டு நீண்ட
தொடர்பில் இருக்கிறாய்
என்றுதான் நினைத்திருந்தேன் ...

அரசியல்வாதியும் கொள்கையும்
போலவும் ,
ஆட்சியாளரும் வாக்குறுதியும்
போலவும் ,
தொடர்பற்றே வாழுகிறாய் ...

உன்னை
நாடி வரும் எங்களை
அலைமகளின் கரம்கொண்டு
கொஞ்சி மகிழ்ந்து
வருடிச் செல்கிறாய் ...

காலடியில் கரையும் மணல்போல
எங்கள் கவலைகள் கரைய
வழி சொல்வாயா ...

அமைதியாக கரைத்தொட்டு
உள்ளம் கொள்ளை கொள்கிறாய் ...
ஆர்ப்பரித்துச் சுனாமியாகி
உயிரை கொள்ளை `கொல்கிறாய்'..

எத்தனை எரிமலை உனக்குள்ளே
எண்ணிலடங்கா திமிங்கிலங்கள்
அத்தனையும்
அடிவயிற்றில் அடக்கிக்கொண்டு
அறியா பிள்ளையாய் நடிக்கிறாய் ...

உப்பை மட்டும் உனக்குள்ளே
தக்க வைத்துக்கொண்டு
உவர்ப்பில்லா நீரை
மேகத்திற்கு கொடுத்து
தாகம் தீர்க்கும் தண்ணீரை
தரைக்கு அனுப்பி எங்கள்
சோகம் தீர்க்கின்றாய் ....

அதிகாலை முதலாக
அன்றிரவு வரையிலும்
படுகின்ற அல்லல்கள்
பட்டியலிட முடியாது
எத்தனை சோகம்
எத்தனை கவலை ....

அத்தனையும் தனக்குள்ளே
மொத்தமாய் கொண்டபோதும்
மேலுக்கு சிரித்து
உள்ளுக்குள் கரையும்
ஒவ்வொரு மனிதரும்
ஒரு சமுத்திரமாக
ஓட்டுகின்றார் வாழ்க்கையினை ...

**இர. தர்மாம்பாள்**

## விடியலே ! நீ விட்டில் பூச்சியாய் ஏன் ?



தென்றலே ! தேடித் தேடி
திசை தெரியாமல் தி ரிகின்றாய்!
முழு நிலவே நீ ஏன்
சுடுநிலா வாகின்றாய்!
கன்னித்தன்மை அறியாத
கற்பூரப் பெட்டகமே !
ஏன் காத்திருக்கத் தெரியாமல்
காற்றாய் சுழல்கின்றாய்!
வாழ்க்கை வாழத்தானே!
வாழ்ந்து பார்த்தால்தானே தெரியும்!
வாழ்க்கையின் சுவாரசியம் !
பார்த்த முதல் நாளே பாராமல்
போகும் பாரா முகத்தானை ஏன்
தேடி அலைகின்றாய்!
விடியாத உலகத்தை
நினைத்துப் பார்க்காத
பார்த்தன பார்த்து பார்த்து
ஏன் பழி ஆகின்றாய்!
சொல்ல முடியாத
சோகங்கள் இருந்தும்
சுகமான சுமை என்றாயே!
எண்ண முடியாத
எண்ணங்கள் நிறைந்த வாழ்க்கை
வாழ வழி தேடினாய்!
உன்னை உடைந்த நிலவாய் தான்
பார்க்கிறான் சூரியன்!
உலகை ஆளும் பெண்ணாகப்
பார்க்கவில்லை- நீயோ அவன்
உன் உள்ளத்தை அள்ளும்
உவமையாக பார்க்கிறான் என்கிறாய் -
பாதை மாறி போற பெண்ணே!
நீ விட்டில் பூச்சியாய் ஏன்?
தானே சென்று விளக்கில்
விழுகின்றாய் - அது மாய விளக்கு
மயக்கும் விளக்கு மாட்டிக்காதே!
விடியலே நீ!
விட்டில் பூச்சியாய் இராதே-
நீ வீணை மீட்டும் விண்ணதிரத்
தென்றலாய் இரு!

**ரா.மாணிக்கவல்லி**
நாமக்கல், தமிழ்நாடு.



அந்தாதிக் கவிதை
## வகுப்பறை

**வகுப்பறைகள் அழகுறுமே**
**ஆசானின் போதனையில்**

**போதனையின் வேதத்திலே**
**வென்றிடுவார் மாணாக்கர்**

**மாணாக்கர் வாழ்வினிலே**
**மலர்ந்திடுமே ஞானம்**

**ஞானத்தின் சோதியிலே**
**அகன்றிடுமே அறியாமை**

**அறியாமை நீங்கையிலே**
**உதயமாகுமே புதுசரித்திரம்**

**புதுசரித்திரங்கள் வளர்க்கவே**
**பாடுபடுமே வகுப்பறைகள்**

**ஜலீலா முஸம்மில்**
**ஏறாவூர், இலங்கை**

# மூப்பிற்கு இடங்கொடேல்

**முனைவர் ப. கற்பகராமன்**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம் - 05

மூப்பு என்பது வயதில் தோன்றுவது இல்லை. வயது என்பது வெறும் எண்கள் மட்டுமே. மனம் தூய்மையாகவும் இளமையாகவும் இருக்குமே யானால் இறுதி வரை மூப்பு என்பது நம்மை நெருங்காது. மனம் தூய்மையாக இல்லையெனில் இளமையி லும் மூப்பு வந்துவிடும்.

மூப்பு என்பது நம்மை வந்தடையும் செயல் அல்ல. நாமே தேடிச் சென்று பெற்றுக் கொள்வதே. நாம் வாழும் வாழ்க்கை உறுதியற்றது.உடலைவிட்டுஉயிர்எப்பொழுது வேண்டுமானாலும் வெளி யேறலாம். நம்மைச் சார்ந்தவா;களின் மரணத்தை நாள்தோறும் கடக்கும்போது இதனை நாம் உணர்கின்றோம்.

நிலையற்ற வாழ்வில் இம்மரணம் இன்னும் நம்மை வந்தடையவில்லை என்றால், இந்த இயற்கை, இறைமை இன்னும் நம்மை உயிரோடு வைத்திருக் கின்றது என்றால், நாம் செய்து முடிக்கவேண்டிய பணி இன்னும் உள்ளதுஎன்பதைநாம்நன்குஉணர்ந்துகொள்ள வேண்டும். நாம் செய்ய வேண்டிய, நம்மால் மட்டுமே செய்துமுடிக்கப்பட வேண்டிய பணி முழுமையாக நிறைவடைந்த அடுத்த கணமே நாம் மரணித்துவிடுவோம் என்பதே உலக நியதி.

நமக்கான பணியை முறையாக, முழுமையாக முடிப்பதில் மட்டுமே இளமையும் முதுமையும் வெளிப்படுமே தவிர, வயதளவில் இவை வெளிப்படும் என்பது அறியாமை. குறித்த நேரத்தில் முடிக்கும்போது ஒரு பணி முழுமையாகும். குறித்த நேரத்தில் அக மகிழ்ச்சியோடு முடிக்கும்போதோ அப்பணி சிறப்படையும்.

முழுமை பெறுவது என்பது வேறு. சிறப்படைவது என்பது வேறு. முழுமை பெறுவது என்றால் அது அப்பணியைச் செய்தவரோடு முடிவது. சிறப்படைவது என்றால் பலருக்கும் அது பாடமாக அமைவது. பலர் இங்கு முழுமைபெறும் நிலையையே அடையாததன் காரணமாகத்தான் சிறப்படைவது என்பதில் எண்ணம் செலுத்தாமல் உள்ளனர்.

தனக்கான பணி என்னவென் பதையே தெரிந்து கொள்ளாமல், பிறந்து, வாழ்ந்து, மறைந்தும்விடும்ஒருசிலரைநினைத்தால்தான் மிகவும் கவலையாக உள்ளது. உடலளவில் இளமையானவர்களிடம்கூட, தங்களுக்கான பணியைச் சரியான நேரத்தில் செய்து முடிப் பதில் முதுமை வந்தடைந்து விடுகின்றது.

நமக்கான பணியைச் செய்வதில் தான் நமக்கான இடம் உறுதியாகும். அவ்விடத்தை இன்னும் நாம் அடைய வில்லை என்றால், அது நம்முடைய தவறே தவிர, சமூகத்தின் தவறல்ல.

இதன்மூலம், நாம் கடமையைச் சரியான நேரத்தில் மன மகிழ்ச்சியுடன் செய்து முடித்தால் என்றும் இளமையுடன் வாழலாம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எந் தவொரு உயிரினுடைய பிறப்பும் சாதாரணமாக அமைவதில்லை. ஆனால் பிறந்தபிறகு நாம் வாழும் வாழ்விலோ, முற்றிலும் மாறுபாடு அமைந்துள்ளது. கடமையை உணராமலிருப்பது, முழுமை யற்ற முறையில் செய்வது, உரிய நேரத்தில் முடிக்காமலிருப்பது என்று, இளமையிலேயே முதுமைக்கு இடம் கொடுத்து விடுகின்றோம். இந்த நிலையை மாற்றிக்கொண்டால் மட்டுமே மதிக்கப் படுவோம். இல்லையென்றால் ஒவ்வொரு நிலையிலும் மறைக் கப்பட்டு மறைக்கப்பட்டு இறுதியில் முற்றிலும் மறைந்தே விடுவோம்.

பிறக்காமலிருந்திருக்க வேண்டும், என்ன செய்வது, பிறந்துவிட்டோம். இனி இறக்காமலும் இருக்க முடியாது. இதற்கிடையில் நமக்கான பணியை மன மகிழ்ச்சியுடன் சிறப்பாகச் செய்து, முதுமைக்கு இடம் கொடுக்காமல், இளமையுடன் வாழ்ந்து, மறைந்த பிறகும் பலருக்கும் பாடமாகும்படி வாழ்வியலை அமைத்துக் கொள்வதே வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறையாகும். இத்தகைய வாழ்வியலே நம்மை வானுறையும் தெய்வத்துள் வைத்துப் போற்ற வழி வகுக்கும்.

# நன்றி மறப்பது நன்றன்று !

## முனைவர் ஓசூர் மணிமேகலை

"முகிலன்... இன்னிக்கு பள்ளியில என்ன நடந்துச்சு..'' வழக்கம்போல் அம்மா கேட்டாள். ஆனால் அதற்கு பதில் சொல்லாமல் 'உம்' மென்று இருந்தான் முகிலன்.

"கேக்கிறேன்ல... என்னாச்சு..." அம்மா மீண்டும் கேட்க, தயங்கித் தயங்கிச் சொல்ல ஆரம்பித்தான் முகிலன்.

"ஒருவாரம் லீவு போட்டிருந்த செழியன் இன்னிக்குத்தான் ஸ்கூலுக்கு வந்தான். அவனைப் பாத்தாலே எனக்கு கோவம் வருது. போனவாரம் எப்படி என் சட்டையைப் பிடிச்சு இழுத்து சண்டை போட்டான். அதை நெனச்சாலே எனக்கு ஆத்திரமா வருது...'

கோபத்துடன் பேசும் மகனைப் பார்த்து "நீ என்ன செஞ்ச..?" என்று கேட்டாள் அம்மா.

"இன்னிக்குஅவனுக்குஎன்பக்கத்துல இடம் விட மாட்டேன்னு சொல்லிட்டேன். இனிமே அவன் கூட நான் பேசமாட்டேன். நின்னு நின்னு பாத்துட்டு கடைசி பெஞ்சுல போய் உக்கார்ந்துட்டான்...".

உதட்டைச் சுழித்துக் கேலியாகப் பேசிய மகனைக் கண்டு கவலைப்பட்டாள் அம்மா.

"முகிலன் நீ செஞ்சது ரொம்பத் தப்பு... போன மாசம் பரிட்சையப்போ நீ பேனாவை மறந்து வீட்டுல வச்சிட்டுப் போயிட்ட... என்ன செய்யிறது.. ஆசிரியர் கிட்டே எப்படி சொல்லுறதுன்னு நீ பயந்து கிட்டு இருந்தப்போ.. தான் கொண்டு வந்த இன்னொரு பேனாவை உன்கிட்டக் குடுத்து செழியன் எழுதச்சொன்னான் அதை நீ மறந்துட்டியா...'

அம்மாவை மெல்ல நிமிர்ந்து பார்த்தான் முகிலன்.

"அன்னிக்கு அவன் உதவுனதால தான் நீ நல்லா எழுதி முதல் மதிப்பெண் வாங்க முடிஞ்சது. அவன் செஞ்ச உதவிய மறந்துட்டு போட்ட சண்டைய நெனச்சுக்கிட்டு பழி வாங்குறியே... இது தப்புனு உனக்குத் தெரியலையா..."

அவன் கையைப் பிடித்துக் கொண்டு, "நீ திருக்குறள் படிக்கிறியே. அதெல்லாம் பாடம்னு மட்டும்னு நெனக்காத.நாம வாழ்க்கையிலேயும் கடைப் பிடிக்கணும்னு தான் பெரியவங்க எழுதி வச்சுட்டுப் போயிருக்காங்க..வள்ளுவர் சொன்ன அந்த குறள் ஞாபகம் இருக்கா.." என்று மகனின் முகத்தை நிமிர்த்தினாள் அம்மா.

உதட்டை இறுக்கமாக வைத்துக் கொண்டு தெரியுமென்று தலையாட்டினான் முகிலன்.

"எங்கே.. சொல்லு பார்க்கலாம்.. நன்றி மறப்பது..." என்று ஆரம்பித்துக் கொடுத்தாள் அம்மா.

தன் தவறை உணர்ந்து அம்மா கூறிய தன் உண்மையைப் புரிந்து கொண்டு,

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

என்றுசொல்லிவிட்டு அம்மாவைக் கட்டிக் கொண்டான் முகிலன்.

"நாளை செழியனை உன் பக்கம் உட்காரவைத்து நட்பாகப் பேச வேண்டும்.. சரியா... என்று முகிலனின் தலையைக் கோதிச் சிரித்தாள் அம்மா.

முகிலனும் சிரித்துக் கொண்டே தலையாட்டினான்.



ஓவியம் : ரஜினிகாந்தன்

# நம்புயெனை நாயகியே!



கலகலன்னு குலுங்குதடி கண்ணாடி வளையல்
கதம்பப்பூ குலுங்குதடி உன்னோடு தலையில்
தளும்புந் தேனிருக்கு தண்ணுறைந்த இதழில்
தராத கனியிரண்டு தனையொளித்த நிலையில்!

படாத பாடுமடி பாவையுனைக் கண்டு
படுத்தித்தான் வைக்குதடி பருவப் பூச்செண்டு
தொடாத நீயெனக்கு தொட்டுவிடும் தூரம்
தொடநினைக்கும் போதெல்லாம் தொடங்குதடி ஈரம்!

பாடாத பாட்டுவுனை பாடிடநான் வேண்டும்
பாடப்பாட பல்லவிநீ பாடச்சொல்வாய் மீண்டும்
ஈடாகா இன்பநிலை இருவருக்கும் தோன்றும்
ஈற்றறியா இந்தச்சுவை எல்லைதனைத் தாண்டும்!

காலமெலாம் கைச்சிறையில் கன்னிமயில் நெளிவாய்
காவலனாய் நானிருப்பேன் காதலுள வலுவாய்
ஞாலத்தில் நாம்தானே ஞாயிறெழில் திங்கள்
நம்புயெனை நாயகியே நாமும்வைப்போம் பொங்கல்!

- பொன்மணிதாசன்

## அன்பெனும் நாடகமேடை

கண்களில் ஏன்
வற்றாத நீரோடை என்கிறாய்
அதைக் கருணையின்றி நீ
வீசிச் சென்ற
வார்த்தைகளிடம் கேள்

கன்னங்களில் ஏன்
சிறு சுருக்கங்கள் என்கிறாய்
அதைக் கணநொடியில் நீ
அறுத்துப்போன உறவு
நாளங்களிடம் கேள்



காதோரம் ஏன்
இத்தனை நரைமுடி என்கிறாய்
அதைக் கால அவகாசமின்றி நீ
கசக்கியெறிந்து போன
இதயத்திடம் கேள்

இத்தனை மாறுதல்களும் உன்னால்
இரக்கமின்றி நடத்தப்பட்ட
நிகழ்வுகளின் பிரதிபலிப்பே யன்றி
வேறென்னவாக இருக்கமுடியும்

மறுபடியும் எனைத்தேடி நீ வருகையில்
மலர்கள் உனை வரவேற்கும்
மறுக்காமல் தூவிச்செல் என்
மரணமும் உனைப்பொறுத்தவரை ஒரு
நாடகமேடையே...

தனா சர்மா
ஈழம்.

# மரணித்த சூரியன்



பலகோடி யுகங்களின் முன்
படைத்திட்டானிறைவனதைப்
பகலவனென்றொளி வழங்க
இருளாட்சி செய்திட்ட
இருண்டதொரு அண்டவெளி
திடிரென்று ஓர் நாள்
தீப்பிளம்பால் ஒளியாகிச்
சுடர் பரப்பும் சூரியனைச்
சுற்றிப் பல கோள்கள்
கொடை வள்ளல்தனை நாடிக்
கூடிவரும் மாந்தரைப் போல்
உறவுமுறை பேணி
உலாவருதல் தொடங்கியது

சூரியக் குடும்பமெனச்
சூட்டியதோர் பெயர்க்கொப்ப
கொரோனா காலத்துக்
குடும்பமெனக் கோளனைத்தும்
ஒன்றையொன்று தொட்டுவிடா
ஒழுங்கசைவு தவறாது
அண்டவெளி தன்னில்
அண்டி நின்ற கோள்களெல்லாம்
பிணைப்பின் சுழல் வட்டப்
பிரிவினைகளல்லாது
ஒற்றுமையாய்ச் சுற்றி
உயிர் வாழக் காரணமாய்
எண்ணில்லாக் கோடியுகம்
எழிலரசாய்த் திகழ்ந்தவனே

உலகமது உயிர் வாழ
உறுதுணையாய் ஆனதினால்
கடவுளெனச் சில மாந்தர்
கைதொழுது பூசை செய்தும்
இறப்பென்பதனைவருக்கும்
இயல்பான தென்பதனை
உண்மையெனக் காட்டி
உயிர்துறந்து கரியானான்

படைப்புற்ற கால முதல்
பற்றியெரிந்திட்ட
பகலவனும் ஓர் நாள்
சூடடங்கியொளியிழந்து
சோர்ந்து கரித்துகளாய்க்
காலாவதியாகிக்
கதை முடிந்து போனகதை
விஞ்ஞானக் கற்பனைக்கும்
விளங்காதவோர் புதிராய்
உருவான நாள்தொட்டு
உயர் வெப்பச் சுவாலையுடன்
ஒரு கணமும் ஓய்வின்றி
ஓங்கியெரிந்திட்ட

ஓங்கார சக்தியெனும்
ஓய்வில்லாத் தீக்கடலாம்
சூரியனும் ஓர் நாள்
சுடரிழந்து அணைந்ததனால்
அண்டவெளி யெங்கினுமே
அதிக இருள் மூடியது

அரசனென நடுவிருந்து
அனைத்தையுமே காத்தவனோ
கரிக்கட்டியாகி உடல்
கரைந்தழிந்து போனதனால்
ஈர்ப்பு விசையென்ற
இணையில்லாச் சக்தியது
இல்லாமல் போனதனால்
இருந்தபிடி அற்று விடக்
கோள்களெல்லாம் திசைமாறிக்
கோபமுற்ற பிள்ளைகள் போல்
ஆளுக்கொரு திசையில்
அலைக்கழிந்து சென்றதனால்
சூரியக் குடும்பமெனச்
சூடியபேர் மறைந்து
அந்தகார இருளுக்குள்
அடியழிந்து மறைந்ததுவே

உயிரினங்கள் வாழ்ந்த
உலகமெனும் கோளதுவும்
பாதைதனையறியாப்
பயணிக்கும் வேளையிலே
இறுக்கமாயுலகத்தை
இணைத்து வைத்த ஈர்ப்புவிசை
இல்லாமல் போனதனால்
உலகமே வாழத்தினம்
உயிர்கொடுத்த உயிர்வாயு
உலகைவிட்டு விடைபெற்று
உடனே அகன்று விட
உயிரனைத்தும் சிலகணத்தில்
உயிரிழந்து மாண்டதுவே

என்ன நடந்ததுவோ
ஏதுவினை வந்ததுவோ
என்று கதறி மக்கள்
அவரவர்கள் மத வழியில்
ஆண்டவனை வேண்டிப்பலர்
அழுது கதறிடினும்
ஏனிறந்தோம் என்றவொரு
காரணமுமறியாமல்
கண் மூடித் திறப்பதற்குள்
கதைமுடிந்து உயிர்துறந்தார்

மூன்றிலிரு பங்காய் உலகை
மூடிநின்ற நீர்முழுதும்

வன் குளிரின் தாக்கத்தால்
வகை தெரியாதிறுகியது
புவிக்கோளாயிருந்த வையம்
பனிக்கோளாய் மாறியது
பலகோடி வருடங்கள்
உயிரோடிருந்த புவி
அனைத்துமழிந்து பெரு
அகிலமதே சுடுகாடாய்
அலைமோதிப் போகிறது

பாதையறியாது
பயணித்த உலகமது
ஆறுலட்சம் ஒளியாண்டின்
அதிவிரைவுப் பயணிப்பால்
இன்னுமொரு சூரியனின்
இணைசேரல் கிட்டியது
பாரியதோர் சூரியனின்
பவனிவரும் குடும்பமதில்
தானும் உள்நுழைந்து
தந்திரமாய் இடம்பிடித்து
வெப்பத்தை உள்வாங்கி
விரைந்து சுழன்றதனால்
பலகாலப் பனியுருகிப்
பழையபடி கடலாகி
அல்காக்கள் உயிர்பெற்று
அதிவிரைவாய் உருவாகி
மீண்டுமொரு உலகத்தின்
மீள் எழுச்சி தொடங்கியது.

- ஏறூர்க்கவிக்கோ
**ஏ.ஸீ.அப்துல் றகுமான்**

கவிஞர்களின் கற்பனையென்பது கடல் போன்றது அதில் எந்த விடயமும் விலகிச் செல்ல முடியாது என்பதற்கிணங்க ஏறூர்க்கவிக்கோ ஏ.ஸீ.அப்துல் றகுமான் அவர்களது கற்பனையில் உதித்த இந்தக் கவிதை வெறுமனே ஒரு கற்பனை கவிதையென்பதற்கும் அப்பால் இப்படியும் எதிர்காலத்தில் நிகழலாம் என்ற ரீதியில் விஞ்ஞான ஆய்வுக்கான ஒரு அடித்தளமாக இக்கவிதை யமைந்துள்ளது.

சமகாலத்தில் இது ஒரு வித்தியாசமான கற்பனையில் உருவான ஆய்வியல் படைப்பு

# சென்றியு



●
புயல் சீற்றம்
எந்தப் பாதிப்பும் இல்லை
மேல்தட்டு வாசிகள்

●
போராளிகள் தியாகம்
ரசிக்க அழகாய் இல்லை
அரசியல் வேடங்கள்

●
பசியோடு மக்கள்
குடிசைகளின் கனவுகளில் மண்
புதுப் பாராளுமன்றம்

●
வெளிநாட்டுப் பயணம்
அவ்வளவு தூரம் இனிக்கவில்லை
உடை களையும் சோதனை

●
நீட் தேர்வு
அரசியலில் பகடைக் காயாய்
மருத்துவ எதிர்காலம்

●
மின்னஞ்சல் உபயோகம்
அடையாளம் இன்றி மூலையில்
தபால்-தந்தி சேவை

●
இலவசப் பயணம்
உச்ச கட்ட கோபத்தில்
உழைக்கும் வர்க்கம்

●
தேர்தல் வெற்றி
இருந்த இடமின்றி காணாமல்
பழைய ஊழல்கள்

●
புதிய அரசு
பெரிதாய் யாதொரு மாற்றமுமின்றி

●
நடைபாதை வாழ்வு சுவற்றில் பெரியார்
சுய மரியாதையோடு வாழ்கிறது
சுதந்திரத் தியாகம்

- ராஜூ ஆரோக்கியசாமி
திருச்சி, தமிழ்நாடு, இந்தியா.

|தொகுப்பாசிரியர்கள் | |இரா. தமிழரசி|










## இமயம் தொடும் இயைபுகள்

ஆய்வுரை

**முனைவர் இரா. தமிழரசி**

# நாளைய விடியலுக்கான நம்பிக்கை

சங்க இலக்கியத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்களின் பாடல்கள் இடம்பெற்றிருக்க, நீதி இலக்கியக் காலத்தில் பெயர் சொல்லக்கூட ஒருவரும் இல்லை. அதன் பின்னர் வந்த பக்தி இலக்கிய காலத்தில் சைவ, வைணவ சமயத்திற்கு ஒவ்வொருவர் எனச் சுட்டிக்காட்டுமாறு காரைக்கால் அம்மையாரும், ஆண்டாள் நாச்சியாரும் விளங்கினர்.

இவ்விருவருக்குப்பின் இருபதாம் நூற்றாண்டில்தான் மீண்டும் பெண் படைப்பாளர்களைக் காணமுடிகிறது. 1970-க்குப் பின்னர் விரல்விட்டு எண்ணுமாறு படைப்பு வெளியில் களமிறங்கிய பெண்கள் 2000-க்குப் பின் புத்தம்புதிய வடிவங்களிலும் பீடுநடை போடுகின்றனர்.

அந்தவகையில் தமிழில் பெண் கவிஞர்களின் புதுக்கவிதைத் தொகுப்புகள், ஐக்கூ தொகுப்புகள் போன்றவை ஏற்கனவே வெளிவந்துள்ளன. தற்போது வெளிவர உள்ள 'இமயம் தொடும் இயைபுகள்' என்னும் இந்நூல், முழுக்க முழுக்கப் பெண் படைப்பாளர்களின் படைப்பைத் தாங்கிவருவதும், இயைபுத் துளிப்பா எனும் 'லிமரைக்கூ' வடிவக் கவிதைகளாலான முதல் நூலாக இருப்பதும் கூடுதல் சிறப்பாகும்.

எண்வகைத் தொடைகளில் இயைபுத்தொடை என்பது பாடலின் இறுதிச்சீர் அனைத்தும் ஒன்றிவரத் தொடுப்பது. ஆனால் மூன்றடி கொண்ட 'லிமரைக்கூ' வடிவத்தில், முதல் அடியின் இறுதிச்சீரும் மூன்றாம் அடியின் இறுதிச்சீரும் ஒத்துவருமாறு அமைப்பதே இதன் இலக்கணம். இவ்விலக்கணம் சிதையாமல் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

பெண்களின் கவிதைகள் சுய புலம்பல்களாகவே இருக்கும் எனும் பொதுப்புத்தியைக் கடந்து, சூழலியம். அரசியல், அறிவியல், சமூகச் சிக்கல்கள் என விரிந்து பயணிக்கும் பெண்களின் படைப்புகள் நாளைய விடியலுக்கான நம்பிக்கையைத் தருவதாகவே அமைகிறது. பல்வேறு நாடுகளிலிருந்தும் தம் கவிதைகள் வழி இணையும் அனைத்துக் கவிஞர்களுக்கும், அவர்களின் கவிப்பூக்களை மாலையாகத் தொடுத்திருக்கும் தோழர் கன்னிக்கோவில் ராஜா, தோழி அன்புச்செல்வி சுப்புராஜு ஆகியோருக்கும் என் நெஞ்சம்நிறை வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் உரித்தாக்குகிறேன்.

இன்றைய அறிவியலின் அசுர வளர்ச்சியால் நம் வாழ்க்கையின் வசதிகள் பெருகியிருப்பினும், இயற்கையின் வளமையிழப்பை, பல்வேறு உயிரினங்களின் அழிவைச் சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறோம் என்பதை,

“அலைபேசி கோபுரத்தில் மிச்சம்
காயாமல் நனைந்தபடியே இருக்கிறது
சிட்டுக் குருவிகளின் எச்சம்”

என்னும் அமல ஜெயந்தியின் கவிதை காட்சிப்படுத்துகிறது. சாலை விரிவாக்கம் தொழில்துறைப் பெருக்கம், அடுக்குமாடி குடியிருப்புகள் போன்றவற்றிற்காக மரங்கள் வெட்டப்படுவதும், நீர்நிலைகள் தூர்க்கப்படுவதும், விளைநிலங்கள் வீட்டு மனைகளாவதும் தொடர்ந்து நிகழ்கின்றன. ஆண்டுதோறும் புவியின் வெப்பநிலை உயர்ந்துகொண்டே செல்கிறது. இதனால் ஏற்படும் சூழல் சீர்கேட்டை,

“வெட்டவெளி பொட்டல் காடு
கருகிய மரத்துக் கிளையில் அமைந்தது
பச்சை கிளியின் கூடு”

எனும் ஆனந்தியின் கவிதை சுட்டிக்காட்டுகிறது. காலப்போக்கில் பட்டாம்பூச்சிகளை, சிட்டுக்குருவிகளை, தும்பிகளை நம் வருங்காலச் சந்ததியினர் ஏட்டிலும், இணைய காட்சிப் பதிவுகளிலும்தான் காணமுடியும் போலும். இதனை,

“பறவையின் ஒலியோடு அலைபேசி
கொட்டிய அரிசியைத் தேடும் குருவியை
நினைவில் சுமக்கிறான் மலைவாசி”

என்கிறார் கவிஞர் ஜெயஸ்ரீ. அலைபேசியின் அழைப்போசையில் பறவையின் குரலைப் பதிவுசெய்து வைத்துக்கொண்டு, அலைபேசிக் கோபுரங்களின் கதிர்வீச்சால் அழிந்து போன குருவியை மனதில் சுமந்து வாழநேரும் மலைவாசியின் துயரத்தைக் காட்சிப்படுத்தும் அருமையான இசையொழுங்கு அமைந்த கவிதை இது.

பல்வேறு வாக்குறுதிகளை அள்ளிக்கொடுப்பதோடு, தேர்தல் பரப்புரைகளின்போது கூட்டம் சேர்க்க, வெளிப்படையாகப் பிரியாணி பொட்டலங்களும், மறைமுகமாக மதுபாட்டில்களும் பணமும் கொடுத்து மக்களின் வறுமையை பயன்படுத்திக் கொள்ளும் அரசியல் இழிநிலையை இன்றைய வாக்காளர்கள் உணரத் தொடங்கியுள்ளதை,

“பிரியாணியோடு வாக்குறுதி மேடை
ஏந்திய கைகளில் வாங்கியவன் நாசி
உணர்ந்தது நரியின் வாடை”

எனும் ஜெய□ரீயின் கவிதை உறுதிப்படுத்துகிறது. பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதிப்பதும் நாமறிந்ததே. இத்தகையதொரு கருத்தமைந்த கவிதையாக,

“மணலில் கட்டிய கோட்டை
அழகாய் உயர்ந்து நின்று உணர்த்துகிறது
சிறுமியின் தன்னம்பிக்கை பாட்டை”

என நேர்முகச் சிந்தனையைக் கடத்தும் கலாராணி லோகநாதனுடைய கவிதை அருமை.

“பெண்களைக் கொண்டாடு வீட்டில்
வீணான முழக்கம் அதிரும் மேடையில்
சிசுக்கொலை நடக்கும் நாட்டில்”

எனும் கவிதையும் அவருடையதே. மேடை முழக்கங்களைத் தவிர்த்துவிட்டு அவரவர் வீட்டிலிருந்தே தொடங்குங்கள் மாற்றத்தை என அறிவுறுத்தும் பாங்கு நேர்த்தி.

புத்தரைக் கேள்விக்குள்ளாக்கும் தருணங்களில் எல்லாம் அவரின் கொள்கையால் ஈர்க்கப்பட்ட எவரேனும் ஒருவர் மல்லுக்கு நிற்பது வாடிக்கை. அப்படியான அனுபவம் எனக்கும் உண்டு. கீழ்க்காணும் கவிஞர் இரா. கவிதாவின் கவிதையை வாசிக்கும் யாரேனும் ஒருவர் அவரோடு சண்டைக்கு வர வாய்ப்புள்ளது. எதிர்கொள்ள கவிஞர் ஆயத்தமாய் இருப்பது நல்லது.

“உயர்வான புத்தரின் போதனைகள்
உலகம் வியந்து போற்றும் பின்னணியில்
மறைந்திருக்கும் யசோதரையின் வேதனைகள்”

என்பதே அக்கவிதை. உலகுக்கு ஞானம் வழங்கும் புத்தரைப் போன்ற ஆடவர்களுக்கு பின்னால் நின்று குடும்ப பாரத்தைச் சுமந்து, ஆண்களின் தளையை விடுவித்து அவர்களை போதியின்கீழ் அமைதியில் இருத்துவது யசோதரையை ஒத்த பெண்கள் அல்லவா?..இத்தகைய பெண்களின் படைப்பு தடைகள் பலவற்றைக் கடந்து பயணிக்க நேர்வதை,

“துரத்தும் கவிதை நடைகள்
துவைத்த துணியும் சமைத்த சட்டிகளும்
எதிரி நாட்டு படைகள்”

“பாரம்பரிய நெல்லாய்வுக் குறிப்பு
அவசரமாய் எழுதி முடித்து விட்டு
அடுக்களையில் துரிதவுணவு பிரிப்பு”

எனும் ராஜி வாஞ்சியின்  கவிதைகள் புலப்படுத்துகின்றன. நத்தை ஓட்டைச் சுமந்து பயணிப்பதைப்போல், எத்தகைய சவால்மிக்க பணியாயினும் பெண்கள் தம் இல்லக் கடமைகளைச் சுமந்துகொண்டுதான் இயங்க வேண்டியுள்ளது என்பதை காட்டுகின்றன.

அரசியல் கட்சிகளின் ஆதரவோடு சாலை போடும் ஒப்பந்ததாரர்கள் ஆங்காங்கே கொடுத்த கையூட்டு போக மிச்சப்பணத்தில் போடும் சாலையின் கதி எப்படி இருக்கிறது என்பதை,

“சாலை எங்கும் குழிகள்
பள்ளங்கள் தோறும் நிரம்பி வழியுது
ஊழலின் புதுவித மொழிகள்”

எனத்தாக்கும் இரா. கவிதாவின் தைரியம் பாராட்டுக்குரியது. அரசியலாளர்கள் தேர்தலில் கொடுக்கும் வாக்குறுதிகளை, அவர்கள் வெற்றி பெற்றுப் பதவியில் அமர்ந்த பின்னர் எளிதாய் மறந்துவிடுவதை அங்கதச்சுவை கெழும,

“தேர்தலில் பல்பு சின்னம்
தேர்வு ஆனதும் கொடுத்த வாக்குறுதி
பீஸ் போவது திண்ணம்”

என்கிறார் கவிதா. நல்லவேளை பல்பு சின்னத்தில் தற்போது யாரும் வெற்றி பெற்றதாய்த் தகவல் இல்லை. அப்படியே வெற்றி பெற்று சட்டம் இயற்றினாலும், அதில் உள்ள ஓட்டைகளின்வழி ஊர்ந்து செல்வதும் அவர்களாகவே இருக்கிறார்கள் என்பதை,

“வகை வகையான சட்டம்
ஊழல் பெருச்சாளி ஊர்ந்து செல்ல
போடுகிறான் பல திட்டம்”

எனச் சாடுகிறது காரை மேகலாவின் கவிதை.

சமகால வாழ்வின் நடப்பியல் துயரங்களைப் பதியும் ஆவணங்கள் படைப்பாளர்கள்தம் படைப்புகளே. அந்த வகையில்  நடப்பியல் முரண் சார்ந்த கவிதையாக

மூங்கில் கலைஞர்கள் வாழ்வில்
பின்னிப் பிணைந்த படி வறுமை
நிலையோ இன்னும் தாழ்வில்

என்னும் சமூக அக்கறை உள்ள கவிதையைப் படைத்த சாரதா க சந்தோஷ் பாராட்டுக்குரியவர்.

பெண்களின் சுயசார்புத் தன்மை ஓங்குவதும், தாழ்வதுமாய் இருக்கும் நிலையை

நிறையும் தறிகளின் சத்தம்
சாயக் கழிவுகள் இராட்டைகள் உடன்
ஆண்டிபட்டி அரசிகளின் யுத்தம்

உழைக்கும் அடிமட்ட வர்க்கப் பெண்களின் அவலநிலையை எடுத்துக் கூறுகிறது அன்புச்செல்வி சுப்புராஜுவின் கவிதை.

இன்றைய பெருந்தொற்றுச் சூழலில் சிறுவர்களும் இளைஞர்களும் பள்ளி கல்லூரிக்குச் சென்று கல்வி கற்க இயலாத சூழல் நிலவுகிறது. வீட்டுக்குள் அமர்ந்து இணையவழியில் பாடம் கேட்பது கொடுமை. மாணவர்கள் பாடம் கேட்கிறார்களா எனத் தெரியாமலேயே ஆசிரியர் பாடம் நடத்தநேர்வது அதனினும் கொடுமை. ஓடியாடி உற்சாகமாய் இருக்கவேண்டிய வயதில் ஒரே இடத்தில் நாள் முழுவதும் அமர்ந்திருப்பதால் வரும் ஆபத்தை சிவகாமசுந்தரி நாகமணி,

“அறையில் இணைய வகுப்பு
இளையருக்கு ஏறிக்கொண்டே போகிறது
இடுப்பில் சதை கொழுப்பு”

என்கிறார். சமகாலத்தைக் காட்டும் யதார்த்த பதிவாக அமைகிறது இக்கவிதை. தரமற்ற எழுத்துகள் எல்லாம் புத்தக வாகனமேறி பவனி வர, சிறந்த படைப்பாளியின் படைப்புகள் பணம் இல்லாததால் பழைய பேப்பர் வாங்குபவனிடம் தஞ்சமடைவதை,

“ஏழைக் கவிஞரின் கற்பனை
பணத்திற்காக எடை போடப் படுகிறது
பழந்தாள் கடையில் விற்பனை”

எனும் சிவகாமசுந்தரி நாகமணியின் கவிதை காட்டும் காட்சி மனத்தை நெகிழச் செய்கிறது.

மரங்களை வெட்டியதாலும், நீர்நிலைகளை ஆக்கிரமித்ததாலும், ஆற்று மணலை கொள்ளையடித்ததாலும் மனிதன் இன்றைக்கு எதிர்கொள்ளும் சிக்கல்கள் எண்ணிறந்தன. இத்தகைய சூழலியச் சீர்கேட்டை,

“சுவாசத்தில் சரிபாதி பங்கு
மரங்களை வெட்ட அவதிக்கு உள்ளானது
மனிதனின் நுரையீரல் இங்கு”
எனும் கவிதையும்,

“குடிநீருக்கு பெரும் பாடு
நீர்வளத்துறை அதிகாரி புதுமனை புகுந்தார்
ஏரி மேல் கட்டிய வீடு”
எனும் கவிதையும் தீபா சுந்தரேசனின் சமூக அக்கறையைக் காட்டுகின்றன.

“தொடரும் மணல் கொள்ளை
தொடர்ந்து பள்ளமாகும் ஆற்றுப் படுகை
என்று ஒழியுமிந்தத் தொல்லை”

எனும் மகேஸ்வரி கிருஷ்ணசாமியின் கவிதை இயல்பு குலைக்கும் மனிதனை இயற்கை மறுபடி தண்டிப்பதைக் காட்டுகிறது. தண்ணீரை விலை கொடுத்து வாங்குகிறோம். காற்றையும் ஒருநாள் விலைகொடுத்து வாங்கும் நிலை வரலாம் எனும் முன்னைய கவி கூற்றுகள் இன்றைக்கு மெய்யாகிப்போயின. விலை கொடுத்தும் கிடைக்காத உயிர்வளியால், பெருந்தொற்றிலிருந்து மீட்கமுடியாமல் எண்ணற்ற உயிர்களை இன்றைக்கு இழந்து கொண்டிருக்கிறோம். இதற்கு முதன்மையான காரணம் தலைமையிடத்திலிருந்தும் திட்டமிடலின்றி நாட்டை ஆள்வோர்தான் என்பதை,

“நாட்டை சூறையாடும் பெருச்சாளிகள்
அண்டை நாடுகளுடன் மருந்தோடு கைகுலுக்கல்
உணவின்றித் தவிக்கும் நோயாளிகள்”

எனும் தேன்மொழி கோபாலனின் கவிதை எடுத்தியம்புகிறது.

கிராமங்களை விட்டு மனிதர்கள் தேவைநிமித்தம் நகருக்கு இடம் பெயர்ந்தாலும், அவர்களின் மனம் கிராமத்து நினைவுகளை அசைபோட்டுக் கொண்டே இருப்பதையும், அந்த வாழ்க்கைக்காக ஏங்கிக்கொண்டே இருப்பதையும்,

“கிராமத்து மல்லிகை முற்றம்
நகரத்து வாழ்வில் நினைவைத் திருப்புகிறது
கூடி வாழ்ந்த சுற்றம்”

“நிசப்தமாய் மாறிய கூடுகள்
பேச்சுத் துணைக்கு யாரும் இல்லை
நகரத்து அடுக்குமாடி வீடுகள்”

எனும் நெல்லை க.சோமசுந்தரியின் கவிதைகள் காட்சிப்படுத்துகின்றன. அருகருகே வாயில்கள் இருப்பினும், எந்நேரமும் அடைத்து வைத்து அடுத்த வீட்டாரின் முகமறியாமல் உள்ளே அடங்கிக் கிடக்கிறார்கள் மனிதர்கள் என்பதுதான் எத்தனை உண்மை.

‘சுழன்றும் ஏர் பின்னது உலகம்’ என தெய்வப்புலவர் பாடி வைத்திருந்தாலும், இன்றைக்கு விவசாயிகளின் நிலை பரிதாபத்திற்கு உரியதாகவே உள்ளது என்பதை,

“எரியுது விவசாயி வயிறு
பாடு பட்டும் பலனில்லாமல் போனதால்
கழுத்தில் சுருக்கு கயிறு”

எனும் கவிஞர் பிச்சிப்பூவின் கவிதை புலப்படுகிறது. கோடிக்கணக்கில் வங்கிக்கடன் பெற்று, உரியகாலத்தில் செலுத்தாமல் அயல்நாடுகளில் தஞ்சமடைந்து உல்லாசமாய் வாழ்பவர்கள் ஒருபுறமிருக்க, ஆயிரக்கணக்கில் சட்ட கடனை அடைக்க முடியாததால் தூக்குக்கயிற்றில் தொங்கி உயிர்துறந்த ஏழை விவசாயிகள் பற்றிய செய்திகள் இந்திய நாட்டின் அவலத்தைப் பறைசாற்றுகின்றன. சூழல் மாசுற்ற டெல்லியில் கொட்டிய பனியில், பெருந்தொற்றின் அச்சமின்றி அவர்கள் போராடியக் காட்சிகள் நெஞ்சை உலுக்குவன. அதிகாரத்தில் இருப்பவர்கள் அலட்சியமாய் கடந்து சென்றும் கூட,

விடாது விதவிதமான உத்திகளோடு அன்றாடம் ஜந்தர் மந்திரில் அவர்கள் பட்ட பாடுகள் கல்நெஞ்சம் கொண்டோரையும் கண்ணீர்விட வைப்பவை.

இரசாயன உரங்களின் பயன்பாட்டால் உணவு நஞ்சாவதையும், இயற்கை உரங்களைப் பயன்படுத்தி நாம் பழமைக்கு திரும்ப வேண்டியதன் அவசியத்தையும் சுட்டுவதாய்,

"மா மரத்தின் பிஞ்சு
மருந்து இட்டுப் பழுக்கச் செய்தால்
இரசாயனம் கலந்த நஞ்சு"

எனும் மணிக்கூ கவி நஸீரா ஆப்தீன் கவிதை அமைந்துள்ளது. இயற்கையைப் பேணவேண்டுவதன் இன்றியமையாமையை,

"இயற்கையின் கொடை காடு
வளங்களைச் சுரண்டி வேட்டை ஆடினால்
வருமே சூழல் கேடு"

"விளை நிலங்களில் மனைகள்
விவசாயத்தை மறந்து பஞ்சம் வர
நமக்கே வைக்கும் வினைகள்"

எனும் கவிஞர் மதுராவின் கவிதைகள் எச்சரிக்கை மணிகளாய் ஒலித்து மனித சமுதாயத்திற்கு விழிப்புணர்வூட்டுகின்றன.

சமூகத்தின் குறைகளைச் சுட்டுவதாக மட்டும் அமையாமல் சிக்கல்களைத் தீர்க்க உதவும் தீர்வுகளைச் சொல்வதாகவும் ஒரு படைப்பு அமைய வேண்டும். அத்தகைதொரு சிறப்பான தீர்வைச் சொல்வதாக,

"உடல் உறுப்பு தானம்
நாட்டத்துடன் யாவரும் செய்திட்டால் நீங்கும்
புவியின் பாதி ஊனம்"

எனும் மு.ராஜிலா ரிஜ்வாவின் கவிதை அமைகிறது. மேலும் சட்டத்தாலும் தடுக்கவியலாத, வயிற்றுப்பாட்டுக்கு வாடும் குழந்தைத் தொழிலாளர்களின் நிலையை அவரின்,

"சின்னச் சின்ன வெடி
பகலெல்லாம் சுற்றிய பிஞ்சுகளின் தூக்கத்திலும்
தொடர்வது பட்டாசு நெடி"

எனும் கவிதை காட்டுகிறது. பெரும் முதலாளிகளிடம் வாய் திறவாமல் கேட்ட தொகையைச் செலுத்திவிட்டுப் பொருளை வாங்கும் நாம்தான், நடைபாதை வணிகர்களிடமும், வீடு தேடி வரும் விற்பனையாளர்களிடம் பேரம் பேசுகிறோம். இத்தகைய தவறைத் திருத்திக்கொள்ளும் பயிற்றுதலாக,

“காட்சிப் பெட்டகத்தில் செருப்பு
பேரம் பேசாமல் வாங்கினேன் நடைபாதை
வியாபாரியிடம் துவரம் பருப்பு”

எனும் ரீனா ஜெயா கவிதை அமைகிறது. தெய்வங்களுக்கு வழிபாடுகளும், படையல்களும், வேள்விகளும் நம்பிக்கையோடு நாள்தோறும் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. ஆயினும் ஒரு சிறுமியைப் பாலியல் வன்புணர்வில் இருந்து காக்க காக்க தவறிவிட்ட அவர் என்ன கடவுள். இத்தகு கொடுமைகளுக்கு இடையில் இறையுணர்வை குழந்தைகள் மனதில் ஊட்டுவது எங்ஙனம் எனும் கேள்வி எழுகிறது.

“கோவிலில் நடக்கிறது வேள்வி
பதில் சொல்ல முடியாமல் தவிக்கிறேன்
மகள் கேட்கும் கேள்வி”

எனும் ரேணுகா ஸ்டாலின் கவிதை பன்முகப் பரிமாணம் கொண்டது.

நத்தை ஓட்டைச் சுமந்து பயணிப்பதைப் போல், எத்தகைய சவால் மிக்கப் பணியாயினும் பெண்கள் தம் இல்லக் கடமைகளைச் சுமந்தகொண்டுதான் இயங்கவேண்டியுள்ளது என்பதைக் காட்டுகின்றன கவிதைகள். பெண் படைப்பாளர்களிடம் தாய்மைப் பண்போடுகூடிய குழந்தைகள் பற்றிய பதிவுகளைப் பரவலாகக் காணமுடிகிறது. சுவரின் கிறுக்கல்களைக் காவியமாய் இரசிக்கும் தாயின் படைப்பாய்,

“குழந்தை தீட்டிய ஓவியம்
சுவரின் கிறுக்கலாக அமைந்து போனாலும்
தாய்மைக்கு அதுதான் காவியம்”

எனும் ரங்க பார்வதியின் கவிதை அமைகிறது. பெற்றோருக்கு அடுத்த நிலையில் ஒரு குழந்தையின் வளர்ச்சியில் பெரும் அக்கறை செலுத்துபவர் ஆசிரியர். அவரின் ஆதங்கம் எல்லாம் தன் மாணவனின் உயர்ச்சியும் வளர்ச்சியும்தான் என்பதை உணர்த்துகிறது லஷ்மி கார்த்திகேயன் கவிதை.

“ஆசிரியர் எடுக்கிறார் பிரம்பு
அவர் சொல்படி கேட்பவன் அறிவான்
தனது வளர்ச்சியில் வரம்பு”

என்பதே அக்கவிதை. வாகன விபத்தில் பலியானோர் பற்றிய செய்தி இன்றிச் செய்தித்தாள்களையோ, தொலைக்காட்சி அலைவரிசைகளையோ, காட்சி ஊடகங்களையோ கடந்து பயணித்தல் இயலாது. இருந்தும் நான்குபேர், ஐந்துபேர் என வாகனத்தில் அதிவேகத்தோடு பயணிப்பவர்களை அன்றாடம் பார்த்துக்கொண்டுதான் உள்ளோம். இதனை,

“பின்விளைவு தெரிந்தும் வேகம்
கட்டுப்பாட்டை இழந்தது மோட்டார் வாகனம்
குடும்பம் கொண்டது சோகம்”

என்கிறார் வினோஷா வரதராஜன். நாம் செய்யும் பிழையைச் சுட்டிக்காட்டி எதிர்காலச் சிந்தனையோடு நாம் செய்ய வேண்டியதை வலியுறுத்துவதாய்,

“அடித்துப் பெய்யும் மழை
தூர்வாரப் படாத ஏரியும் குளமும்
நாம் செய்யும் பிழை”

என்கிறது ஜோதி சரண் கவிதை. இந்த பூமி மனிதர்களுக்கானது மட்டுமன்று அனைத்து உயிர்களுக்குமானது. வன உயிரிகளின் இருப்பிடத்தை அழித்து மனிதன் தனதாக்கிக் கொள்ளும் தருணங்களில், விலங்குகள் தமது தேவைகளின்பொருட்டு மனித வாழ்விடங்களுக்கு வர நேர்ந்தது. அப்படி வரும் உயிரினங்களை மனிதன் தாக்கி அழிக்க நினைப்பதும், விலங்குகள் எதிர்தாக்குதல் நடத்துவதும் தற்போதைய நிகழ்வுகள்.

“பெருவனம் சுமக்கும் வாரணம்
இயற்கையை மீறி நடக்கும் இறப்பிற்கு
சுயநல மனிதரே காரணம்”

எனும் கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜுவின் கவிதை சிந்தனையைத் தூண்டும் நடப்பியல் உண்மை. எங்கிருந்தோ கூவும் குயிலின் குரலினிமைபோல் கவிஞர்கள் சிலரின் கவிதைகளில் நல்ல ஓசையின்பம் அமைந்து மனத்திற்கு மகிழ்வூட்டுகிறது. உதாரணமாக நிர்மலா சிவராசசிங்கம் அவர்களின்,

“மீனவன் காதில் நித்தம்
விடாமல் கேட்டுக் கொண்டே இருக்கும்
அலைகள் மோதும் சத்தம்”

“இரவில் பெய்த மழை
அழுக்கு நீங்கி அழகாய் அசைகிறது
மரத்தில் உள்ள தழை”

எனும் இயற்கைநேயக் கவிதைகளை சான்றாகச் சொல்லலாம். இவ்வாறு பல்வேறு பொருள்களில் தம் அனுபவங்களை பதிவு செய்துள்ள பெண் படைப்பாளர்கள் பெரிதும் பாராட்டுக்குரியவர்கள். இவர்களின் கவிதைகளையெல்லாம் செப்பம் செய்து நூலாக்கம் செய்துள்ள தோழர்கள் கவிஞர் கன்னிக்கோவில் ராஜா, கவிஞர் அன்புச்செல்வி இவர்களின் முயற்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இன்னும் இன்னும் உங்களின் முயற்சியால் எண்ணற்ற கவிஞர்கள் தோற்றம் பெறுவார்கள் எனும் நம்பிக்கைக்கு அச்சாரமாய் அமையும் இந்த நூல் பலராலும் பேசப்படவேண்டும்... பேசப்படும்.

தாயில்லாச் சேயாவான்; தாரில்லாத் தோளாவான்;
காயில்லா வெண்பாக் கதியாவான்; - வாயில்
அமிழ்தூற வைக்கும் அகிலத்தின் நூலாம்
தமிழ்நெஞ்சம் கைகொள்ளா தான்.

ஏடி வ...

# ஜென் ஒரு ஹைக்கூ பார்வை

ஷர்ஜிலா பர்வீன் யாகூப்



எத்தனையோ இலக்கிய வடிவங்கள் இருந்தாலும் 'மூன்றே மூன்று வரி காவியமான ஹைக்கூ''ஜப்பானில் பிறந்து பல்வேறு தேசங்கள் மொழிகளில் வியாபித்து இன்னும் வளர்ந்து கொண்டு இருக்கிறது

சொற்களைச் சார்ந்து நிற்காமல் இன்று உலகளாவி நிற்க காரணம் அதன் ஜென் சிந்தனை வழியே.. 'ஜென் சிந்தனையின் ஒரு வடிவமே ஹைக்கூ என்றாலும் பொருத்தமாக இருக்கும்.

தியானா என்கின்ற சமஸ்கிருத வார்த்தையின் சீன மொழிபெயர்ப்பு சான் (chan). சான் என்ற சீன பதத்தின் ஜப்பானிய உச்சரிப்பு ஜென். புத்த சமயத்தின் ஜப்பானிய தியானமார்க்கக் கிளைநெறி. ஜென் எனில் தியானம் என்பது தவறான விளக்கம். தியானம் மட்டுமே ஜென்னின் பயிற்சி முறை அல்ல என்பவர் டாக்டர் இர்ம்கார்ட் சிலோக்கல். ஜென் ஒரு இயல்பான மனித இயல்பு. ஒரு வீடுபேறு உணர்வு..ஒரு விடுதலை உணர்வு..

அது குறிப்பிட்ட மனிதருக்கோ வகுப்பினருக்கோ அல்லது ஒரு நாட்டினருக்கோ, ஒரு மதத்திற்கோ வழங்கப்பட்ட சிறப்பு செய்தி அல்ல.

கிபி 520 ஆம் ஆண்டு காஞ்சியிலிருந்து நாளந்தா சென்று அங்கிருந்து சீனா சென்ற தென்னிந்திய மன்னர் கந்தவர்மன் பல்லவரின் கடைசி மகன் போதிதர்மர் (பௌத்தவர்மப் பல்லவன்). அவர் சீனாவில் உள்ள ஷாவோலின் என்ற கோயிலில் சுமார் முப்பத்தி இரண்டு ஆண்டுகள் தங்கி தியான கருத்துக்களை தற்காப்பு கலையுடன் கலந்து கற்பித்தார்.

இவர் சொற்களில் தங்கியிராத, மத நூல்களுக்கு அப்பாற்பட்ட அறிவு பற்றிக் கற்பிப்பதற்காகச் சீனாவுக்கு வந்ததாக அறியப்படுகின்றது. இவர் மனதிலிருந்து விடுதலை அடைய வேண்டியதில்லை மனதிற்குள் ஆழ்ந்து போய்க்கொண்டே இருங்கள் இதில் மனதை ஞானமாக இருப்பதை காண்பீர்கள் என்கிறார். இவரின் ஆழ்நிலை தியானக்கருத்துக்களே சீனாவிலிருந்து ஜப்பானுக்கு சென்று துறவிகள் மூலம் இலக்கியங்கள் வாயிலாக பரப்ப பட்டதே காலப்போக்கில் ஹைக்கூகளாக பரிணாம மாற்றம் அடைந்தது.

இவரை புத்த குருக்களில் கடைசி (28 வது) குருவாக போற்றுகின்றனர். போதிதர்மர் "டாய்" என்ற மலையில் தியானம் செய்த பொழுது விழிப்புடன் இருக்க தன் கண் இமைமுடிகளை

பிடுங்கி எறிந்தார். அந்த அந்த ரோமங்கள் விழுந்த இடத்தில் புதர் முளைத்தது.பிற்காலத்தில் அந்த மூலிகை புத்துணர்ச்சி தருவதை அறிந்த மக்கள் தொடர்ந்து பருக ஆரம்பித்தனர். "டாய்" மலை மூலிகை "டே(tea)" என பின்னர் அழைக்கப் படுகிறது. ஆகவே சீனர்களும் ஜப்பானியர்களும் தேநீர் அருந்துவதை ஒரு மரபாக தற்போது வரை கடைபிடித்து வருகிறார்கள். ஹை(hai) என்றால் ஒரு கோப்பை தேநீர் என்றும் பொருள் படும். கூ என்றால் செய்யுள். இவரின் ஆழ்நிலை தியானக்கருத்துக்களே சீனாவிலிருந்து ஜப்பானுக்கு சென்று துறவிகள் மூலம் இலக்கியங்கள் வாயிலாக பரப்ப பட்டதே காலப்போக்கில் ஹைக்கூகளாக பரிணாம மாற்றம் அடைந்தது

ஹை(hai) என்ற ஜப்பானிய சொல்லுக்கு அணுத்தூசி, முழுமையான கரு, கிருமி, அல்லது ஒரு கோப்பை தேநீர் எனவும் பொருள்படும். கூ(ku) எனும் சொல்லுக்கு ஓர் வரி, ஒரு செய்யுள், ஒரு கவிதை, காற்று, ஆகாயம் எனவும், "முனைகள் வளைந்த ஒரு வட்டத்திற்குள் உள்ள சதுரத்தை கண்டுபிடித்தல் என்று பொருள் படும். இவற்றை இணைத்து பார்க்கையில் ஹைக்கூ என்பது கரு போன்றும் உயிரணு போன்றும் உருவானதொரு கவிதை எனப் பொருள் தரும்.

ஹைக்கூ வில் நாம் காட்டும் காட்சி அல்லது நிகழ்ச்சி இயற்கையைப் பற்றி, மனிதனைப் பற்றி, ஓர் அரிய உண்மையை உணர்த்துவதாக வாசகன் உள்ளத்தில் ஒளியேற்றுவதாக இருக்க வேண்டும் என்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான் (சோதி மிகு நவக் கவிதை பக்கம் 44. ஹைக்கூவில் காட்சிகள் செங்குத்தாகவும்(VERTICAL), பக்கவாட்டிலும்(HORIZONTAL) அமைந்து பொருள்கள் வரிசைக் கிரமமாக அமைந்து காலக்கூறுவுடன் இணைத்து முப்பரிமாணமாக மனக்கண் முன் விரிவது ஹைக்கூவாகும் என்கிறார் கென்னத்யசூதா. அனுபவம், அல்லது அனுபவ பங்கீடு அல்லது எதிர்பாராத வியப்பு என தான் உணர்ந்ததை மற்றவருக்கு படிகம் போல் சுட்டிக் காட்டும் புகைப்படக்காட்சிகளின் செருகேடு (ஆல்பம்) ஹைக்கூவாகும்.

ஜென் நான்கு உண்மைகளை எடுத்துரைக்கின்றது

1. சுருதிக்கு அப்பாற்பட்ட ஒரு சிறப்பு பரவுதல் நிலை .
2. சொற்கள் எழுத்துக்களைச் சார்ந்து நிற்காமை
3. மனிதனின் அறிவை நேரடியாக சுட்டுதல்
4. தன்னியற்கையைக் காணுதலும் ஞான நிலையை அடைதலும்.

இந்த நான்கு உண்மைகளும் 4 வாக்குகள் அல்லது வாக்கியங்கள் என்று அழைக்கப்பட்டன. சொற்களைச் சார்ந்து நிற்காமை என்பதே ஹைக்கூ கவிதையின் சுருக்கத்திற்கு காரணமாகும். மோனங்கள் அல்லது ஒரு மனநிலை மட்டுமே (State of mind) ஜென் அல்ல, .அது ஒரு செயற்பாடு ஆகும். மொழியின் சூட்சும வடிவமாகும்

(பௌத்தவர்மப் பல்லவன்) போதிதருமரால் சீனாவில் ஏற்படுத்தப்பட்டு ஜப்பானில் பரவிய. தமிழ் நாட்டில் தோன்றிய அந்த விதை கடல் கடந்து சீனாவில் செழித்து ஜப்பானில் விருட்சமாக வேரூன்றி உலகெங்கும் தழைத்துள்ளது பசுபிக் நெருப்பு வளையத்தின் எரிமலை வளையத்தில் உள்ள ஜப்பானில் சுமார் 6852 தீவுகளும் 108 செயல்படும் எரிமலைகளும் ஆண்டிற்கு 1500 நிலநடுக்கமும் பல்வேறு விதமான கடற்சீற்றங்களும் சுனாமி பேரலையும் உள்ளதால் ஜப்பானில் உலகப்போரின் போது அணுகுண்டுகளையும் தாங்கி தினம் தினம் எதாவது ஒரு இயற்கை பேரிடரை சந்திக்கும் நாடாகும். இதன் காரணமாகவே அவர்களுக்கு இந்த ஜென் தத்துவங்கள் மிகவும்

ஈர்த்துள்ளது. ஆழ்ந்து அவர்களுடைய வாழ்க்கையில் கலந்து உள்ளது. நிலையாமை கொள்கையில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள் ஜென்வாதிகள் இந்நிலைகளில் ஹைக்கூ படைப்பாக்க மனநிலை பற்றி பிளித்.ஆர்.எச். கூறுபவை சுயமற்ற தன்மை, தனிமை, நன்றி சார்ந்த ஏற்புத் தன்மை, பேச்சற்ற மௌனம், அறிவு சாரா நிலை, முரண்கள், நகைச்சுவை, சுதந்திரம், ஒழுக்கஞ்சாராத நிலை, எளிமை, பொருள் சார்ந்த நிலை, அன்பு, துணிவு தரும் யதார்த்த அனுபவமே ஹைக்கூவிற்கு உகந்த நிலைகள் ஆகும்.

ஜென் கவிதைகள் தரும் அனுபவம் பெரிதும் சுயநிகழ்வுகள் அற்றது. ஒருவகையில் அன்றாட நிகழ்வுகளில் சாரமாக உள்ள தன்னிருப்பு மற்றும் அது மாறும் தருணங்களை மட்டுமே பதிவு செய்கிறது.

ஜென் கவிதையில் வரும் “நான்“ ஒரு பயணி. முடிவற்ற தேடலில் வழியே தன்னை கண்டு கொள்கின்றவன் தன் மீது போர்த்தப்பட்ட சுய அடையாளங்களை இயற்கையுடன் கலந்து கரைந்து தனக்காக தேடி பயணிக்கின்றவன். அவன் இயற்கையின் ஸ்பரிசத்தினால் தன் புலன்கள் கொள்ளும் எழுச்சியைத் தாண்டி தீண்ட முடியாத அகத்தவிப்பும், விளங்க முடியாத துயரமும் இதுவரை முன் அறியாத சந்தோசமும் உருவாவதை உணர்கின்றவன்.

ஒரு இலக்கிய வடிவம் மொழி கடந்து தேசம் கடந்து பல நூற்றாண்டுகளாக போற்றப் படுகிறது என்றால் ஹைக்கூவின் மூலமான ஜென்னின் கருத்தாழமே ஆகும்.

நன்றி:
இணையம்.. மற்றும் கூழாங்கற்கள் (ராமகிருஷ்ணன்) புத்தகம். மற்றும் நிர்மலா சுரேஷ் அவர்களின் ஹைக்கூ கவிதைகள் புத்தகம்

## ஹைக்கூ

1.
ஆனையிறவுக்கடல்
பரந்து விரிந்து கிடக்கிறது
அவனது அறிவு

2.
அழகிய சூரியகாந்திப்பூ
தலை குனிந்து நிற்கிறது
அவனது பணிவு

3.
பசுபிக் சமுத்திரம்
ஆழமாகவே இருக்கிறது
அவனது சிந்தனை

4.
நீரேரியில் அன்னம்
வெண்மையாகவே இருக்கிறது
அவனது உள்ளம்

5.
ரோஜாப்பூவின் இதழ்
மென்மையாகவே இருக்கிறது
எப்போதும் அவனது மனம்

6.
குயிலின் குரல்
என்னை மிகவும் ஈர்த்தது
அவனது கலப்படமற்ற பேச்சு

7.
கடற்கரைக் காற்று
நறுமணம் வீசுகிறது
அவன் நினைவுகள்

**வன்னியூராள்**
(சுபாஜினி மனோகரன் - சுவிஸ்)



●
இல்லையே ஈடுனக்கிங்(கு) இன்றமிழே! சொற்செல்வம்
பல்கிப் பெருத்திருக்கும் பைங்கிளியே! மல்லிப்பூச்
சூடக் குழல்மணக்கும்! சுந்தரனிங்(கு) உன்புகழைப்
பாட இதழ்மணக்கும் பார்!
- சுந்தர ராசன்

●
வெல்க தமிழென்று வேள்வி நடத்துவேன்
வல்லமை யோடுமொழி வாழ்ந்திட - மல்லிகைப்பூ
அள்ளிவந்து மாலையாக்கி அன்றாடம் சூட்டிநான்
வெள்ளியால் கூரைவேய் வேன்.
- சி. கருணாகரசு.

●
சூடக் கழுத்தெங்கே சுட்டினால் சூட்டிடுவேன்
தேடல் அறிந்தயென் தீந்தமிழே--- முல்லையுள்
ஊடாடும் தேன்போல ஊறித் திளைக்கின்றாய்
ஈடாட இல்லை எதும்!
- பொன்மணிதாசன்

●
கல்லாதார் நெஞ்சிலும் கள்ளூறச் செய்கின்றாய்
சொல்லாலே சொக்கவைக்கும் சுந்தரியே - மல்லிப்பூ
வாசத் தமிழுண்டு வாயார வண்டுகளும்
பேச விரும்புதுன் பேர் !
- ஞால ரவிச்சந்திரன்

●
பல்லாண்டு பல்லாண்டு பைந்தமிழ் வாழட்டும்
கல்லுள்ள நாள்வரையில் காப்பாக - முல்லைப்பூச்
சொல்லெல்லாம் மெல்லினமோ சொற்போர்க்கு வல்லினமோ
சொல்நிறை நற்றமிழ் சொத்து
- சுரேஷ் சீனிவாசன்

●
கல்லுளி மங்கர் கனத்த மனத்தவர்
தொல்மொழி முத்தமிழ் தொய்ந்ததுவாம் – முல்லைப்பூ
கண்டவர் முள்ளென்பார் காமாலைக் கண்கொண்டே
துண்டாடக் கல்வி துளைத்து
- விசு. இம்மானுவேல், பெங்களூரு

●
சொல்லும் அழகினில் சொக்கிடும் சீர்மையில்
பல்கிடுமே செந்தமிழின் பண்புநலன்! - மல்லிப்பூச்
சீதமதில் பாக்கோத்துச் சூட்டியே எம்தமிழின்
சீதனத்தா லெய்துவேன் சீர்ப்பு.
- வானதி_சந்திரசேகரன்

●
வல்லினம் மெல்லினம் வாகாய் இடையினம்
மெல்லமெல்ல ஊர்ந்திடும் மேனியில் - மல்லிப்பூ
வாசனையில் மெய்மறந்து வாரித் தழுவிடுவாள்
பாசமுடன் பைந்தமிழாள் பார் .
- சரஸ்வதி பாஸ்கரன், திருச்சி

●
எல்லையற்ற பேரழகே ஏழடியில் நீண்டிருக்கும்
அல்லையாண்ட கூந்தல் அலங்கரிக்க - மல்லிகையும்
செண்பகமும் முல்லையுடன் செம்பருத்தித் தம்முள்ளே
சண்டையிடும் காட்சியைப் பார் .
- ஜெகதீசன் முத்துகிருஷ்ணன்

நவம்பர் மாத வெண்பாப் போட்டியில் கலந்து
சிறப்பித்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.
வாழ்த்துகள் கவிஞர்களே...

●

வெல்லும் தமிழே! வியக்கும் வளத்துடன்
செல்லும் தடமது செம்மையன்றோ! - அல்லிப்பூ
நீரோடைக் காட்சியாய் நெஞ்சில் நிலைத்திட
சீரோடு வாழ்க செழித்து.

- ஓசூர் மணிமேகலை

●

நல்லகவி நான்பாட நற்றமிழே என்நெஞ்சில்
சொல்லும்முன் வாராயோ சூட்டுகிறேன் - மல்லிகைப்பூ
கற்றோரில் மூத்தக் கவிஞனென வாழ்த்துகிற
கற்பனையை மெய்யாக்கிக் காட்டு

- செ. இராசா

●

நெல்லின் பதரன்ன நேர்த்தியிலா னென்றனுக்கும்
நல்ல 'தமிழ்நெஞ்சம்' நல்கினாய் - முல்லைமலர்ப்
பூஞ்சிரிப்பா லுள்ளம் புதுக்கினாய் வானுறையும்
ஏஞ்சலுக்கும் உன்னழகு ஏது?

- க. சங்கரபாண்டியன்

●

வல்லின மெல்லின வல்லமை பூண்டதாய்,
நல்ல இடையினத்தால் நாணிநிற்கும் - அல்லியினும்
தூயதாய், ஆற்றலைத் தூண்டுவதாய்,நாளெல்லாம்
தாயாகிக் காக்கும் தமிழ்...!

- ஐ.க.நாகப்பன்

●

வெல்லும் நறுஞ்சொல் விரவும் தமிழாலே
கல்லுங் கரைந்து கனியாக - முல்லைப்பூப்
பந்தலில் முச்சங்கப் பாட்டிசைக்க ஞாலமதில்
சந்தமும் கொஞ்சும் சதம் .

- கவிஞர் அ. முத்துசாமி தாரமங்கலம்

●

முல்லைப்பூச் சூடியே முத்தமிழே நின்புகழை
மல்லிப்பூ மாலை மணம்வீச - அல்லிப்பூச்
சொல்லால் அழகாகச் செப்புவேன் வெண்பாவே
வெல்லமென நற்சொல் விளம்பு

- பாவலர் தாழை ந.இளவழகன் மணப்பாறை

●

எல்லா(ம்) மினிதாய் எதிலும் தமிழமுதால்
வெல்லு(ம்) முலகம் வியந்துபோகும் - முல்லைப்பூ
எல்லோரும் போற்றின் இதயங்கள் வாழ்த்திட
இல்லந் தழைத்தா(ல்) லினிது.

- கவிஞர் வீக பொன்னையா

●

முல்லைப்பூ போன்று முகிழ்ந்திருக்கும் முத்தமிழ்
கல்தோன்றும் முன்பே கனிந்தமொழி - மல்லிப்பூ
வாசத்தை வீசும் வனப்பான செந்தமிழ்
பாசத்தைக் கூட்டுவிக்கும் பார்.

- மாலதி தரு

●

தெள்ளுதமிழ் பூமகளே தென்னவனின் பாமகளே
வள்ளுவத்தால் இன்புற்ற வண்டமிழே - முல்லைப்பூ
அள்ளி முடிந்தேன் அமுதேயுன் சொல்லாட்சித்
துள்ளி விளையாட தூண்டு...

- சேந்தன்குடிச் செந்தமிழாழன் புதுக்கோட்டை.

●
அல்லிப்பூ செந்தமிழாள் அல்லின் அழகியவள்
சொல்லில் மணந்திடுவாள் சொக்கவைக்கும் - மல்லிப்பூ
போலவிழ்ந்து புன்னகையால் பொன்னள்ளித் தந்திடுவாள்
தாலாட்டும் இன்பத் தமிழ்,
- தென்றல் கவி

●
எல்லார்க்கும் நல்லதென என்றும் அறம்உரைத்துப்
பொல்லாங்குத் தீர்க்கும் பொதுத்தமிழே - மல்லிப்பூ
போல்மணக்கும் உள்ளமும் போற்றி மகிழ்ந்திடும்
ஆல்போல் தழைக்கும் அழகு
- வா.சண்முகம்

●
வல்லமை தந்திடும் வண்டமிழின் மேன்மையில்
சொல்வித்தை எந்நாளும் சோபிக்கும் - மல்லிப்பூ
வாசம்போல் உள்நின்று வட்டமிடும் செந்தமிழைப்
பாசமுடன் போற்றிடும் பார்
- ஜெயசக்தி பிரபாகரன்.

●
வெல்லும் தமிழை வெளியேற்றிப் பள்ளிகளில்
கல்வியினை ஆங்கிலத்தில் கற்கவைத்தார் - முல்லைப்பூ
சூடியன்று பாய்புலியைச் சூழ்ந்தடித்த பெண்மரபே
ஓடித் தமிழ்ப்பகையை ஓட்டு !
- பாவலர் கருமலைத்தமிழாழன்.

●
எல்லோர் பயனுக்கும் எட்டும் மொழியவள்
வல்லோர் படைப்பில் வளம்சேர்ப்பாள் - அல்லிப்பூ
அல்ல ; தடாகத் தரசியாம் தாமரைபோல்
தல்லையாய்த் தோன்றும் தமிழ்!
- தனராஜ் பாப்பணன் கோவை

●
கல்தோன்றும் முன்பிருந்த கன்னிமொழி;என்றாலும்
சொல்கொண்ட தாய்மையோ சொர்க்கமாம் - முல்லைப்பூ
வாசனையாய் யோசனைக்குள் வாழும்என் செம்மொழிக்குப்
பூசனையில் வைக்கின்றேன் பூ!!
- கிறிஸ்டினா அருள்மொழி

●
வெல்மொழியாம் நம்தமிழ் வெற்றிக் கொடியேற்றும்
சொல்லின் சிறகுயரும் சொர்க்கத்தின் - மல்லி
உலர்ந்தும் மணப்பதுபோல் உன்னதநம் தாயை
மலர்த்தூவி வாழ்த்தும் மலை
- சு.வி.லட்சுமி

●
சொல்லளக்கும் நெற்களத்தாள் சொக்குநகைப் பேரெழிலாள்
கல்மலை வீழ்ப்பாலைக் காய்க்கவைப்பாள் - முல்லைப்பூ
நல்லரும்பும் பொற்றை நறைத்தமிழாள் மூச்சனையாள்
எல்லைப்பூ தானறியாள் ஏந்து!
- கண்ணதாச முருகன்

●
சில்லென்ற காற்றில் சிலையாக்கும் சிந்தையில்
கல்லாடும் காதல் கவித்தாவ - முல்லைப்பூ
சொல்லாடும் பாலில் சிறகடித்தாள் வாணியே
தில்லாடும் தேனில் தினித்து
- மன்னை மணிமாறன்

அல்லுடைத்து வானேறி ஆதவன் நின்றொளிரச்
சொல்லுடைத்துப் பாட்டாலே சொக்கவைக்கும் - அல்லிப்பூ
பூத்ததென்றே தான்மயங்கிப் பூப்புரளும் வண்டெல்லாம்
காத்தவயல் கொக்குதனைக் கண்டு...!

- வள்ளி முத்து

வெண்பா போட்டி (பயணம்) 2

போட்டி நாள் : 23.11.21 முதல் 05.12.21 இரவு 12.00 மணிவரை

.

சுவாரஸ்யமான போட்டி

.

முன்வந்(து) ஒருநாளுன்
முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால்
என்செய்வீர்? -- ........

.

வணக்கம் வெண்பாப் புலவர்களே!!!!

காதல் வயப்படாதவர் எவருமே இருக்க முடியாது. அந்த காதல் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பிரிந்திருக்கலாம். தனது பழைய காதலியோ... அல்லது காதலனோ... என்றேனும் ஓர்நாள் உங்கள் முன்வந்து நின்றால் என்ன செய்வீர்கள்? என்பதை ஏழு சொற்களில் கேள்வியாகக் கொடுத்துள்ளேன்.

தனிச்சொல்லில் இருந்து தொடங்கி அதற்கான பதிலை ஈற்றடி வரை சொல்லி முடிப்பதே போட்டியின் விதியாகும்.

இந்த வெண்பாவை அழகாக, நகைச்சுவையாக அல்லது உணர்வு பொங்க ஏதாவது உங்கள் சொந்த கற்பனையில் முடித்து வைக்கவும். களம் உங்களுடையது. அசத்துங்கள் கவிஞர்களே.

.

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

.

என்றும் தமிழுடன்....
தமிழ்நெஞ்சம் அமின்
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு...

.

வெண்பா தேர்வுக்குழு
ஏடி வரதராசன் - இராம வேல்முருகன் - தென்றல் கவி

நவம்பர் மாத வெண்பாப் போட்டியில் கலந்து
சிறப்பித்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.
வாழ்த்துகள் கவிஞர்களே...

# மாற்றம் வேண்டும்

தமிழருக்கே தமிழ்நெஞ்சம் இல்லாப் போழ்து
தழிழழிவில் இருந்ததனைக் காப்ப தாரோ
அமிழ்தென்றோம் ஆருயிர்க்கு மேலா மென்றோம்
அவனியிலே அஃதேதான் முதலா மென்றோம்
சுமையாகிப் போனதின்று கவிஞ ருக்குஞ்
செந்தமிழின் இலக்கணமும் நவீன மென்றே
எமதுமொழிக் குதவாத சித்தாந் தங்கள்
ஏற்றவற்றின் இலக்குநோக்கி ஏகு கின்றோம்

எழுத்தசைசீர் தளையடியும் தொடையுங் கூட
என்னவென்று தேராதே கவிதை பாடும்
பழுத்தகவி வாணர்கள் பெருகி யிந்தப்
பாரெல்லாம் பாவலராய் அலையு கின்றார்
மொழிபுகட்டும் பல்கலைப்பே ராசான் என்போர்
மாறாகப் பற்பலவும் உரைப்ப தாலே
இழிவுற்ற தானதின்று கவிதை யாப்பை
ஏறெடுத்தும் பார்க்காத நிலைமை யாச்சே!

சொல்லடுக்கே கவிதையென்று மகுடஞ் சூட்டிச்
சஞ்சிகைகள் தினவேடு கூசா தூக்கத்
தொல்பெருமை கொண்டசெய்யுள் வடிவங் குன்றித்
தரங்கெட்டுப் போனதன்றோ முன்னோர் செய்த
எல்லையில்லா இலக்கியங்கள் கற்போ ரற்றே
இருக்குமிடம் நகராது தேக்க முற்றுச்
செல்லரித்துப் போகுநிலை தாங்கும் கேட்டைச்
சார்ந்துளதென் கொடுமையிதை யறிகி லோமே!

செம்மொழியெம் மொழியென்றே மார்பு தட்டும்
தமிழர்களே சிந்தித்துத் தமிழைக் கொல்லும்
வம்பர்களை இனங்கண்டு தடுத்தல் வேண்டும்
வரம்புமீறும் ஈனத்தை அழிக்க வேண்டும்
தம்மளவில் தோல்வியுற்ற சிலபேர் கல்வித்
தடத்திருந்தே குரலெழுப்ப அதனை நம்பிச்
சும்மையெங்கள் இளையவர்கள் ஆற்றல் மிக்கோர்
தடம்புரண்டு செல்லுவதை மாற்ற வேண்டும்.

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
( இலங்கை )



# பொன்விழா ஏட்டைப் பொலியவைப்போம்


## பாவலர் கருமலைத்தமிழாழன்


அயலகத்தில் வாழ்பவர்தாம் நாளும் நாளும்
அருந்தமிழை வளர்க்கின்றார் பேணு கின்றார்
மயக்கந்தான் அவர்க்கில்லை கலப்பு செய்து
மணித்தமிழைக் கெடுக்கின்ற மனமு மில்லை
வியக்கின்ற படித்தூய தமிழில் பேசி
விளங்குகின்றார் தமிழுணர்வை நெஞ்சி லேற்றி
பயனுடைய செயலாகப் பிரான்சு நாட்டில்
பசுந்தமிழை வளர்க்கின்றார் அமினாம் நல்லோன் !

தமிழ்நெஞ்சம் என்கின்ற ஏட்டின் மூலம்
தமிழரினை இணைக்கின்றார் பிரான்சி ருந்தே
அமிழ்தாக அவ்வேட்டில் தமிழ்க்கு ழைத்த
அறிஞர்தம் முகங்களினை முகப்பி லிட்டு
நிமிர்பணியை நேர்காணல் வாயி லாக
நீளுலகம் அறிந்திடவே செய்யு கின்றார்
அமின்செய்யும் தமிழ்த்தொண்டால் தமிழ நெஞ்சம்
அய்ம்பதாண்டைக் காண்கிறது போற்று வோமே !

மரபுப்பா ஒதுக்குகின்ற இந்த நாளில்
மரபுக்கு மதிப்பளித்தும் புதுப்பா தன்னை
வரவேற்றும் கட்டுரைகள் ஆய்வு என்றே
வகைவகையாய்த் தமிழ்மொழிக்கே ஆக்கம் சேர்த்தார் !
தரமான படைப்புகளால் தமிழ நெஞ்சம்
தமிழர்தம் மனங்களிலே நின்ற தின்று
உரமாக நாம்நின்றே ஆண்டு நூறில்
உதிப்பதற்கே வாழ்த்திடுவோம் வாழ்க வென்றே !

நேர்காணல்

# பொன்மணிதாசன்




## குளிருக்கும் கைகட்ட மறுப்பவன் நான் – என் நிழல்கூட எவர்காலிலும் விழுவதில்லை

கவிக்கோ துரைவசந்தராசன்

பாவேந்தர் பரம்பரைவிழுது என புலவர் புலமைப்பித்தன் அவர்களால் அடையாளப் படுத்தப் பட்டவர் கவிக்கோ துரைவசந்தராசன் அவர்கள். தந்தைப் பெரியார் அண்ணா கலைஞர் கொள்கைவழி ஈர்க்கப்பட்டு இன்றும் புரட்சிகரமான எழுத்துகளால் தன்னை நிலை நாட்டிக்கொண்டிருப்பவர்.தாம் வசிக்கும் மாதவரம் பால்பண்ணைப் பகுதியில் 1984ல் தொடங்கப்பட்ட பண்ணைத் தமிழ்ச்சங்கம் மூலம் எண்ணற்ற இலக்கியவாதிகளை உருவாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.இவரது எழுத்துகளை ஏந்தாத ஏடுகளே இல்லை எனலாம். பல்வேறு விருதுகள் புதுச்சேரி அரசு விருது உட்பட ஏராளமான விருதுகளை குவித்திருப்பது இவரது எழுத்துக்கு கிடைத்திருக்கும் மரியாதை. ஐயாவிடம் தமிழ்நெஞ்சத்திற்கு பேட்டி என்றவுடன் முகம் மலர வரவேற்று தனது பதில்களை சிறப்பாக தந்து அனுப்பினார் வாழ்க கவிக்கோ வளர்க தமிழ்த்தொண்டு

ஓர் இலக்கியவாதி எந்த ஒன்றோடும் சமரசம் செய்துகொள்வதில்லையே ஏன்?

இலக்கியம் என்பது போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போவதல்ல.கண்டு, கேட்டு, அனுபவித்த உணர்வு களின், ஆழ் மனத்துள் அமர்ந்து அமர்க்களம் செய்யும் சிந்தனைகளின் சிலைவடிப்பு. பிசிறில்லாத உளவடிவம். இலக்கை நோக்கிய ஈர்ப்பு விசை. தனக்குச் சரியெனப்பட்டதை மட்டுமே ஏற்றுக்கொள்கிற சத்தியம்.

சத்தியங்கள் சமரசம் செய்து கொள்வ தில்லை. செய்து கொண்டால், அது சத்தியமு மில்லை.

சேவேறிய மரத்தின் செதில்கள்கூட செல்களுக்கு உணவாவதில்லை.உணவா னால் அது சேவேறியதுமில்லை.

நல்ல இலக்கியவாதி சேவேறிய ,நுனிவரை நிமிர்ந்திருக்கும் குறிஞ்சித் தேக்கு. எளிதில் வளைவதில்லை! தனக்குச் சரியெனப்பட்டால் ஏற்பதற்கும் தயங்காத் தன்மையாளன். ஓர் இலக்கியவாதியாய் என்னியல்பும் இதுதான். நான்

''குளிருக்கும் கைகட்ட மறுப்பவன்!
குனியாமல் கால்சொறியக் கற்றவன்!
நெளியாத ஒன்றைப்போல் செங்குத்து!
என்றன்
நிழல்கூட எவர்காலிலும் விழுவதில்லை!''

கொள்கைப் பிடிப்பும் தன்மானமும் தான் ஒரு இலக்கியவாதியின் உயிர்மூச்சு. அதனால்தான் அவன் எதனோடும் எளிதில் சமரசம் செய்துகொள்வதில்லை. இது நல்ல இலக்கியவாதிகளுக்கு! நகல் இலக்கியவாதிகளுக்கல்ல!

தாங்கள் மரபுக்கவிஞர். ஆனாலும் புதுக் கவிதை,நவீனம், ஹைக்கூ என எல்லா மும் எழுதுகிறீர்கள். எதை எழுதும்போது ஆத்மார்த்தம் உணருகிறீர்கள். ஏன்?



கண்ணதாசன் கலைஇலக்கிய மன்றத்தின் பாரிட்டு மழையில் கவிக்கோ

மரபு என் தாய்வீடு! மரபு,நான் உருண்டுபுரண்ட மண். உலகின் எந்த மூலைக்கும் போய்வரலாம்.சொந்த ஊரின் சுகம் சொந்தவீட்டின் சுகம் எந்த நாட்டிலும் கிடைக்காது.

என் மகன்கள், மகள் வெளிநாடு களிலிருந்து வற்புறுத்தி அழைப்பார்கள். அவர்களுக்குச் சொல்வேன் ''நான் தூங்கு வதற்கு மாதவரம் போகவேண்டுமே! என்ன செய்வது?''

அதே விடைதான் தங்கள் வினா வுக்கும்.

நான் புதுக்கவிதை, நவீனம், ஹைக்கூ என்று கவிதையின் பலபரப்புகளிலும் பறக் கிறேன். காரணம், "மரபுக் கவிஞர்களுக்குத் தேமா புளிமா விட்டால் வேறெதுவும் தெரியாது. அவர்கள் குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டிக்கொண்டு தேங்கிக் கிடப் பவர்கள்.'' என்ற பலரின் எண்ணத்தை உடைக்கவேண்டும் என்பதற்கே. நான் பலமேடைகளில் சொல்லியிருக்கிறேன்

''மரபுக்கவிதை தன் மரணப் படுக்கை யில் கிடப்பதாக பலபேர் மல்லாந்து துப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்னைப் படிக்காதவர்கள்» என்று..

''புதுக்கவிதைகளின் சொல்லாட்சி, ஹைக்கூவின் உள்ளடக்கம், நவீனத்தின் படிமம் குறியீடு உருவகங்கள் என அனைத்தையும் உள்ளடக்கி மரபில் புதுமை செய்கிறீர்கள்'' எனப் பல தமிழறிஞர்கள் சொல்கிறபோது பூரிப்பது உண்மை.

கவியாளுமைகள் நிறைந்த அவையில் என்னைக் குறிப்பிடும்போது" அவர் மரபுக்கவிஞரல்லர். நவீனமரபின் நாயகன். அவர் எல்லாத் திடலிலும் விளை யாடுவார். அவர் விளையாடிய திடலில் மீண்டும் போய் நாம் விளையாட முடியாது!" என்று சகபடைப்பாளிகளால் பாராட்டப்படுவதற்குக் காரணமே என் மரபுதான். எல்லாக் கவிதைகளிலும் என் ஆத்மார்த்தம் உணர்கிறேன். மரபில் ஆத்மார்த்தமாய் உறைகிறேன்.

**ஒரு கவிதையை எழுதும்போது ஏற்படும் உத்வேகம், அது பேசப்படாதபோது எழுவதில்லை.அதற்கான காரணம் என்ன?**

எல்லாக் கவிதைகளும் பேசப்படுமென்பது இயலாதவொன்று.படைப்பாளனின் உத்வேகமும் படிப்பாளியின் உத்வேகமும் எப்போது ஒரே புள்ளியில் இணைகிறதோ ,அப்போது தான் அது பேசப்படும். எல்லாக் கவிதைக்கும் அது சாத்தியமன்று. நகை களெல்லாமே தங்கம் தானென்றாலும் தனக்குப் பிடித்ததைத் தேடியெடுக்கிற உளவியல்தான் இதுவும். அதற்காக கவிஞன் தன்னை மாற்றிக்கொள்ளவியலாது.முகநூலில் என்கவிதையைப் படித்தவர்களில் வெகுசிலர் உரிமையோடு ''எல்லாக் கவிதைகளும் அருமையாக இருக்கின்றன. ஒன்றிரண்டு கவிதைகள் சாதாரணமாக இருக்கின்றன. சாதாரணமாக உள்ளவற்றைத் தவிர்த்தால் எப்போதும் உச்சி உங்களுக்கானதாகவே இருக்குமே" என்றனர். அவர்களிடம் சொன்னதே தங்களுக்கும் ஒருவகையில் விடையாக அமையலாம். நான் சொன்னது இதுதான்

''சிறந்த கவிதைகள் என்பதற்காக மட்டுமே நான் பதிவுசெய்வதில்லை. எனக்குப் பிறந்தகவிதைகள் என்கிற பெருமிதத்தோடு பதிவுசெய்கிறேன்!''.

எனவே ஒருகவிதை பேசப்படாதபோது தொய்வடைவதில்லை. நாளை அந்தக் கவிதையே காலத்தின் கைரேகையாகலாம், போட்டியில் பங்குபெற்றுப் பரிசுபெறாத பாரதியின் கவிதையைப் போல. ஆனாலும் சிறப்பின்பாலால் தாயும் மனம்திரியும் என்பதாகவும் இருக்கிறது.

**மொழிச்சிறப்பைப் பலரும் பாடியுள்ளார்கள். ஏன் தாங்களும் பாடியிருக்கிறீர்கள். இதில் தங்களைக் கவர்ந்தவர் யார்? எதனால்?**

மொழிச்சிறப்பைப் பாடாத புலவர்கள், கவிஞர்களே இல்லை என்னுமளவிற்குப் பல நூறாண்டுகளாகப் பாடிவருகின்றனர். அவர்கள் அனைவரையும் நான்படித்தவனல்லன்.

''நீராருங் கடலுடுத்த....'' என்ற சுந்தரம்பிள்ளையின் பாடலைத் தமிழக அரசே தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலாக வைத்துப் போற்றுகிறது.

"வாழ்வினில்செம்மைசெய்பவள்நீயே" என்ற பாவேந்தரின் பாடலே புதுவை அரசின் தமிழ்வாழ்த்துப்பாடல்.

''கனியிடை யேறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!''

என்றும் ''தமிழெங்கள் உயிருக்கு நேர்'' என்றும் தமிழைப்பாடிய பாவேந்தரே என்னைக் கவர்ந்தவர்.

''ஏன் தாங்களும் பாடியிருக்கிறீர்களே'' என்று என்னையும் இணைத்த பிறகு என்னைக்கவர்ந்தவர் கவிக்கோ துரைவசந்தராசன்தான்.

எதனாலென்றால், தமிழின் தோற்றத்தைச் சொன்னதிலேயே உச்சம் ''கல்

தோன்றி மண்தோன்றாக் காலத்தே" என்பதுதானே. அதற்கும் முன்பே தோன்றியது நெருப்பே என்கிற அறிவியலைத் துணைக்கழைத்துக்கொண்டு "தீப்பிறந்த நாளுக்கு முன் பிறந்த தமிழே" என்றும், பிரபஞ்சம் என்கிற பெரிய முட்டையைத் தானே உடைத்துக்கொண்டு வெளிவந்தவள் என்தாய் என்றும் உலகமொழிகளுக்கெல்லாம் தன் பனிக்குடத்தவள் என்தாய் என்ற பொருளிலும் நம் அன்னைத்தமிழை ஆராதித்திருக்கிறேன். அந்தக் கவிதை இதுதான்....

''வானைத்தன் கால்விரலில் வைத்திருக்கும் பேரண்ட
மோனப் பெருவெளியின் முன்முட்டை ஓடதனைத்
தானே உடைத்துவந்த தன்மானத் தாய்த்தமிழே!
கூனல் சிறிதின்றிக் குத்தீட்டி போல்நிற்கும்
மானத் தமிழ்மறவர் மன்றம் வருபவளே!
சீனப் பெருஞ்சுவரைச் சின்னதாய்க் காட்டுகின்ற
ஞானச் செருக்குகளின் நாற்றங்கால் ஆனவளே!
ஏனமாய் பூவிருந் தேந்திப் பரிமாற
மோனையாய் முந்துகின்ற முத்தமிழே! சங்கத்தின்
மானத் தமிழ்மடியாய் மல்லர்கள் தோள்நின்று
நாணச் சுரப்பிகளின் நாவிருந்த காதலுக்கு
மோன மொழிகொடுத்து முத்தமழை பெய்தவளே!
ஊனம் சிறிதுமின்றி உயிர்ப்பாட்டில் தீவளர்த்துக்
கான மொழிமழையில் காதல் நனைத்தவளே!
வீணர் விரலெழுத்தில் விற்கத் துடிக்கையிலும்
பாணர்தம் பாட்டெனவே பாய்ந்தே எழுந்துவந்து
ஆனமட்டும் கீழடியின் ஆழப் புதையலெனக்
காணக் கிடைத்திருக்கும் காலத்தின் கையெழுத்தே!
கோணல் உலகத்தின் கோடாய் உயர்ந்தவளே!
நாணல் உலகின் நரம்பறுத்து நிற்பவளே!
வீணில் விருந்தாக்க வேற்றுமொழி தான்கலந்து
வானில் பருந்தெனவே வாய்பிளந்து நிற்போரைத்
தேனில் விடம்கலந்து திண்ணைகளில் விற்போரைச்
சாணைப் பிடித்துவை! சந்ததியைக் கூர்தீட்ட
வாநீ! தமிழே!வளர்பிறை நாளினியே!
ஆணை! தமிழே! அறி!''

இது இருபத்தாறு அடிகளாலான பஃறொடை / கலிவெண்பா. இருபத்தாறடிகளும் ஓரெதுகை / இனவெதுகையே பயின்றுவரும். நான் சொல்கிற இக்கருத்து நானறிந்தவரை மட்டுமேயன்றி வேறல்ல.



கவிக்கோ தன் துணைவியாருடன்

ஓவியப்பாவலர் அமுதோன் அவர்களுடன் கவிக்கோ



ஏதோ ஒரு கவிதையின் தாக்கம் தங்களைத் தூங்கவிடாது செய்திருக்கும். அது யாருடையது? அதன் சிறப்பென்ன?

எந்தக்கவிதையும்,அதுபிறப்பதற்காக, படைப்பாளனைத் தூங்கவிடாமல்தான் செய்யும். என்னுடைய பெரும்பான்மையான கவிதைகள், அவை பிறப்பெடுக்க, என்னைத் தூங்கவிடாமல்தான் செய்திருக்கின்றன. பிறந்தபின் எவரையாவது தூங்க விடாமல் செய்திருக்கும். பாலூட்டிதான் தீரவேண்டும் என்கிற நிலையிலுள்ள ஒருதாயின் மார்பக வலியைப்போல், நிறைவயிற்றுக் கர்ப்பம்போல் கருக்கொள் ளும் கவிதைகள் அனைத்துமே தூங்க விடாமல் செய்வனவே.

முதன் முதலில் எனைத் தூங்க விடாமல் செய்தது ஒரு ஒற்றைவரிக் கவிதை. அதன் தாய் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள்.

1973 ஆகஸ்டு 15 ஆம் நாள். என் கல்லூரி மாணவப்பருவம். நான் படித்த திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரி யில் கவியரங்கம். உரிமைக்குரல் எனும்தலைப்பில் கவிக்கோ அப்துல்ரகுமான் தலைமை. அக் கவியரங்கத்தில் என் உரிமைக்குரல்

''காம்பில்லாக் குடையான
வானத் திற்குள்
கதிரவனைச் சுற்றிவரும்
பூமி யாகிக்
காம்புடைய குடையேயுனைச்
சுற்று கின்றேன்
காதலுக்குக் குரல்கொடுத்து
வாடி ராணி!

சாம்பல்நிலை யடைந்தாலும்
ராணி உன்னைச்
சதமாகப் பெற்றிடவே
சந்து பொந்தில்
ஓம்புகிறேன்! உரிமைக்குரல்
எழுப்பு கின்றேன்!
உரிமைக்குக் குரல்கொடுத்து
வாடி ராணி''

என்று காதலாக ஒலித்தது. கவிக்கோ கைதட்டிப் பாராட்டினார். கவியரங்கம் நிறைவுற்றபின்தனியாகஅழைத்துப்பாராட்டி ஒரு தலைப்பு தந்து அவருடைய கல்லூரியில் நடைபெறவிருந்த ஒரு கவியரங்கத்திற்கு அழைப்பு விடுத்தார். அந்தத் தலைப்புதான் என்னைத் தூங்கவிடாமலல்ல, புரட்டிப் போட்ட தலைப்பு. அதுதான் எனக்குத் திருப்பம்தந்த தலைப்பு.

கவிமணி விருது தமிழ்நாடு கவிமணி மன்றம் வழங்கியது



அது – ''எரியும் வயிறும் எரியாத அடுப்பும்!''.

தங்களின் இனிய நண்பர் கவியரசு விக்டர்தாஸ் திரைத்துறையில் வலம்வருபவர். அவரது துறையில் என்றேனும் நுழைய விருப்பப்பட்டு அவரிடம் பேசியதுண்டா?

இல்லை. நான் 1982 இல் ஒரு முறையும் 1984 இல் ஒருமுறையும் திரைத் துறையில் நுழைய முயன்றேன். படங்களின் பெயர்கள் நினைவிலில்லை. சூழலைச்சொல்லி தத்தகாரத்திற்குப் பாட் டெழுதச் சொன்னார்கள். எழுதினேன். நன்றாக இருந்ததாகப் பாராட்டினார்கள். சில சூழல்கள் காரணமாகத் திரைத்துறை எனக்கு விருப்பமில்லாமல் போனது. இப்பொழுது அந்த எண்ணமே இல்லை.

வித்தகக் கவிஞர் விக்டர்தாஸ் என்னை அகம்நிறைய அப்பா என்றழைக் கக்கூடிய நண்பர். அவரே ஓரிருமுறை என்னைத் திரைப்படத்துறைக்கு அழைத் தார். ஆயினும் எனக்கு விருப்பமில்லை என்றவுடன் விட்டுவிட்டார்.

சங்க இலக்கியம் - தற்கால இலக்கியம் வேறுபாடு!

இலக்கியம் என்பதே காலத்தின் கண்ணாடிதானே! அந்தக் காலத்தின் சூழல்வேறு.இன்றைய சூழல்வேறு. அந்த வேறுபாடுகள் இலக்கியத்திலும் வெளிப் படுகிறது.

வேறுபாடுகள் புறவடிவத்திலும் உள்ளன. சங்க இலக்கியங்களின் வடிவம் பெரும்பான்மை அகவல்.

சிலப்பதிகாரம் உரையிடைபட்ட பாட்டுடைச்செய்யுள்.திருத்தக்கதேவர் விருத்தம். வள்ளுவம் வெண்பா. வடிவ மாற்றங்கள் காலம்தோறும் பெற்று பரந்து விரிந்து நிற்கிறது.



புதுச்சேரியில் சங்கத்தமிழ்ப் புலவர் விருது பெற்ற தருணம் கவிக்கோ விருது வழங்கி சிறப்பிப்பவர் புலவர் அனந்தசயனம் அவர்கள்

திரைப்படப்பாடலாசிரியர் புலவர் புலமைப்பித்தனுடன் கவிக்கோ



சங்க இலக்கியங்களின் அகவடிவம் காதலும் வீரமும். பெயர்சுட்டப்படாத காதல் பாடல்கள் அகமாயின. பிற புறமாயின.

இக்காலத்திலும் வடிவ, உள்ளீடுகள் பரந்து விரிகின்றன. புதுக்கவிதைகள், ஹைக்கூ, நவீனம், லிமரைக்கூ, தன்முனை என்று வடிவமாற்றத்திற்குட்பட்டே வளர் கின்றன. ஆனாலும் அவையும் மரபின் வேரிலிருந்தே கிளைத்து வருகின்றன என்பது என்துணிபு.

இணைக்குறள் ஆசிரியப்பாதான் புதுக் கவிதை.

மூவடியில் வரும் சிந்துதான் ஹைக்கூ.

ஈரடி ஆசிரியப்பா அல்லது ஈரடி கொச்சகம்தான் தன்முனை.

எதுகைகள், மோனைகள் வைப்பு



புரட்சிக்குயில் பொன்னடியான் அவர்கள் விருது வழங்கிப் பாராட்டுகிறார்



சிலம்பொலி செல்லப்பனாருடன் கவிக்கோவும் துணைவியாரும்



நக்கீரன் கோபால் அவர்கள் கவிக்கோவை சிறப்பிக்கும் காட்சி

நண்பர்களுடன் கவிக்கோ



முறையையொட்டி லிமரைக்கூ, எதுகைக்கூ, மோனைக்கூ என்றெல்லாம் வகைபிரிக்கப்படுகிறது.

படிமங்கள் குறியீடுகளாலான உரை வடிவம் நவீனம்.

எல்லாமே மரபின் வேர்களிலிருந்து கிளைத்த மாற்று வடிவங்களே!

உள்ளீடுகளும் அகமும் புறமும்தான்.

சங்க இலக்கியங்களின் தாக்கம் இன்னும் இருக்கிறது என்பதே உண்மை. சங்க இலக்கியங்களில் அடைச் சொற்களில்லாதபெயர்ச்சொற்கள்மிகக்குறைவே. குதிரையை, ஆடுநடைப் புரவியென்றது. காற்றை, அசைவளி என்றது. ஒழுகு நீரென்றும் தீஞ்சுவைதண்ணுறையென்றும் நீரைச்சொல்லியது.

''ஒழுகுநீர் ஆரல்பார்க்கும் குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே'' என்ற குறுந்தொகைக் கருத்து இன்றைய நவீன இலக்கியங்களிலும் கையாளப்படுவதைக் காணலாம்.

மழலை என்பதே சொற்களின் கனிந்தநிலை. இக்கருத்தை வள்ளுவரின் மழலைச்சொல்லொடு பொருத்திப் பார்க்கலாம்.நம்காலத்துக்கண்ணதாசனோ 'கனியக்கனிய மழலைபேசும் கண்மணியே' என்று ஓரடி உயரப்பார்க்கிறார்.

மொத்தத்தில் சங்க காலக் கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த தொகுப்பு. அங்கேயும் சொத்தைகள் இருந்திருக்கும். இக்காலத்திலும் விருப்பு வெறுப்பின்றித் தேர்ந்தெடுத்தால் நாளைய சங்க இலக்கியமாகும் தகுதியுடையனவே.

**தாங்கள் எழுதிய கவிதை வரிகளைப் படித்து, இது தானெழுதியது தானா என்று ஐயம் வந்ததுண்டா?**

இதுவரை இல்லை. எத்தனை வயதானாலும் குழந்தைகளின் முகம் மறந்துவிடாது. பல கவிதைகளை முழுமை யாகவேசொல்லுவேன்.சிலகவிதைகளைப்

படிக்கத் தொடங்கும்போதே மற்ற வரிகள் நினைவில் வந்துநிற்கும். கவிதைகள் மட்டுமல்ல... எந்தச் சூழலில்... எங்கு எழுதினோம் என்பதும் நினைவில் வரும்.

ஏறத்தாழ நாற்பதாண்டுகளுக்குமேல் பண்ணைத்தமிழ்ச்சங்கம் தொடங்கி தொய்வின்றி பல இலக்கியவாதிகளை அடையாளம் காட்டி வருபவர் தாங்கள். இச் சாதனையை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு சார்பில் ஏதேனும் உதவிகள்?

இல்லை. தமிழக அரசு சிறந்த இலக்கிய அமைப்புகளுக்கு தமிழ்த்தாய் விருதும் ஐந்து இலட்சம் அளவில் விருதும் வழங்கிவருவதை அறிவோம். ஆயினும் அதற்கான முயற்சிகளை எடுக்காதது எங்கள் தவறுதான்.

1984 ஜுன் 10 ஆம்நாள் தொடங்கப் பட்டது. தொடர்ந்து இடைவிடாது திங்கள் தோறும் நிகழ்வுகள் நடத்தி வருகிறோம். தமிழகத்தின் மிகப்பெரிய ஆளுமைகள் பங்கேற்றி ருக்கிறார்கள். பல தமிழறிஞர்கள், தமிழ்த்தொண்டர்கள் விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் எவரும் பரிந்துரைத்தார்களா என்பதறியோம். பரிந்துரைகேட்டு நாங்களும் யாரையும் அணுகவில்லை.

தானாக வராது. விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பித்து விருதுபெறுவதில் ஆர்வம் காட்டவில்லை.

பொருளாதாரத்தைப் பெரும்பாலும் அமைப்பாளர்களே ஏற்றுக்கொள்கின்றனர். கோவைநாவரசன், தஞ்சை மயிலரசன், தேனீ தமிழ்ச்சிம்மன், த.செயராமன், வ.தட்சிணாமூர்த்தி, வெண்முகிலனார், பா.சிவாஜி, பா.இராமசாமி, சீனிபழனி, ஞால ரவிச்சந்திரன், ஆனந்திபரிமேலழகன் எனப் பலரும் தோள்கொடுக்கின்றனர்.

வருகைதரும் பங்கேற்பாளர்களுள் சிலரும் தாமாக முன்வந்து செலவுகளை ஏற்றுக்கொள்கின்றனர். அதனால் உதவி



பாவேந்தர் விருது
வழங்குபவர்: தமிழ்க்குடிமகன்
உடன்: மன்னர்மன்னன்



சுப.வீ அவர்களுடன் கவிக்கோ

பேராசிரியரோடு கவிக்கோ





நெருப்புக்கவிஞர் விருது
வல்லிக்கண்ணன் வழங்குகிறார்



தன்மானத் தமிழர் கி.வீரமணியுடன்
கவிக்கோ

பாவேந்தர் விருது பெற்றபோது கவிஞர்
சுரதா மற்றும் வி.ஜி.சந்தோஷம்
அவர்களுடன் கவிக்கோ



களைத்தேடி அணுகுவதில்லை. நாங்கள் கேட்டால் தரும் நட்புகள் நிறைய உண்டு என்பதனால் முயலவில்லை.

**அண்மையில் முகநூல் பதிவு ஒன்றில் வாழும் கவிஞர்களுக்குச் சரியான அங்கீகாரம் கிடைக்கவில்லையெனும் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தீர்கள். அவர்களுக்கான அங்கீகாரத்தை அரசு எப்படிச் செய்யலாம்?**

அரசு செய்யவில்லை என்று சொல்ல வில்லை. அரசு பல்வேறு வகைகளிலும் அங்கீகரிக்கிறது. அகவைமுதிர்ந்த தமிழ றிஞர், தமிழ்ச்செம்மல், தூயதமிழ்ப் பற்றாளர், நற்றமிழ்ப்பாவலர், முப்பதுக்கும் மேற்பட்ட விருதுகள் என விருது த்தொகையுடனும் கட் டணமில்லாப்பேருந்து,மருத்துவச்செலவுக்கு த்தொகை என தாராளமாகவே பாராட்டுகிறது. ஆனால் தேர்வுசெய்யும் முறையில் மாற்றம் தேவை.

விண்ணப்பித்து விருதுபெறுவது என்னைப்போன்றவர்களுக்கு ஏற்புடையதல்ல.

தன்விவரக் குறிப்புகளைப் பெற்று, அதனடிப்படையில் அரசே பொருத்தமான விருதுகளை வழங்கலாம்.

என் முகநூல் பதிவு இதனைப் பற்றியது அல்ல.

தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், பேச்சாளர்கள் ஆகியோர் வாழும் கவிஞர் களை அடையாளப்படுத்தவேண்டும். வாழும் கவிஞர்கள் ஆய்வுக்கு உட் படுத்தப்படவேண்டும். வாழும் கவிஞர் களின் கவிதைகளும் மக்களுக்குப் போய்ச்சேரவேண்டும். வாழும் கவிஞர்கள் என்றால் திரைப்படக்கவிஞர்கள் மட்டுமே அல்ல என்பதை உணரவேண்டும். வாழும் கவிஞர்கள் வெளிச்சப்படுத்தப்படவேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

பல்கலைக்கழகங்கள் ஆவனசெய்ய அரசு அறிவுறுத்தவேண்டும்.

**நீங்கள் பல்வேறு அமைப்புகளால் விருதுவழங்கிச் சிறப்பிக்கப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் அரசுவிருது எதுவும் பெறவில்லையே. ஏன்?**

தரவில்லை! அதனால் பெற வில்லை!

1981 பாரதி நூற்றாண்டு விழாவில் புதுவை அரசு பாரதி பட்டயம் வழங்கிச்சிறப்பித்தது.

பொதுவாகவே,விண்ணப்பித்து விருது பெறுவதை விரும்பாதவன் நான். அரசியல் செல்வாக்கு, அதிகாரிகள் செல்வாக்குகளை முயன்றால் என்னால் பெறமுடியும். முயல்வதையே விரும்பாதவன் நான்.

இலக்கிய அமைப்புகள் விரும்பித் தருகிற விருதுகளே பெருமை எனக்கு. இதுவரை ஐம்பது விருதுகளுக்குமேல் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒன்றைக்கூட நான் கேட்டுப் பெற்றதில்லை.குறிப்பால் கூட உணர்த்தியது கிடையாது.

விருதுகள் என்பவை வெக்கை நேரத்து விசிறிகள். அன்பின் பெரும் பகுதியாலும் விருதுக்குத் தேவையான அடிப்படைத் தகுதிகளாலும் தான் பெரும்பாலான விருதுகள் தீர்மானிக்கப்படுகின்றன என்பதென்கருத்து.

படைப்புகளால் பேசப்படவேண்டும் என்று ஆசைப்படுபவன் நான். நானும் பேசப்படுவேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. காலம் என்னைக் கட்டாயம் பேசும்.

**தாங்கள் தமிழ்நெஞ்சம் வாசகர் என்பதில் பெருமைப்படுகிறோம். தமிழ்நெஞ்சம் பற்றிய தங்கள் பார்வை?**

தமிழ்நெஞ்சம் வாசகன் என்ற பெருமிதத்தோடே பேசுகிறேன். ஐம்பதாண்டு கால இதழ்ப்பணி, இலக்கியப்பணிகளால் தலைகனக்காத் தமிழ்நெஞ்சம் அமின் வாழ்த்துதலுக்கு மட்டுமல்ல வணக்கத்திற்கும் உரியவர்.

கடல்கடந்த தேசத்திலிருந்தும் தாகம் தணியாத தமிழ்நெஞ்சம் அமின்!

ஒரு படைப்பாளியைச் சகபடைப்பாளியை மனம்திறந்து பாராட்டுவதென்பது உலக அதிசயத்தின் உச்சம். அந்த உச்சத்தைப் படைத்துக்கொண்டிருக்கிறார் அமின்.

கூர்ப்பாட்டுக்களால் குவிந்திருக்கும் பக்கங்கள். ஆர்ப்பாட்டமான அழகிய வடிவமைப்பு! வயல்வணங்கும் முற்றிய கதிர்களாய் வாசகர்கள்.எல்லாவற்றையும் உள்ளடக்கிய எளிமையாய் அமின்.

என்னையும் நேர்காணல் செய்யும் அவரது அன்பு. இத்தனையும் ஒருங்கே அமைந்துள்ள புதையலையும் சக வாசகர்களையும் வணங்கி வாழ்த்துகிறேன். ■



பாவேந்தர் விருது வழங்குபவர்
புதுவை முதல்வர் ப.சண்முகம்.
29.4.2000 புதுவை.
தமிழகம் புதுவை உள்ளிட்ட மாநிலங்களில்
கவிக்கோ மட்டுமே விருது பெறுகிறார்

திரைப்பட இயக்குனர் முத்துராமன்
அவர்களுடன்



# நகரங்களின் பெயர் சூடும் அண்டார்டிகா பனிப்பாறைகள்

## சிதம்பரம் இரவிச்சந்திரன்

உலக நாடுகளின் தலைவர்கள் புவி வெப்பமயமாதலைக் குறைக்க, காலநிலை மாற்றத்தின் தீவிர விளைவுகலைக் கட்டுப் படுத்த ஸ்காட்லாந்து க்ளாஸ்கோ நகரில் காப்26(COP26( காலநிலை உச்சி மாநாட்டில் பங்குபெறுகின்றனர். அக்டோபர் 31-நவம்பர் 12 2021 வரை இந்த மாநாடு நடைபெறுகிறது. க்ளாஸ்கோ மாநாட்டின் நினைவாக பிரிட்டன் அண்டார்டிகாவில் உருகும் பனிப்பாறை ஒன்றிற்கு க்ளாஸ்கோ என்று பெயர் சூட்டியுள்ளது.

### க்ளாஸ்கோ பனிப்பாறை

பிரிட்டன், அமெரிக்கா, சீனா, இந்தியா, ஆஸ்திரேலியா, பிரேசில் உட்பட 120 நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர். 2015 பாரிஸ் ஒப்பந்தத்தின்படி புவி வெப்ப உயர்வை 1.5 டிகிரி செல்சியர்ஸ்/2.7 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலைக்குள் புவி வெப்ப உயர்வைக் கட்டுப்படுத்த எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்த மாநாடு விவாதிக்கிறது. தொழிற்புரட்சி காலத்திற்கு முந்தைய வெப்பநிலையை 1.5 டிகிரிக்கும் கூடுதலாகாமல் பார்த்துக்கொள்லவேண்டும் என்பதே காப்26 மாநாட்டின் முக்கியக் குறிக்கோள்.

லீட்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட அண்டார்டிகா பிரதேசத்தில் (British Antartica Territory B.A.T) கெட்ஸ் (Getz) என்ற பகுதியில் உள்ள பனிப்பாறையை ஆராய்ந்தனர். இந்தப் பனிப்பாறை புவி வெப்ப உயர்வால் 1994-2018 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட



காலத்தில் சராசரி 25% உருகியதைக் கண்டறிந்தனர். இதனால் 315 கிகாடன் நீர் கடலில் கலந்து உலகளவில் கடல்நீர் மட்ட உயர்விற்குக் காரணமானது.

இந்த பனிப்படலத்திற்கு (glacier)பிரிட்டன் காலநிலை உச்சி மாநாடு நடைபெறும் க்ளாஸ்கோ நகரின் பெயரைச் சூட்டியுள்லது. ஒளி வீசிப் பிரகாசித்துக் கொண்டிருந்த இந்த பிரம்மாண்டமான பனிப்படலம் புவி வெப்ப உயர்வால் சீரழிந்துவருகிறது என்பதைஉலகிற்கு உணர்த்தவே க்ளாஸ்கோ நகரின் பெயர் இதற்கு வைக்கப்பட்டுள்ளது.

## நகரங்களின் பெயர் சூடும் அண்டார்டிகாவின் பனிப்பாறைகள்

இதேபோல் அண்டார்டிகாவில் உருகும் மற்ற பெரிய பனிப்பாறைகளுக்கு பூமியைக் காக்க க்ளாஸ்கோவிற்கு முன் முக்கிய காப் உச்சிமாநாடுகள் நடந்த ரியோ, க்யோட்டோ, பாரிஸ் நகரங்களின் பெயர்கள் சூட்டப்படவுள்ளன. புவி வெப்ப உயர்வை உடனடியாக கட்டுப்படுத்தா விட்டால் வரும் நாட்களில் வரக் காத்திருக்கும் பேரிடர்களைக் குறித்து உணர்த்தவே பனிப்பாறைகளுக்கு பிரிட்டன் இவ்வாறு பெயர்களை சூட்டுகிறது.

க்ளாஸ்கோ மாநாடே மனிதகுலத்தைக் காக்க நமக்குக் கிடைத்துள்ள கடைசி வாய்ப்பு, இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிட்டால் வரலாறு நம்மை மன்னிக்காது என்று காலநிலை நிபுணர்கள், சூழல் போராளிகள் உட்பட கோடிக்கணக்கான உலக மக்களும் நம்புகின்றனர். இந்த மாநாட்டின் முக்கியத்துவத்தை உலகறியச் செய்ய பிரிட்டன் இந்த நூதனமுறையை கையாள்கிறது.

இந்தியா, பிரேசில், ஆஸ்திரேலியா போன்ற கார்பன் உமிழ்வில் முன்னிலையில் இருக்கும் உலகநாடுகளின் தலைவர்களிடம் பூமியைக் காப்பாற்ற உருப்படியாக எதை யேனும் செய்யவேண்டும் என்று உலகம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.



அன்று தனது தந்தையின்
இறப்பினால் கல்வி கட்டணம்
கூட செலுத்த முடியாத நிலை;
கல்வி பயின்ற பள்ளியோ, 'இனி நீ
பள்ளிக்கு வரவேண்டாம். உன் இசை
கருவிகளை வைத்து தெருவோரமாக
பிச்சை எடுத்து பிழைத்துக்கொள்' என
கூறி அனுப்பியது.

ஆனாலும் அந்த சிறுவன் சற்றும்
மனம் தளறாமல், தனது கடின
உழைப்பால் இன்று உலகளாவிய
இசையமைப்பாளர்களில்
ஒருவராகவும்; BAFTA விருதுகள்
அமைப்பின் இந்தியாவின் சார்பாக
தூதராகவும் இருக்கிறார்.

அவர் பெற்ற விருதுகள் சில
2 Academy,
1 Grammy,
1 BAFTA
1 Golden Globe

ஒட்டுமொத்த உலகையும் தன் பக்கம்
திரும்பிப்பார்க்க வைத்த் அந்த
சிறுவனின் பெயர்

A.R.ரஹ்மான்

அந்த பள்ளியின் பெயர்
பத்மஷேஷாத்ரி பால பவன். இன்று
ரஹ்மானின் பெயர் எங்கும் கொடி
கட்டி பறந்து கொண்டிருக்கிறது;
ஆனால் அவரை கல்விப்பயில
விடாமல் அனுப்பிய பத்மஷேஷாத்ரி
பள்ளியின் ஆசிரியர்கள் சிறையிலும்

பணி நீக்கத்திலும்

## வாழ்க தமிழ்நெஞ்சம்!

தமிழ்ச்செம்மல் முனைவர்
**ஓசூர் மணிமேகலை**



அமிழ்தாம் இதழாம் ஆக்கம் நிறையாம்!
தமிழ்நெஞ்சம் கண்டதே தரணிபுகழ் ஐம்பதாம்
ஆண்டின் விழாவில் அகமகிழ்ந் தோமே!
தீண்டும் இன்பம் தீந்தமிழ்ச் சுவையாய்!
அன்புச் சோதரர் அமினெனும் தொண்டர்
என்றும் தமிழின் ஏற்றம் காண
உலகை இணைத்தார் உன்னதத் தமிழால்!
புலர்ந்த விடியல் புதுமை இதழாய்!
தரத்தைப் படைப்பின் தளத்தில் நிறுத்தி
உரமாய் இட்ட உயர்வே போற்றி!
அறிஞர் தம்மை அறிமுகம் செய்து
செறிவாய் அளிப்பார் செம்மைப் பெருமை!
உலக அரங்கில் உயரும் புகழில்
நிலையாய்த் தொடரும் பயணம் வாழ்க!
தமிழர் நெஞ்சம் தழைக்க வாழ்க!
நிமிரும் புகழில் நீடு வாழ்கவே!

## நின்று போன இதயம்

நான் துடித்த போது
தொடர்புக் கொள்ளாத
உறவுகள்

தொட்டுத் தொட்டு
அழுகிறது
தனியே தவித்த போது
தள்ளி வைத்த உறவுகள்

தாகம் தீர்க்க தண்ணீர்
கூட தராதோர்
கண்ணீர் விட்டு
கதறுகிறார்கள்

ஏழை என்று ஏளனம்
செய்தோர்
எட்டிப் பார்த்து
ஏங்குகிறார்கள்

மனமிறங்காதோர்
காலடியில் காத்திருக்கிறார்கள்
மன்னித்து விட்டேன்
மனித நேயத்துடனே.....

மரணிக்கிறேன் மௌனமாக
நின்று போன இதயம்...

## வாசமில்லா மலர்கள்

வயதின் ஈர்ப்பில்
வாழ்வை தொடங்கி

வறுமையில் பொறுமை
இழந்து

நாளும் புரிதல் இல்லாது
வெவ்வேறு துருவங்களா

வெளிப் பார்வையிலே
வசந்தகாலப் பறவைகளை
போலவே வலம் வருபவர்கள்

பக்குவம் வந்த பின்னே
வாழ்வையும் வயதையும்
தொலைத்ததை எண்ணியே

வருந்தும் உள்ளங்கள்
வாசமற்ற மலர்களே ......

– இரா. தேவி

# சென்ரியு



– கவிச்சாரல் காமராஜ்
(எ) காளி வாசகன்

×

பசுமை பட்டாசுகளின் வருகை
ஓடி ஒளியும்
சீனாவின் பட்டாசு வகைகள்..!

×

பலமுறை ஜெயித்தாலும்
சம்பாதித்த பணத்தைப்
பரிசளிக்காதுச் சூதாட்டம்..!

×

சாதி சமயபேத ஒப்பனையை
அகற்றும் இடம்
முடிதிருத்தும் நிலையம்.

# காதல் ♥♥

தேடுகிறேன் எங்கே
என்று தேடுகிறேன்...
அந்தப் பிள்ளைக் குறும்புகளை...

என்னைப் பார்த்துச்சிரிப்பாய்
எப்போதும்...
இப்போதோ என்னைப் பார்க்கிறாய்
சிரிக்கவில்லை...

பார்த்துப் பார்த்து
எனக்கெனச் செய்வாய் அனைத்தையும்
இப்போது செய்கிறாய்
ஆனால் அது எனக்கானதில்லை...

தினம் தினம் அழகிய
கவிதைகளில் நானிருப்பேன்
இப்போது கவிதைகள் அழகாக உள்ளது
ஆனால் அதில் நானில்லை...

சிரிக்கிறாய் பேசுகிறாய்
எனக்கென இல்லை
ஏதோ கடமைக்காக...

சரி சரி நீ எப்படியாகிலும்
இருந்துவிட்டுப்போ
இனி...
கவலைப்பட நானிருக்க மாட்டேன்...

- கவிஞர் தென்றல் கவி

# நீங்கள் யாரையும் இழந்து விடாதீர்கள்... !!!

ஒருமுறை சாக்ரட்டீஸ் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து அவருடைய நண்பரைப் பற்றி ஏதோ கூற முயன்றார்.

உடனே சாக்ரட்டீஸ் அவரிடம், "என் நண்பரைப் பற்றி என்னிடம் கூற விரும்பினால் அதற்கு முன் 3 கேள்விகளை கேட்பேன். மூன்று கேள்விக்கும் ஆம் என பதில் இருந்தால் மட்டுமே நீங்கள் அவரைப் பற்றி கூறலாம்"என்றார்.

சாக்ரட்டீஸ் முதல் கேள்வியை கேட்டார் "அவர் செய்த செயலை நேரடியாகப் பார்த்துவிட்டு தான் அவரைப் பற்றி கூறுகிறாயா ?" என்று கேட்டார்.

இல்லை என பதில் சொன்னார்.

"அவரைப் பற்றிய நல்ல விஷயத்தை கூறப்போகிறாயா?" என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டார்.

இல்லை என பதில் சொன்னார்.

"அந்த நண்பரைப் பற்றி என்னிடம் கூறினால் யாராவது பயனடைவார்களா...???" என்ற மூன்றாவது கேள்வியைக் கேட்டார்.

இதற்கும் இல்லை என்றே பதில் வந்தது.

"யாருக்கும் பயனில்லாத, நல்ல விஷயமுமில்லாத, நேரடியாக நீங்கள் பார்க்காத, என் நண்பரைப் பற்றிய சம்பவத்தை தயவு செய்து என்னிடம் கூறாதீர்கள்" என்றார்.

நல்ல நட்பு ஆரோக்கியமான விவாதங்களையே மேற்கொள்ளும். நண்பர்கள் ஹைட்ரஜன் வாயுவினால் நிரப்பப் பட்ட பலூன் போன்றவர்கள்.

நீங்கள் விட்டு விட்டால் எங்கோ பறந்து சென்று விடுவார்கள். பத்திரமாக பிடித்துக் கொள்ளுங்கள்...!!!

உலகில் சிறு தவறு கூட செய்யாதவர்களே இல்லை. மேலும் மன்னிக்க முடியாத குற்றம் என்றும் ஏதுமில்லை....!!!

எனவே,

வார்த்தைகளால் யாரையும் பழிக்காதீர்கள்...!!!

வசவுகளால் இதயங்களை கிழிக்காதீர்கள்....!!!

நல்லுறவை வன்முறையால் இழக்காதீர்கள்...!!!

நட்புறவை இழிமொழியால் துளைக்காதீர்கள்...!!!

மனிதர்கள் ரத்தமும், சதையும், உணர்ச்சிகளாலும் உருவாக்கப்பட்டவர்கள்.

"நீங்கள் யாரையும் இழந்து விடாதீர்கள்".

# கவிதை நூல் வெளியீடு

இலங்கை கிழக்குமாகாணம் ஏறாவூரைச் சேர்ந்த புகழ் பூத்த இலக்கிய ஆளுமையும் பிரபல கவிஞரும் எழுத்தாளருமான "ஏரூர்க்கவிக்கோ" A.C.அப்துல் றகுமான் அவர்களின் மூன்றாவது கவிதை நூலான ""அக்கரைப்பச்சை" கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 12.12.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஏறாவூர் பிரதேச கலாசார மத்திய நிலையத்தில் நிலையப் பொறுப்பதிகாரி MIMM.மஃபூழ் அவர்களது தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் இலக்கியப் படைப்பாளர்களும் தமிழ்நெஞ்சத்தின் வாசகர்களும் துறைசார்ந்த அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.







மேலதிக தொடர்புகளுக்கு

+ 94 776411432
+ 94 778204569

razeemmohamed263@gmail.com

# மூத்தமாட பாக்கெட்டி



என்ர மூத்தமாக்கு முப்பதுக்கு மேல
பேரப் புள்ளயல்
எல்லாத்தோடயும் அவக்கு எரக்கம்
எண்டாலும் என்னோடத்தான் மிச்சம் எரக்கம்

ஆராச்சும் காசி குடுத்தா
அதில அஞ்சி பத்துச் சதம் எனக்கித் தருவா மனிசி
பழம் பலகாரம் குடுத்தா
மறச்சி எடுத்துக்கந்து எனக்கித் தீத்துவா



நான் ஓதப் பள்ளிக்குப் போவாட்டி
என்னோட அத்தம் போடுவா
ஒரு ஒகுத்து தொழுக வுடாம தொழனும் எம்பா

பாக்கெட்டியால நான் பாக்க வெட்டி ஒரல போட்டு இடிச்சிக் குடுப்பன்
சப்புவா அப்ப அவட பொக்க வாயப் பாத்து ரசிப்பன்

ஒரு நாள்
நான் படிக்ற பள்ளிக் கூடம் உட்டு வரக் கொள
ஊட்ல நெறய சனம்

மூத்தமா மவுத்தாய்ட்டாவாம்

என்ர மூத்தமாவ என்ர நெஞ்சிக்குளதான் நான் அடக்கினன்
அவட பாக்கெட்டிய இப்பவும் நான் வெச்சிருக்கன்
என்ர பொம்புளப் புள்ளக்கிக் குடுக்க

**- ராஜகவி ராகில்**

*(பாக்கெட்டி - பாக்குவெட்டி*
*ஓதப் பள்ளி - குர் ஆன் கற்றுக் கொடுக்கும் பள்ளி*
*ஒகுத்து - வேளை, நேரம்*
*அத்தம் - ஊடல்*
*மவுத்து - மரணம்)*

## தாயவளே



பெண்ணுரு கொண்டு  பிள்ளைகள் பெற்றாள் - தாயவளே
கண்ணென இமைபோல் காத்துச் சிறப்பாள் - தாயவளே
உண்மை ஒன்றே உள்ளத்தில் விதைப்பாள் - தாயவளே
மண்ணிலே புனித மாந்தராய் வாழ்வாள் - தாயவளே

- இராசையா கௌரிபாலா.

## நெற்கதிரே



அழைக்கும் காற்றோடு அன்பாய் கையசைக்கும்  - நெற்கதிரே
குழைந்து விளையாடி குழந்தையா யாகிடும் - நெற்கதிரே
தழைச்சத்து உண்டு தளர்ச்சி நீங்கிடும் - நெற்கதிரே
விழைந்த உழவரை விளைந்தே மகிழ்விக்கும் - நெற்கதிரே.

- சுப.சாவி.

## அன்பு



மண்ணின் உயிர்கள் மாட்சிமை பெறுவதோ - அன்பினாலே
பெண்ணினம் என்றும் பெருமை கொள்ளுதே - அன்பினாலே
கண்களை இமைகள் காத்து நிற்பதும்  - அன்பினாலே
விண்ணைத் தொடுமளவு வெற்றிகள் தருவதும் - அன்பினாலே

- பா.ச.கண்ணன்

## கல்வி



ஆக்கம் கொடுக்கின்ற ஆனந்தம் கிடைக்குமே - கல்வியினால்
ஊக்கம் தருகின்ற உற்சாகம் பிறக்குமே - கல்வியினால்
ஏக்கம் தீர்க்கின்ற ஏகாந்தம் இனிக்குமே - கல்வியினால்
நோக்கம் நிறைவேறும் நாளும் சிறக்குமே - கல்வியினால்

- சிவ எம்கோ

## நல்வழி



நன்மைகள் செய்து நலம்பெற வேண்டும் - அறவழியில்
அன்புட னென்றும் அணைந்துநாம் வாழ்வோம் - அறவழியில்
கொன்றிடா தென்னுமிக் கொள்கையில் நிற்போம் - அறவழியில்
வென்றிடும் வாழ்வை விரைவில் அடைவோம் - அறவழியில்

- தம்பி த் துரை குணத்திலகம்

# வேல்விழி

## ஆசிரியர் திரு. அனுராஜ்

நூல் மதிப்புரை :
குமாரசாமி சேதுராமன்




வேல்விழி கதைக்களத்தில் பயணித்து அடியேன் எடுத்த முத்து சிதறல் களை இங்கே பகிர்கிறேன்.

முதன் முதலாக இந்த புதினம் ஆசிரியரின் முதல் புதினம் என்பதை மனம் ஏற்க மறுக்கிறதே.

தமிழ் மொழியின் மீதான ஆளுமை அருமை அற்புதம் .

விஜயாலய சோழனை மையமாக கொண்டு புனையப்பட்ட புதினமாக இருந்தாலும் பல விறுவிறுப்பான நிகழ்வு களை உள்கொணர்ந்து வேல்விழி என்ற அழகான மலர்சரமாக கோர்த்த விதம் அட்டகாசம்...

இந்த புதினம் பல நிகழ்வுகளை கொண்டதனால், பல்லவர் பாண்டியர் முத்தரையர், இலங்கையின் சேனன் போன்ற பல அரசர்களின் பாத்திர அமைப் பும் பங்களிப்பும் கொண்டதாக உள்ளது .

இத்தனை நிகழ்வுகளையும் தடம் புரளாமலும் அதே சமயம் வீணாக எங்கும் திணிக்காமலும் கதைக்களத்தை நேர்த்தியாக கையாண்ட விதம்..

அத்தியாயங்களின் தொடக்கத்தில் இயற்கையை விவரிக்கும் விதம்.

கதைக்களத்தில் வரும் இடங்களைப் பற்றிய குறிப்புகளால் விவரித்து கூறியது அருமை.நிறைய புதிய விடயங்களை இக்கதை வாயிலாக அறியலாம்..

அதே போல் கதைகளத்தில் இலக்கிய நூல்களில் உள்ள விடயங்களை மேற்கோள் காட்டும் விதம்..

மனிதர்களின் மன ஓட்டத்தையும் வாழ்க்கை இயல்பினையும் விவரிக்கும் விதம்..

கதைக்களத்தில் வரும் பல நிகழ்வு களை விவரிக்கும்பொழுது திகில் படங் களை பார்க்கும் உணர்வுகளை கொணரும் விதம்.

விஜயாலயனுக்கும் இளங்கோ வேளுக்கும் உள்ள நட்பினை விவரிக்கும் விதம்..

விஜயாலயனுக்கும் மூஸாவுக்கு மான நட்பினை பறைசாற்றும்படியான நிகழ்வுகள்...

அடிகளார் என்ற குணவர்மன் நந்த கோபராகவேடம்தரித்துசெயலாற்றும்விதம். ஜெயந்தன் மற்றும் காலாந்தகனுடனான பயண நிகழ்வுகள் அருமை. அடிகளாரின் பங்களிப்பு மிக முக்கியமானது.

இலங்கை மன்னன் இரண்டாம் சேனனுக்கும் வேல்விழிக்கும் நடந்த சம்பாஷ ணையை விவரித்த விதம். இவ்வாறு நிறைய

சொல்லிக் கொண்டே போகலாம்.

நிறைய நிகழ்வுகளில் வரும் சம்பாஷணைகளில் நாம் அருகில் உட்கார்ந்து கலந்து கொள்வது போன்ற அருமையான உரைநடை.

பாண்டிய ஒற்றர்கள் ஜெயந்தனும் காலாந்தகனும் பல்லவ அரசிக்கு அளிக்கும் மருத்துவசிகிச்சையின் விவரங்கள் அருமை. பேய் விரட்டி எனும் பெரும்தும்பையை குறித்து சொல்லியிருப்பது அருமை.

பாண்டிய மன்னன், பல்லவ மன்னனுக்கும் விஜயாலயனுக்கும் இடையே மித்ர பேதம் செய்தும்.. பல்லவ மன்னனை வசியப்படுத்தியும் அவர்களுடனான போரில் வெல்லலாம் என்ற சிந்தனை வித்தியாசமானது.

பல்லவ மன்னன் சித்த பிரமை பிடித்த மாதிரி நடித்து இடும் கட்டளைகள் அருமை..

நார்த்தாமலையில் மூஸாவின் தலைமையின் இரகிய பாசறை அமைத்து செயல்படும் விதம் அருமை.

புதுக்கோட்டை நார்த்தாமலை மலைக்கு முன்னர் ஒரு கிராமச்சாவடியில் ஆளுங்கணத்தாரை தேர்வு செய்ய விஜயாலயன் குடவோலை முறையை அறிமுகப் படுத்திய விதம்..

முத்தரையர் சிறையில் இருந்து விஜயாலயன் தப்பித்துக்கொள்ளும் விதம்.

அரிசிலாற்றங்கரையில் நடந்த போரில் விஜயாலயன் அமைத்த கருட வியூகம் அளப்பரியது .

அவரது திறமையால் பல்லவர்களுடன் இணைந்து பாண்டியர்களுடன் நடந்த போரானது வெகுசீக்கிரமாக முடிந்தது மிகவும் ஆச்சரியமாகவும் அதே சமயம் ஒருபக்க போர் மாதிரி மிக்க எதிர்ப்பின்றி முடிந்தாகவும் தோன்றியது.

பாண்டிய மன்னன் ஸ்ரீமாறவல்லபர் இலங்கையின் மீதான போரின்போது புத்தருக்கான மரகதக் கண்டியை அபகரித்துவர, அதை திரும்ப பெற சேனனுக்கு பாண்டியனுக்கு போரில் உதவி புரிய ஒரு நிபந்தனையாக முன் வைத்த விதம்.

மற்றும் ஒரு நிபந்தனையாக இரண்டாம் சேனனுக்கு பாண்டிய இளவரசி வேல்விழி மணமுடிக்க வைத்த நிபந்தனை..

இரு நாட்டு போர்களின் போது எந்த ஒரு நாட்டின் இளவரசியை எதிரி நாட்டு மன்னனுக்கு அவளது விருப்பத்தை கேளாமல் மணமுடிக்க முடிவு செய்வது காலம் காலமாக நடந்துதான் வருகிறது.

இந்த கதைக்களம் சோழன் விஜயாலயனைப் பற்றியது என்பதால் தானோ என்னவோ பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனை பற்றிச் சூழ்ந்த நிகழ்வுகள் மிக குறைவு.

கடைசியில் விஜயாலயன் தனது போர்த்திறமைகள் போரிடும் விதம். அளப்பரிய அறிவுப்பூர்வமான சிந்தனைகள் இவை அனைத்தையும் கொண்டே பிற்கால சோழ சாம்ராஜ்யத்தை உருவாக் கினான் என்பதில் துளியவும் சந்தேகமில்லை.

நெருக்கடிகள் சூழ்கின்றபோதும் இடைஞ்சல்கள் ஏற்படும் போதும் மனிதனது மூளையானது தனது சிந்தனா சக்தியை விரிவுபடுத்தி கொள்வதோடு பரபரப்பாகவும் இயங்கவும் செய்கிறது

எதிர்பார்ப்பொன்று உள்ளத்தில் எழுந்துவிட்டால் தூக்கத்தை மட்டுமின்றி நிம்மதியையும் குலைத்துவிடும்..

முத்தரையர்களில் முதல் மன்னனான தனஞ்செயன் என்பவன் பெயராலேயே தனஞ்செயனூர் என்பது திரிந்து தஞ்சாவூர் ஆனது என தெரிந்து கொண்டது.

மனிதர்களுக்கு மிகப் பெரும் துன்பங்கள் வரும் பொழுது அவர்கள் இங்கிதம் பார்ப்பதில்லை. பாரபட்சமின்றி அனைவரது உதவிகளையும் எதிர்ப்பார்க்கத் துவங்கி விடுவார்கள். நிதர்சனம்..

காலங்கள் பல விஷயங்களை துடைத்தெறிந்து விடுகிறது.பாதிப்பை ஏற்படுத்தியவனே பாதிக்கப்பட்டவனிடம் கையேந்தும் நிலைக்கு தள்ளப்படுகிறான்

எதை விடுப்பது எதை விடுவது என ஒரு முடிவுக்கு வர முடியாமையால் இத்துடன் இந்த நீ....ண்ட கருத்து பகிரவினை நிறைவு செய்கிறேன்..

கண்டிப்பாக அனைவரும் படித்து ரசிக்க வேண்டிய புதினம்.

ஆசிரியர் அனுராஜ் அவர்களுக்கு பாராட்டுககளும் வாழ்த்துகளும். மேன்மேலும் புதினங்கள் வளர.. ■

# ஒரே நாளில்

என் கசப்பற்ற மாமிசத்துண்டங்களில்
எனக்கில்லாத பிரியம் உனக்கு மட்டும்
எங்கிருந்து வந்தது சகி?

நாம் சந்தித்து ஐந்தாறு
நாட்கள்தானே ஆகியிருக்கக்கூடும்?
ஆயுள் முழுவதும் சேமித்திருந்த
காதலின் பேரின்பத்தை ஒரே நாளில்
என் மேல் கொட்டிவிட எப்படி முடிந்தது உன்னால்?

இதழ்களற்ற ஏன் கலவிக்காரணிகளற்ற
உன்னுடலின் மீச்சிறு கூர்பற்களால் என்னை
முத்தமிட்டு சேர்ந்ததாய் கூறினாய்..
பெருமாள் மாமா சமைத்து தந்த கோழிக்கறியின்
உப்புக்காரங்களைக்கூட தேர்ந்தெடுத்து
என்னிலிருந்துப் பிரித்திருக்கிறாய்..
அர்த்தமற்ற மாயங்களை நிகழ்த்தி
என்ன செய்யப் போகிறாய் கண்மணி?

நிலையற்ற உன்மேல் எனக்கு
ஒருபோதும் பிரியமில்லை
என்று தெரிந்தும் , பிரிய மனமில்லாமல்
மூச்சிறைக்க பின் தொடர்வதும்
நவத்துவாரங்களையும் அடைத்துக்கொண்டு
வெளியேற விடாதது போல
பாசாங்கு செய்வதும் நியாயமில்லை அன்பே!

பார்! என் உடல் உஷ்ணத்தில் பற்றவைத்த
பாராஷூட் வானில் எங்கோ
பறந்து மறைந்து விட்டது.



பசிபிக் சமுத்திரத்தின் ஓயாத அலைப்போல
மேலும் கீழுமாக ஆர்ப்பரிக்கும்
பெருங்குடலை இப்போதுதான்
கொடிக்கம்பத்தில் உலரவைத்தேன்.

கழட்டி வைத்த கைகால்களை யெல்லாம்
களவாடிப்போக காகங்கள் காத்திருக்கின்றன.

வசதியில்லாத அசதியை மட்டும் வைத்துக்கொண்டு
நான் படும்பாட்டைப் பார்த்தும் உனக்கு
என் மேல் காதல் இருந்தால் வா!
இருவரும் சேர்ந்து இருளில் புதையும் முன்பாக
ஆளுக்கொரு வௌவால் உண்ணாதப்
பழமரம் நட்டுச்செல்வோம்!

**சாய்வைஷ்ணவி**

# வைராக்கிய வாழ்வு

வானம் ஆணாகத்
தெரிகிறதெனக்கு...
நிலம் பெண்ணாகத்
தெரிகிறதெனக்கு...

துளியும் ஆணதிகாரமில்லை
இவ்வானிற்கு...
எனினும் துளித்துளியாய்
வீழ்வதுண்டு!

சிறிதும் கர்வமில்லை
இந்நிலத்திற்கு...
எனினும் வைராக்கியத்தோடு
வாழ்வதுண்டு!

இடி மின்னலென
கோபமுண்டு வானிற்கு...
பிளவு நடுக்கமென
கோபமுண்டு நிலத்திற்கு...

வானில் பறவைகள்
சிரித்தபடி சிறகடிக்கிறது...
நிலத்தில் மயில்கள்
சிந்தித்தபடி ஆடுகிறது...

ஏழு வண்ண வானவில்
வானை ஆரமாய் தழுவுகிறது...
ஆற்று நீரில் அதே வானின்
வானவில் பிரதிபலிக்கிறது!

புணர்ச்சி விதிப்படி
வானும் நிலமும் இணைகிறது...
நிலத்தடி நீர் புதுக்கவிதையாய்
பொங்கி வழிகிறது...

வானம் நிலைமொழியே...
நிலம் வருமொழியே...
வாழ்க்கை இங்கே அவர்களின்
பெருமொழியே... பொதுமொழியே!

**ம.சக்திவேலாயுதம்**
நெருப்பு விழிகள்

# நான் என்ன செய்வது...

அன்புக்காய் நீளும்
கரங்களை
ஓடோடிப்போய் பற்றிக்கொள்வதில்
இப்போதெனக்கு அத்தனை
அவசரங்களில்லை

அதைத்தான் அவர்கள்
நான் அலட்சியக்காரியென
குறைப்படுகிறார்கள்

நான் என்ன செய்யட்டும்?

சின்னச் சின்ன மனக்
கசப்புக்களின்போதெல்லாம்
எனக்கொரு மன்னிப்பை
தருவதற்கு கூட நேரமில்லாமல்
பற்றிய கரங்களை
அவசர அவசரமாய்
உதறிவிட்டுப் போகையில்

நான் சற்று நிதானிக்க
அவகாசங்கள்
தேவையாயிருக்கிறதே

அன்பின் குடுவைகளில்
நிரம்பி வழியும் நேசத்தை
கணக்கில்லாமல்
பருகிக்கொள்கையில்
இறுதியில்
அது ஒரு விடமாகவே
மாறிவிடுகிறதே

பின் தலைக்கேறிய விடத்தில்
நானொரு
பைத்தியக்காரியாகவே
மாறிவிடுகிறேன்

இக்காலத்தில் செல்லுபடியற்ற
ஒன்றாகிப்போன பைத்தியக்கார
பேரன்பை வைத்துக்கொண்டு
நான் என்ன செய்வது?

மயிலிறகு மனசு **சிபானா அஸீம்**
மருதமுனை

# களேபரம்

முனைவர்.
பெண்ணியம் செல்வக்குமாரி

வீடு வீடாகவா இருக்குது ? வச்ச பொருள் வச்ச எடத்துல இல்ல. இந்த பக்கம் ஜட்டியைக் கழட்டாமல் பேஞ்சு வச்சிட்டான் ஒரு வாலு, இன்னொரு பக்கம் ஜட்டி போடுன்னு ஒரு குட்டிக் கொரங்கு அடம்பிடிக்குது. அங்க பாத்தா அவளுடைய பேண்ட இவ தூக்கிப் போட்டுக்கிட்டான்னு ஒரே அழுகை. யாருக்குச் சமாதானம் சொல்றது?... யாரு அழுகய நிப்பாட்றது?... முடியலடா சாமி.. கால எழுந்து இராத்திரி வரை இதுகளோட மல்லுக்கட்றதே வேலயா போயிடுச்சி.

செவனேன்னு கெடந்தேன். நானுண்டு என் வேலை உண்டுன்னு இருப்பேன். ஒரு சத்தம் வூட்ல இருந்து வெளியே போகாது. இப்ப என்னடான்னா தெருவே திரும்பிப் பாக்கற மாதிரி அலறல் சத்தம். டிவிய ரொம்ப சத்தமா வச்சி பாட்டுக்கேக்றா ஒட்டடக்குச்சி. இன்னொரு குண்டன் என்னடான்னா சோபாவுல உக்காந்துகிட்டு எந்நேரமும் வீடியோகேம் வெளயாடறான். பாட்டி சாப்பாடு ஊட்டுங்க றான். இல்லனா சாப்படமாட்டேன் போங் கறான். தடிமாடு மாதிரி வளந்துட்டு... ஊட்டினா ரெண்டுவாயி மூணுவாயிதான்... ஆத்திரம் வரும்ல, வலுக்கட்டாயமா எப்படியோ ஊட்டிவிட்ருவேன். தோ ஒரு ஊராங் குட்டான் பந்து எடுத்து அடிச்சான் பாரு, அந்தச் சின்னத்தவள மேலே பட்டுக் கத்தறா... லபாதிபான்னு... எழுந்து ஓட முடியாத ஓடறேன்.. எவளுகளும் கண்டுக்காம அவ அவ கைப்பேசிக்குள்ள கவுந்து கெடக்கறாளுக..

மேயற மாட்டக்கூட புடிச்சிக் கட்டிப்புடலாம்.. மேயற கொழந்தய கட்டிப் போட முடியாது ..

விறுவிறுன்னு ஒம்பது படிக்கட்ட தாண்டி போயிடுச்சு. ஐயோ.. அங்கிருந்து விழுந்தா என்னாவறதுன்னு பதைக்கத் தூக்கறேன். ஈன்னு பல்லிளிக்குது. வராந்தா முழுக்க குப்பையும் கூளமுமா கெடக்குது. எத்தனை முறைதான் குனிஞ்சி நிமிர்ந்து பெருக்கறது?.. முதுகுமுள்ளு வளஞ்சிப்போவுது.. போ...

காலையில் எழுந்த உடனேயே காப்பி போடுவது, கிச்சன்ல வேலை பாக்கறது, இட்லி, தோசை சொல்றதுன்னு ஏகப்பட்ட வேலைக்கி நடுவால சின்ன வாண்டுங்களோட பஞ்சாயத்து. இவன் அவன் அடிச்சிட்டான்னு.. யார் சமாதானம் செஞ்சி வக்க முடியுது ? நிம்மதியா தூங்க முடியுதா.. முதல்ல செத்த நாழி போய் படுத்தா... பின்னாடியே வந்து மேல ஏறிக்கிட்டு கத சொல்லுன்னு அடம் பிடிக்கிற வாண்டுங்க.. பொறகென்ன விக்கிரமாதித்யன் கதையிலேர்ந்து

வேதாளம் கதை வரைக்கும் சொன்னா முன்னால் ஒருத்தன் ஓடியாந்து வைத்து மேலே உட்கார்ந்து கிட்டு கதை சொல்லு கதை சொல்லு கேட்கிறான் விக்கிரமாதித்தன் கதையில் இருந்து வேதாளம் கதை வரைக்கும் மூச்சுமுட்ட சொல்லணும். அப்ப சொல்லசொல்ல சிலது உம் கொட்டி தூங்கிடும். கொஞ்ச வளந்த வாண்டுங்க கெக்கே பிக்கேன்னு சிரிச்சிக்கிட்டுப் போவும்.. அப்புறம் எங்கே நான் தூங்கி ஓய்வெடுக்கறது?..

புள்ளகளுக்கும் சோறு ஊட்டணும். அவளுங்க ஊட்டுக்காரங்களுக்கும் சோறு போடணும்.. எல்லாருமா சேர்ந்து என்னய வேலக்காரி ஆக்கிப்புட்டாளுகளே… பத்து நாளா வந்த பரப்பரப்பு ஓயல. கால சக்கரம் போல சதா ஓடிக்கிட்டே இருக்குது.

ஏய்.. மாலதி அதோ பார்டி உம்புள்ள மரம் ஏறுறான்னு சொன்னா காதுல வாங்க மாட்றா. நீயே பாருங்கறா.. அந்தக் காலத்துலயும் அண்ணந்தம்பி புள்ளங்க ஊடு கொள்ளாமத்தான் கெடக்கும்.. அப்பலாம் மண்ணுல உருண்டு பொரண்டு வளந்திச்சிக. வருசத்துக்கு ஒன்னுன்னு பெத்துபோட்டா இரண்டு போயி ஆறு வளந்து ஆளாகிட்டுதுங்க. தோதான் பிறந்த மாதிரி இருக்கு. அதுஅதுகளுக்கு இரண்டு ரெண்டுன்னு கணக்கு வச்சி பெத்துக்கிட்டதுக. வீடுநெறஞ்சி புள்ளங்க கராமுரான்னு கெடந்திச்சிங்க. வீடே ஒரே ரணகளமா இருந்திச்சி.

எல்லாரும் அவங்கவங்க வேலயப் பாக்க அவங்கவங்கக் குடும்பத்தோட மூட்ட முடிச்சிக் கட்டிக்கிட்டு கௌம் பிட்டாங்க. சத்தமா இருந்த வீடு முழுக்க நிசப்தமா இருந்திச்சி. ஏதோ யோசனைல பெட்டிக்கிட்ட போயி நின்னேன். ‘இவ்ளோ நாள் எங்கள மறந்துட்டீங்க‘ ன்னு சக்கரை மாத்திரை, இரத்தக்கொதிப்பு மாத்திரை, மூட்டுவலி மாத்திரை எல்லாஞ்சேந்துகிட்டு என்னை மொறக்கிதுங்க.

‘எல்லாத்தயும் தூக்கி எறிஞ்சிட்டு ஒன்னு கத்தறேன். ‘‘எனக்குப் பேரப் புள்ளங்க திரும்ப வேணும்’’ னு அழுவறது போய்க்கிட்டிருக்கவங்க காதில விழுமா?… திரும்பி வருவாங்களா....



# பாரியன்பன் நாகராஜன் - கவிதைகள்

காலி குடமோ
கவிழ்ந்த பானையோ
உள்ளே இருக்கும் காற்று.

பழங்களைத் தின்ற பறவைகள்
எச்சங்களில் பிரசவிக்கிறது
உயிர் மரங்களை.

எவ்வளவு முயன்றும்
பூவின் மேலுள்ள
ஒற்றைப் பனித்துளியின்
அழகை அமர்த்த முடியவில்லை
கவிதையில்.

யாருமற்ற பாலையில்
தனிமையில் தியானிக்கும்
ஒற்றை நிலா.

பிறரை
குறைசொல்ல விருப்பமில்லை
என் குறைகளை
களைந்து கொள்வதே உத்தமம்.

மலையைப் பார்த்து
குரைக்கும் நாய்
அச்சமின்றி கூண்டுக்கிளி.

கதவிடுக்கில்
கசியும் வெளிச்சம்
அறையில் ஒளிரும் விளக்கு.

விதைத்தது
யாரென்று பார்ப்பதில்லை.
விதைகளை விழுங்கிய மண்.

இரவின்
விழித்திரையில்
இல்லை வெளிச்சம்.

விழித்துக் கொண்டிருந்தது
என்னுடன்
தூக்கம் வராத இரவு.

உன் வரத்தால்
சாம்பலானது
என் சாபங்கள்.

கணையின் வழியே
உயிர்க்குடிக்கும் வேடனின்
கருணையற்ற பார்வை.

வடித்த சாதத்தை
வறுத்து தின்பதால்
வயிற்றில் அமிலச் சுரப்பு.

நூற்கண்டு துணையுடன்
வானமேறினாலும் பிரதானமாய்
காற்றை மட்டுமே சிரசில்
சுமக்கிறது பட்டம்.

நிலமிழந்த ஏழைகளின்
வயிறாய்க் கொதிக்கிறது
நிலா வரும் வேளையிலும்
மரங்களை இழந்த எட்டுவழிச்சாலை.

நான் தொலைந்ததை
சொல்லிக் கொண்டிருக்கிறேன்.
என்னைக் கண்டெடுத்ததை
சொல்லி மகிழ்கிறாய் நீ.

மறைய இடம் கிடைத்ததும்
இனிதே தொடங்குகிறேன்
கண்ணாமூச்சி ஆட்டத்தை.

வெளிச்சம் குழைத்த
பகலின் சுடர்க்கொண்டு
கனவில் தேடுகிறேன் உன்னை.



பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602



# சுவனத்தின் நிழல்

நீ நேசிப்பவராக மட்டுமிரு
உன்னை வெறுப்பவரையும் சேர்த்து..

உன் புன்னகை இதழ்
வாடிவிடாது பார்த்துக்கொள்
உனதன்பின் ஆயுதம் அதுதான்

இரக்கத்தை அணையா தீபமாக்கு
உன் இறப்பிற்கு பின்பும்
ஒளிரும் கருணைவிளக்கு...

பலகீனப்பட்டபோதும் அன்பு
பலமானதென்பதை நம்பு...

தண்டனையை விட மன்னித்தல்
நலமென்பதை விதை
விருட்சமாகும் நல்மரநிழல்கள்..

ஆயிரம் அமானங்கள்
வாழ்வின் படிமானங்கள்
அவமானங்களை வெகுமானமாக்கு
படிமானங்கள் பிடிமானமாகும்..

பழிசொற்கள் இழிசொற்கள்
பகைவருக்கு விருப்பு
அதைகடந்து அதற்குள்ளும்
அன்பை நுழைக்க விரும்பு..

இரக்கத்தை
இருவிழிகளில் தேக்கு
அன்பினை அணைப்பினில் ஊட்டு
நரகத்தின் வெப்பமது நீங்கி
வாழும்காலமதிலேயே
சுவனத்தின் நிழல்கிட்டும்...

**- மலிக்கா ஃபாரூக்**
முத்துப்பேட்டை

## நீங்களும்... நானும்...!

கவித்திலகம் வெற்றிப்பேரொளி

*
என்
கோபம் என்பது
என் கோபம் மட்டுமில்லை
அதில்
உங்கள் கொதிப்பும்
கலந்திருக்கிறது!

*
என்
கண்ணீர் என்பது
என் கண்ணீர் மட்டுமன்று
அதில்
உங்கள் துயரங்களும்
சொட்டிக்கொண்டிருக்கின்றன!

*
என்
புன்னகை என்பது
என் புன்னகை மட்டுமா?
அதில்
உங்கள் மகிழ்ச்சி வெளிச்சம்
படர்ந்திருக்கிறது!

*
என்
கனவு என்பது
என் கனவு தானா?
அதில்
உங்கள் வண்ணங்களும
படிந்திருக்கிறது!

*
என்
கவிதை என்பது
என் கவிதை மட்டுமேவா?
அதில்
உங்கள் உணர்வுகள்
ஒன்றியிருக்கிறது!

*
ஆக...
எனக்குள் நீங்கள்....!
உங்களுக்குள் நான்... !

# பிறகு சாப்பிடுகிறேன்!

**பேராசிரியர். முனைவர். சி.அ.வ. இளஞ்செழியன்**

இன்று மிகச்சரியாக 1.50 - க்கு தாம்பரம் வந்து சேர்ந்தது வைகை. D3 கோச்சிலிருந்து இறங்கி மேம்பாலம் செல்லவே நேரம் பிடித்தது. கிட்டதட்ட ஒரு கிலோமீட்டர் இருக்கும். அவ்வளவு தூரம் நடந்துசென்று படியேறியதால் நெஞ்சில் எரிச்சல். தண்ணீர் போத்தலி லிருந்த கடைசித் தண்ணீரால் நெஞ்சை நனைத்துக்கொண்டேன். மேம்பாலத்தில் நடந்தபோது வீசிய இதமான சிலுசிலு காற்று அசதியை ஆசுவாசப்படுத்தியது.

ஸ்டேஷனை விட்டு வெளியேறி ஜி.எஸ்.டி சாலையை அடைந்தாயிற்று. வெய்யிலின் உக்கிரம் வியர்வையை ஊற்றி வைக்க முதுகில் ஒட்டிக் கொண்டிருந்த சட்டையை எடுத்துவிட வேண்டியிருந்தது. நெற்றியில் இருந்து கசிந்தவியர்வைகண்ணிமைகளில்கசகசக்க கண்களில் எரிச்சல். நீர்க்கடுப்பின் சுருக் சுருக் இம்சை வேறு. தோள்பட்டையில் மாட்டியிருந்த லேப்டாப் பேக்கில் லேப்டாப் மட்டுமின்றி நிறையப் புத்தகங்களை எடுத்து வந்திருந்தேன்; பயண நேரத்தில் படிப்பது வழக்கம். தோள் கடுகடுத்தது சுமையால். அசௌகரியத்துடன் தான் நடந்து கொண்டிருந்தேன்.

கடைசி நீரையும் அருந்தியாயிற்று. மீண்டும் தாகம் எடுத்தது. வீடு போய்ச்சேர குறைந்தபட்சம்இன்னும்ஒருமணிநேரமாவது ஆகும். சீப்ரா கிராஸிங் அனுமதிக்கப்பட்டு பாதசாரிகள் கடந்து செல்ல அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சாலையை குறுக்கே கடக்க அவசரமாக நடந்து சென்றுகொண்டிருந்தேன்.அந்தநேரத்தில்ஓர் அம்மா «ஒரு பத்து ரூபார்ந்தா குடுங்கையா» என்று கேட்டார். நடந்துகொண்டிருந்தபோது கேட்டதால் பொருட்படுத்த முடியவில்லை.

அந்த அம்மா கேட்ட தொனி ஏனோ மனதை குடைவதாயிருந்தது. கடந்து சென்ற நிலையிலும் யார் எனத் திரும்பிப்பார்த்தேன். குடும்பத்துப் பெண் ணாக இருந்தார். ஒரு 55 அல்லது 60 வயதுக்குள்ளிருக்கும். இத்தனைக்கும் நல்ல உடைதான் உடுத்தியிருந்தார். ஆக, நிச்சயமாக பிச்சைக்காரியில்லை. இதோ 10, 9, 8, 7 என எண்கள் குறைந்து கொண்டே இருந்ததால் அவசரமாக ஸீப்ரா கிராஸிங்கைக் கடந்து எதிர்ப்புறம் சென்ற பின் திரும்பவும் அவர்களைப் பார்த்தேன். வேறு யாரையோ கேட்டுக்கொண்டிருப்பது தெரிந்தது. இல்லை எனக் கையாட்டிவிட்டுச் சென்று கொண்டி ருந்தார் அந்த நபர். நான் நின்று கொண்டிருந்த இடத்தினருகில் ஒரு நாலைந்து பேருந்துகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து எதிர்புறத்துப் பார்வையை மறைத்து வைக்க அதனால் அந்த அம்மாவின் அடுத்த முயற்சியைப் பார்க்க முடியாமல் போயிற்று.

வெகு நேரம் ஆகியும் 21 ஜி வரவில்லை. கோட்டூர்புரம் செல்ல வேண்டியவன். பசி வாட்டியது. வைகை; விருத்தாச்சலம் வந்த போதே வீட்டிற்கு போன்செய்து சுண்டைக்காய் கடைசல் குழம்பும் கருணைக்கிழங்குப் பொறியலும் உளுந்து வடையும் என மெனு சொல்லி யிருந்தேன். வழக்கமாக கேட்கும் மெனுதான்.

இதோ 21 ஜி ஹாரன் அடித்துக் கொண்டே வருகிறது. ஒரு முதியவர் பஸ் வருவது தெரியாமல் பொறுமையாக நடந்து வந்துகொண்டிருந்தார். அவரை இழுத்து ஓரமாக விட்டுவிட்டு படிக்கட்

கதவு திறந்தவுடன் ஏறினேன். காது மந்தம் போலும் என்று நினைத்துக்கொண்டே எதிர் சீட் கிடைக்க அமர்ந்தேன்.

பேருந்து கிளம்பிய இரண்டு நிமிடத்தில் மனைவி போன் செய்தாள். “தாம்பரம் எறங்கி பஸ் ஏறிட்டேன்” என்று சொன்னவுடன் ‘‘சரி வாங்க, சாப்பாடு ரெடியாதான் இருக்கு; வந்தவுடனே சாப்பிடலாம்” என்றாள்.

குரோம்பேட்டை சரவணா ஸ்டோரை பல முறை பார்த்திருந்தபோதும் இந்தமுறை அதன் முகப்பில் பனை மரம் நடப்பட்டிருந்ததைக் கவனித்தேன். மேலை நாட்டுக் கவர்ச்சிகரமான தாவரங்களைத் தவிர்த்து உள்ளூர் பனைமரம்; ‘அடடா’ என உள்ளுக்குள் பாராட்டினேன்.’’

நினைவிலிருந்து பனை மரம் நீங்கிக் கொண்டிருந்த நேரத்தில் “ஒரு பத்து ரூபார்ந்தா கொடுங்கையா” என்ற சுருதி சுத்தமாய் அந்தக் குரல்; மீண்டும் ஒலித்தது என்னுள். அசதிதான் என்றாலும் கையறுநிலையினூடன அந்தக் குரலின் மீளொலிப்பினால் எழுந்து நின்றுகொண்டேன் ஒரு முதியவரை உட்காரச் சொல்லிவிட்டு.

அந்த அம்மா கண்டிப்பாகப் பிச்சைக் காரியில்லை. தாலி அணிந்திருந்தாற் போல் நினைவு. பின் ஏன் காசு கேட்டார்கள்? குழப்பமாக இருந்தது. கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு வந்து விட்டார்களா அல்லது ஊருக்குப்போகத் தாம்பரம் வந்த நிலையில் பணம் தொலைந்துவிட்டதா அல்லது தாம்பரத்திலிருந்து அருகில் உள்ள சேலையூருக்கோ அல்லது முடிச்சூருக்கோ அல்லது கூடுவாஞ்சேரி போன்ற இன்ன பிற ஊருக்கோ செல்லவேண்டியவரா? பல கேள்விகளை அடுக்கிக்கொண்டிருந்தது என் ஆய்வு மனம். இவ்வளவு தூரம் இதனை எண்ண எனக்கு எது தூண்டுகிறது என்று தெரியவில்லை. எனினும், அந்த அம்மாவின் தோரணை; கேட்ட தொனி; குரலில் இருந்த திடீர் இறக்கம்; பிச்சைக்கேட்டுப் பழகாததொரு புதுக்குரல் என அவர்களிடமிருந்த உண்மைத்தன்மை என்னை இந்த அளவிற்குச் சலனப் படுத்தியிருந்தது போலும்.

பத்து ருபாய் மட்டுமே கேட்டார்கள்.



அதுவும், ஒரு பத்து ரூபாய் மட்டுமே எனக் குறிப்பிட்டுக் கேட்டார்கள். அந்த துரதிஷ்ட நிலையை சரி செய்ய அவர்களுக்கு வெறும் பத்து ரூபாய்தான் தேவைப்படுகிறது போலும். கிடைத்தால், பழையபடி நிலைமை சீராகிவிடும் போலிருந்தது அவர் கேட்ட தொனி. அவ்வாறு பத்து ரூபாய் கிடைத்த பின் நிச்சயமாக இன்னொரு பத்து ரூபாயை எவரிடமும் கேட்கமாட்டார் என என் உள்மனம் அடித்துச் சொல்லிக்கொண்டிருந்தது. திரும்பிச் சென்று அவர் கேட்ட பத்து ரூபாயைக் கொடுத்துவிட்டு அடுத்தமுறை அனுமதிக்கப்படும் சீப்ரா கிராசிங்கை நான் பயன்படுத்தியிருக்கலாம். உதவும் எண்ணம் கொண்ட மற்றும் உதவுகிற பண்பும் உள்ள நான் சிலமுறை இப்படி சுய நலத்துடன் நடந்து கொள்ள நேரிடுகிறது.

போலிப் பிச்சைக் காரர்கள் மற்றும் போதை ஆசாமிகளின் நடவடிக்கைகளால் சில நேரங்களில் அவ்வாறு நம்மை உதவ எண்ணமில்லாமற் செய்துவிடுகிறது. ஒரு ரூபாய் ரெண்டு ரூபாயெல்லாம் கேட்காமல் நேராக பத்து ரூபாய் கேட்பதை எவரும் பொருட்படுத்த மாட்டார்கள்தான். அதுவும் கறாராக பத்து ரூபாய் வேண்டும் என்று கேட்பதால் கடுப்பாகிவிடலாம். ஓ! இப்பல்லாம் மினிமமே பத்து ரூபாதானா? என உள்ளுக்குள் எரிச்சலாகி சிலர் கடந்திருக்கலாம் கூட. ஆனால், அதற்கு கீழே கொடுத்தால் மூஞ்சில் விட்டெறிவேன் என்ற தோரணையில் அவர் கேட்பதாக இல்லை. பத்து ரூபாய் என்பது அவர்களது அந்த

## பனைவளம் காப்போம்

எங்கள் ஊரெலாம் ஓங்கியே வளர்ந்து
ஏற்றம் செய்யுமே ஒப்பிலாப் பனைகாண்!
பொங்கு நற்றமிற் புவியிலே வளமாய்ப்
போற்றி மாந்தரே யேற்றுநற் தருவே!
மங்கு மோபுகழ்? மாறுமோ சொல்வாய்?
மலங்கி யேங்கிடும் வாழ்வதும் மாற
கங்குல் நீக்கியே கதிரொளி பரப்ப
காண்க நீயுமே கலங்கரைப் பனையே!

பெட்டி பாயதும் பிள்ளைகள் புரள
பிடித்த நற்றடுக் குமாகுமே தருவே!
கட்டும் வீட்டிலே விட்டமா கும்காண்
கடகப் பெட்டியும் நாரினா லாகும்
எட்டிப் பார்க்கவும் இடமிலா வேலி
ஏற்றி வேய்ந்திடக் கூரையு மாகும்!
தட்டி விட்டிடக் களிவென உண்டோ?
தங்கம் போலுமே கற்பக தருவே!

உற்ற நற்றொழில் கற்றவர் செய்ய
உற்ற நண்பனாம் பனைமரம் தானே!
சுற்றம் கூடியே சூழலைக் காக்க
சுற்றி வேலியாய் ஓங்கிடச் செய்வர்
செற்ற மும்பயங் கொள்ளுமே தோப்பால்
சேருங் காற்றுமே பணிந்தக லுமாமே!
பெற்ற நற்றரு பேணியே காப்போம்!
பிள்ளை போலவே வடலியை வளர்ப்போம்

**வெற்றியிசை**



நேரத்துத் தேவையே ஒழிய வழக்கமாகக் கேட்கும் பிச்சையாக இல்லை. உண்மையில் அவர்கள் கேட்டது உதவிதான்; பிச்சையில்லை. கோட்டூர்புரம் இறங்கி வீட்டுக்குப் போய்ச்சேர மூன்றேகால் மணியாகிவிட்டிருந்தது. முகம், கைகால் கழுவிக்கொண்டு சாப்பிட அமர்ந்தேன். சரியான தலைவலி. பசி வந்துவிட்டால் ஒற்றைத் தலைவலி வந்துவிடும் எனக்கு. பஸ் ஆசர்கானா நெருங்கும்போதே தலைவலி ஆரம்பித்துவிட்டது. சாதத்தை பிசையும் நேரத்தில் சொல்லி வைத்தாற்போன்று அந்த அம்மாவின் குரல் மீண்டும் ஒலித்தது.

பத்து ரூபாய்க்கிடைத்ததா? அல்லது இன்னமும் அந்தப் பத்து ரூபாய்க்குப் போராடிக்கொண்டுதான் இருக்கிறார்களா? இரண்டிரண்டு ரூபாயாகக் கேட்டிருந்தால் இந்நேரம் கிடைத்திருக்கலாம் கூட. இதே பிச்சை எடுப்பவர்களாக இருந்திருந்தால் வெறும் கையை மட்டுமே ஏந்தியிருப்பர். இவ்வளவு தாருங்கள் அவ்வளவு தாருங்கள் என்று கேட்டிருக்கமாட்டார்கள்.

என்ன செய்து கொண்டிருக்கிறதோ அந்த அம்மா பாவம் எதிர்வெய்யிலில்?

நீங்க வந்த பின்னே வடைய சூடா சுடலாம்னு...

"சாப்டுக்குணே இருங்க, தோ! ரெண்டு நிமிடத்துல சூடா எடுத்துக்குனு வரேன்".

பரிமாறிவிட்டுப் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள் மனைவி.

திரும்பிச்சென்று கொடுத்துவிட்டு வந்திருக்கலாம். என்ன பெரிய பசி? இப்போது சாப்பிட மனம் வரவில்லையே என்ன செய்ய?

வடையின் மொறுமொறுப்பின் வாசம் வீட்டில் பரவியிருப்பினும் மூக்கைத் துளைக்கவில்லை. சோற்றைப் பிசைந்து கொண்டே இருந்தவன் பிறகு சாப்பிடுகிறேன் என எழுந்து விட்டேன்...

ஐயையோ ஏங்க? பஸ்ல வரும் போதே பசிக்குதுன்னீங்க!

ஒரு சொட்டுக் கண்ணீர் என்னையும் அறியாமல் விழியோரத்தில் பிரசவித்திருந்ததை உணர்ந்த நான் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டேன்.

வடையாவது சாப்பிடுங்க! ■

## உண்மையாக இருந்தாலே போதும்...

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

எதிர்பார்ப்புக்கள் ஒரு கோடி உள்ளத்தை நிறைந்திருந்தாலும் அவை நிறை வேறுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தும் நிறைவேறிடத் தவறிடும் தருணங்களின் வலியானது மிகுந்த வேதனைக் குரியதாகும்..

தனக்காய் ஓர் உறவு.. அதில் என்றுமே குறையாத பாசம்.. சின்னதாய் சில சண்டைகள்..அதன்பின்னர் கெஞ்சலுடனான மன்னிப்புகள்... எப்போதுமே நிம்மதியை உணர வைத்திடும் உள்ளம்..

மணிக்கணக்கில் பேசாவிட்டாலும் ஒரு சில நொடிகளாவது ஆறுதலாய் பேசிட சில வார்த்தைகள்... ஒன்றாய் இருந்து மனம் திறந்து பேசுவதற்கான அழகிய மாலை நேர கடற்கரை மணல் களுடனான உரசல்கள்... உரிமையின்றி பறித்து உண்ணப் படும் உணவுகள்..

இவ்வாறான வைகளை கற்பனை களுக்குள் மட்டும் சிறைப்படுத்தி விட்டு நிஜ வாழ்க்கையில் நிழலாய் மட்டும் நடமாடிக் கொண்டிருக்கும் வேளையில் உடைந்து காயப்பட்டிருக்கும் மனதுக்கு, மருந்தாய் அமையும் ஓர் அழகிய உள்ளம் கிடைத்தாலே போதும் வாழ்க்கையை வாழ்ந்திட....

கசக்கப்பட்ட காகிதத்தை கஸ்தூரி கொண்டு நிரப்ப இறைவனால் நீர் எதிர் பார்க்காமலேயே பரிசாக அளிக்கப்படும் அவ்வாறான உறவின் மகிழ்ச்சிக்காய் எத்தனை தியாகங்களும் செய்திடலாம் என எண்ணும் உன் உள்ளமும் விலைமதிப்பில்லா பொக்கிஷம் தான்...

இறைவன் எப்போதுமே தொடர்ந்து கஷ்டங்களை அளிப்பதில்லை...

காலம் தாழ்த்தி வந்த உறவாக இருந்தாலும் கடைசிவரை பிரிந்திடாத உண்மையான உறவாக இருந்தாலே போதும் வாழ்க்கையை நிம்மதியாக வாழ்ந்துவிட... ■

நாட்டார் பாடல்

## நம்ம பேரு சொல்ல...

சேத்து வயலுக்குள்ள
சேல கட்டி போற புள்ள
சோல கிளியப் போல
சோக்காத்தான் நீ வாற மெல்ல

மீச கறுத்த மச்சான் உன்ன
ஆசப் பட்டு வந்தேன் பாரு
காசு சொத்து ஒன்னும் வேணாம்
ராசா நீயே போதும் போதும்

தன்னானே தன்னானே...

சாத்து செடியப் போல நீ
நேத்து மனசில் வளர்ந்தா புள்ள
காத்து உன்ன பாத்திருப்பேன்
சேர்த்தணைத்து வாழ்ந்திருப்பேன்

பிடி சோறு போட்டாப் போதும்
மாடி வீடு வேணாம் மச்சான்
மங்களமாய் வாழ்ந்திடுவோம்

தன்னானே தன்னானே...

நாலஞ்சி புள்ள பெத்து
வழிகெட்டு நாசம் போகாமல்
பாசத்தோட நேசங் காட்டி
படிக்க வைத்து வளர்த்திடுவோம்

என்னாச அதுதான் மச்சான்
இறையருளும் துணையிருக்க
எல்லாமும் நலமாகும்
நம்ம உயிரு போனாலுமே
நம்ம பேரு சொல்லி வாழட்டுமே

தன்னானே தன்னானே...

- ஏறாவூர் ஜிப்ரியா

# ஆணும் பெண்ணும் நிகர்

## மலர்விழி மணியம்

“அத்தை, காப்பி இந்தாங்க” என்று தோட்டத்தில் காய்கறிச் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த தன் மாமியாரிடம் காப்பி டம்ளரை நீட்டினாள் அனு.

“தேங்க்ஸ்மா” என்று தண்ணீர் பைப்பை அனுவிடம் கொடுத்துவிட்டு, டம்ளரை வாங்கிக் கொண்டார் பார்வதி. காபியை ஒரு வாய் குடித்துவிட்டு,

“நீ குடிச்சியா மா?” என்று கேட்டார்.

“இல்ல அத்தை. இனிமேதான்” என்றாள்.

“காப்பில சர்க்கரைக்குப் பதிலாக உப்பு போட்டுட்டமா. அதான் கேட்டேன்.” என்றார் பார்வதி புன்னகையோடு.

“ஐயோ!!! சாரி அத்தை.” என்று பதறினாள் அனு.

“பரவாயில்லை பரவாயில்லை. ஒன்னும் டென்ஷனாகாதமா . என்ன ஆச்சு? எதுவும் கவலையா உனக்கு?” என்று கேட்டார் பார்வதி.

“அதெல்லாம் ஒன்னும் இல்ல அத்தை. குடுங்க நான் உங்களுக்கு வேற காப்பி போட்டு கொண்டு வரேன்.” என்று டம்ளரை வாங்கிக் கொண்டு சமையலறையை நோக்கி ஓடினாள்.

மனம் கனத்தது அனுவிற்கு. எண்ண அலைகளில் தன் மன வலியை மென்று கொண்டிருந்தாள். வேறு ஒரு நல்ல காப்பியை தன் மாமியாருக்குப் போட்டுக் கொடுத்துவிட்டு, சமையலில் இறங்கினாள்.

“டிபன் ரெடியா அனு?டைம் ஆயிடுச்சு.” என்று கேட்டுக்கொண்டே வந்தான் அனுவின் கணவன் தீபக் .

“ம் “ என்று ஒரு எழுத்தை மட்டும் கனமாக கொட்டி விட்டு அமைதியாக டிபனை எடுத்துப் பரிமாறினாள்.

அவளின் அமைதியை உணர்ந்தவனாய்,” என்ன ஆச்சு?” என்று கேட்டான்.

“ஒன்னும் இல்ல. சும்மாதான். நான் போயி ஆர்யாவக் குளிப்பாட்டுறேன். நீங்க லஞ்ச் பாக்ஸ்ஸ மறக்காம எடுத்துட்டுப் போங்க.” என்று கூறிவிட்டு தன் இரண்டு வயது மகனை கவனிக்கச் சென்றுவிட்டாள்.

தன் தாயிடம் இருந்து விடைபெற்று வேலைக்குக் கிளம்பினான் தீபக். ஆர்யாவிற்கு உணவு கொடுத்து விட்டு பார்வதியுடன் சாப்பிட அமர்ந்தாள் அனு.

தன் மருமகளின் முகவாட்டத்தைக் கண்டு, “என்ன அனு. ஏன் மா டல்லா இருக்கே?” என்று கேட்டார்.

இதற்கு மேல் மறைக்க முடியாமல் பேசத் துவங்கினாள்.

“அத்தை, பெரியம்மாவுக்கு உடம்பு சரியில்லை. ஹார்ட் ஆபரேஷன் அடுத்தவாரம். அதான் மனசு கஷ்டமா இருக்கு.” என்றாள்.

“நீ போயிட்டு வா அனு. நான் பார்த்துகிறேன் வீட்டையும் தீபக்கயும்.” என்றார் பார்வதி.

மீண்டும், “ம்” ஐ இறக்கி வைத்தாள்.

அனுவிற்கு வேறு ஏதோ மனதில் ஓடுகிறது என்பது புரிந்தது பார்வதிக்கு. இருப்பினும் மிகுந்த கேள்விகளைக் கேட்டுக் காயப் படுத்தாமல் இருப்பது நல்லது என்று அமைதியானார். அனுவிற்கு பெரியம்மா என்றால் உயிர். தன் தாயிடம்

வளர்ந்ததை விட, தன் பெரியம்மாவிடம் வளர்ந்ததுதான் அதிகம். அதனால் அவரின் உடல்நலக்குறைவு அனுவை பாதிப்பதாக நினைத்தார் பார்வதி.

மாலை நேரம் ஆனது. தீபக் வேலையிலிருந்து திரும்பினான்.

“அனு … டீ தரியா?” என்று கேட்டான்.

அமைதியாக டீயைக் கொடுத்து விட்டு, “நான் கோயிலுக்குப் போயிட்டு வரேன்.” என்று ஆர்யாவுடன் கோவிலுக்குச் சென்றுவிட்டாள்.

தீபக், டீ கப்புடன் தோட்டத்திற்குச் சென்றான் தன் தாயைக் காண.

“இப்பதான் வரியாப்பா?” என்று பார்வதி கேட்டார்.

“ஒரு பத்து நிமிஷம் ஆச்சு மா?” என்றான் தீபக்.

“அனு என்ன செய்யறா?” என்று பார்வதி கேட்டார்.



ஓவியம் : ரஜினிகாந்தன்

# தலை என்பது...

விருப்பமில்லாமல் போக வேண்டிய
திருமணத்துக்கு
'சும்மா தலையைக் காட்டிட்டு
வந்துடலாம்' என்பது
அவ்வளவு சமாதானமாக
இருக்கிறது.

மரியாதை கிடைக்காத இடத்தில்
'இனி தலை வெச்சு படுக்க மாட்டேன்'
என்ற சபதம்
சுயமரியாதைக்கு மருந்து பூசுகிறது.

'எங்க போய் என் தலையை
முட்டிக்கிறதோ!'
இயலாமையின் கொந்தளிப்பு இது.

'என் தலையில அடிச்சு
சத்தியம் பண்றேன்' என்பது
நம்பிக்கைக்குப் பாத்திரமாகிறது.

வைராக்கியம் விடும் சவால்
'தலையை அடமானம் வெச்சாவது
கடனை அடைக்கிறேன்'
என்பதாக இருக்கிறது.

'உன்கிட்ட பேசாம
தலையே வெடிச்சிடும் போல
இருக்குது'
ஆத்மார்த்தமான உறவு
இப்படியாக கெஞ்சுகிறது.

விழாவின் போது
'தலைக்கு இவ்வளோ செலவு
ஆகுது' என்கிறது
வரவு செலவு கணக்குகள்.

'எல்லாத்துக்கும்
நான் தான் பொறுப்பா ?'
எனக் கேட்டபடி
தலை சுற்றுகிறது இப்போது.

உண்மையில்...
தலை என்பது
வெறும் தலை மட்டும் இல்லைதானே ?

**- தி.கலையரசி.**

"ஆர்யாவ தூக்கிக்கிட்டுக் கோயிலுக்குப் போயிருக்காமா" என்றான் தீபக்.

"ஹூம்ம்.. உன்கிட்ட கொஞ்சம் பேசணும். அனுவோட பெரியம்மாவுக்குக் ஹார்ட் ஆபரேஷனாமே, அனுவ ஒரு மாசம் அங்க அனுப்பி வைப்பா. ரொம்ப வருத்தப்படுற மாதிரி தெரியுது." என்றார் பார்வதி.

"அம்மா.. அவ வருத்தம் அது மட்டும் இல்ல. ஆபரேஷன் செலவுக்கு பணம் கொஞ்சம் கொடுக்கணும்னு நினைக்கிறா." என்றான் தீபக்.

"நல்ல விஷயம் தானே." என்றார் பார்வதி.

"அத என்கிட்ட அவ டைரக்டா பணம் வேணும்னு கேட்கலாம் இல்ல. அதுல என்ன ஈகோ அவளுக்கு. அதுவும் அவ அம்மான்னா பரவாயில்லை. அவளோட பெரியம்மாக்கு எல்லாம் ஏன் செய்யணும்னு புரியல." என்றான் தீபக்.

தீபக்கின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ச்சியானார் பார்வதி.

"அதுக்கு பேரு ஈகோ இல்ல தீபக். தன்மானம். தாலி கட்டி ஒரு பொண்ணு ஒரு வீட்டுக்குப் போகும் போது கணவனையும் கணவன் குடும்பத்தாரையும் சேர்த்து கவனிக்கணும் எதிர்பார்க்கிறோம். அதே மாதிரி ஒரு கணவனும் நடந்துக்கணும் பா " என்றார் பார்வதி.

"அம்மா, நான் கேட்டா செய்ய மாட்டேன்னா சொல்ல போறேன்?" என்று கேட்டான் தீபக்.

"சில விஷயங்கள் அவ கேட்காமலே அவ மனசு அறிஞ்சு செய்யணும். அதுதான் நல்ல தாம்பத்தியம். ஆரோக்கியமான உறவு. உனக்கும் இந்தக் குடும்பத்துக்கும் செய்யறத எல்லாம் கேட்டுட்டா செய்யுறா?. அவ நின்னு ஆணிவேரா இந்தக் குடும்பத்தப் பார்த்துக்கிறதுனால தான், நீ நிம்மதியா வெளிய போயி வேலை செஞ்சு சம்பாதிச்சுக் கொண்டு வர முடியுது. அத மறந்துடாத. அவளுக்கு யாரு முக்கியம், அவ யாருக்கு முக்கியத்துவம் தரனும்றத நீ முடிவு செய்யாத தீபக். அதையே அவ உன் மேல திணிச்சா நீ

ஏத்துப்பியா?” என்று கேட்டார்.

“இல்லம்மா....” என்று இழுத்தான் தீபக்.

“உன் வாழ்க்கையிலயும், உன் சம்பாத்தியத்துலயும் உன் மனைவிக்கும் சம உரிமை உண்டு.” என்றார் பார்வதி.

“அம்மா அவ சாப்பிடுறதுக்கும், போடுற டிரெஸ்ஸுக்கும் நான் தானே செலவு பண்றேன்.” என்று கேட்டான் .

“தீபக்... சாப்புடுற சாப்பாட்டுக்கும் உடுத்துற உடைக்கும் யாரையும் சார்ந்து இருக்கக் கூடாதுன்னு தான் பெண் பிள்ளைகள படிக்க வைக்கிறாங்க. படிச்சவங்களோ படிக்காதவங்களோ தன்மானங்கிறது எல்லாருக்கும் பொது வானது. இந்த நிமிஷம் கூட பேக்கை எடுத்துட்டு வெளியே அவ போனா ஆயிரம் வேலை செஞ்சு சம்பாதிப்பா. நீ போடுற சாப்பாட்டுக்குக் கூட அவ யாரையும் சார்ந்து இருக்கணும்னு அவசியம் இல்ல. சொல்லப்போனா நீ சாமானத்தான் வாங்கித் தர. சமையல் அனு தான் செய்யுறா. நீயும் தான்பா அனுவ சார்ந்து இருக்குற. உன்னையும் இந்த குடும்பத்தையும் பார்த்துக்கிறதுக்காக மட்டும் தான் வேலைக்கு போகாம வீட்ல இருக்கா. அவ வேலைக்கு போனா, அவ செய்யுற அத்தனை வேலைக்கும் நீ ஆள் வச்சா எவ்வளவு சம்பளம் கொடுப்பனு யோசிச்சு பாரு. அவளை நீ வேலைக்காரியா பார்க்காம மனைவியா, உன்னுள்ள பாதியா பார்த்தா நீ சேமிக்கிறதுல பாதிய நான் சொல்லாமயே நீ அனுவுக்குக் கொடுத்திருப்ப.” என்றார் பார்வதி.

“சரிமா புரியுது.. ஆனா ஒரு மாமியாரா நீங்க இப்படி பேசறது, எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு!!” என்று வியந்தான்.

“ஹாஹாஹாஹா... அது ஒன்னும் இல்லப்பா, நான் பட்ட கஷ்டம் என் மருமகளுக்கு வேண்டாம்னு நினைக்கி றேன்.” என்றார் பார்வதி.

சிரித்துக் கொண்டே சொன்னாலும் பளாரென்று அறைந்தது போல் இருந்தது தீபக்கிற்கு.

## ஆக்கங்கள் அனுப்பும் அன்பர்கள் கவனத்திற்கு...

எழுத்தாளத் தோழமைகளே... உங்களில் சிலர் ஆக்கங்களில் தங்களின் பெயரை பதிந்திட மறந்துவிடுகிறீர்கள், எழுதியவர் பெயர் இல்லாது எப்படி உங்கள் ஆக்கங்களை வெளியீடு செய்வது.? ஒவ்வொரு ஆக்கத்திற்குக் கீழும் தங்களின் பெயரைத் தமிழிலும், தொடர்புக்காக அலைபேசி எண்கள் அல்லது மினனஞ்சல் ஐடியையும் அவசியம் பதியவும்.

தவிர, ஒரே ஆக்கத்தை ஒரே நேரத்தில் இரண்டு அல்லது பல இதழ்களுக்கு அனுப்ப வேண்டாம். ஒரு இதழுக்கு ஆக்கத்தை அனுப்பிவிட்டு கொஞ்ச காலம் பொறுத்திருப்பது அவசியம். ஆக்கங்கள் கிடைக்கப் பெற்றதற்கு தனித்தனியே தகவல் தர இயலாமைக்கும் வருந்துகிறோம். அதற்கு போதிய நேரமின்மையேக் காரணமாகும்.

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப் பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் **உறுதியையும் தருதல் அவசியம்.**

ஆக்கங்களை மின்னஞ்சல் முகவரிக்கே அனுப்புவது நல்லது. புலனம், முகநூல் உள்பெட்டிகளில் அனுப்புவது சில நேரங்களில் தேடுவதற்கு சிரமமாகிறது. தவறியும், விடுகிறது. எங்களுடன் கைகோர்த்துப் பயணிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நன்றி!

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு,
நிர்வாகிகள்

“உன் அப்பா என்னய நடத்தின விதத்தப் பார்த்து நீ உன் மனைவிய அந்த மாதிரி நடத்த மாட்டேன்னு நான் நெனச்சேன். ஆனா நீ உன் அப்பா என்ன நடத்தின மாதிரியே அனுவ நடத்துவேன்னு நான் கொஞ்சம் கூட எதிர் பார்க்கவே இல்ல. தீபக் நிச்சயம் நீ மாறனும். நீ எந்த மாதிரி உன் மனைவிய நடத்துறியோ அதையே உன் மகனும் ஃபாலோ பண்ணுவான். அத மறந்துடாத. நல்ல ஒரு அப்பாவாக இருந்து ஆர்யாவ வழிநடத்து.” என்றார்..

“யூ ஆர் கிரேட் மா!!” என்று அணைத்துக்கொண்டான்.

ஒரு மணி நேரம் கழிந்தது.

கோவிலில் இருந்து வீடு திரும்பிய அனு, இரவு உணவை சமைக்க சமையலறைக்குச் சென்றாள். பார்வதி உணவு தயார் செய்து கொண்டிருப்பதைக் கண்டு,

“சாரி அத்தை பசிக்குதா. லேட்டா வந்துட்டேனா?” என்று கேட்டாள்.

“அதெல்லாம் இல்லம்மா. டெய்லியும் நீதான செய்யற இன்னைக்கு ஒரு நாள் நான் செய்யலாமுன்னு தான். தீபக் உனக்காக வெயிட் பண்றான் மா. என்னன்னு போயி பாரு.” என்று பார்வதி ஆர்யாவை வாங்கிக் கொண்டு, அனுவை அனுப்பி வைத்தார்.

“சரிங்க அத்த” என்று கூறி தீபக்கைக் காணச் சென்றாள்.

தீபக் தோட்டத்தில் அனுவிற்காகக் காத்திருந்தான்.

“வா அனு” என்று தன் அருகில் அமரச்செய்து ஒரு கவரை நீட்டினான்.

“என்னங்க இது.?” என்று கேட்டாள்.

“இதுல இருபதாயிரம் பணம் இருக்கு. நாளைக்கு நீ ஊருக்குப் போக ட்ரெயின் டிக்கட்டும் இருக்கு. இனிமே மாச மாசம் நான் உன் அக்கவுண்ட்ல பத்தாயிரம் போடுறேன். உனக்கு அத வச்சு என்ன செய்யனுமோ யாருக்கு தரணும்னு நினைக்கிறயோ. என்ன வாங்கனும்னு ஆசை படுறியோ, யூ கேன் டூ இட். நான் கணக்கெல்லாம் கேக்க மாட்டேன். என்னோட சம்பளத்துல வீட்டு செலவுகள் போக இருபதாயிரம் சேமிக்குறேன். அதுல பாதிய நான் இனிமே உனக்குத் தரேன். இனிமே சம உரிமையான சம மரியாதையான வாழ்க்கைய வாழலாம்.” என்றான்.

கண்ணீரோடும் ஆச்சர்யத்தோடும், “ தேங்க்யூ சோ மச்!” என்றாள்.

“அம்மாக்குத் தான் நீ நன்றி சொல்லனும்.” என்றான்.

சமையல் அறையை நோக்கி ஓடினாள் அனு.

“அத்த, தேங்க்யூ சோ மச்” என்று அணைத்துக் கொண்டாள்.

“பல குடும்பங்கள் ல ஒரு பெண்ணுக்கு எதிரி இன்னொரு பெண் தான். ஆனா நம்ம வீட்டுல அப்படி இல்ல. இந்தக் குடும்பத்துல இருக்குற எல்லாருக்கும் என்னென்ன தேவைன்னு பாத்து பாத்து செய்யுற. உன் தேவை என்னன்றத கொஞ்சம் தீபக்குக்கும் புரிய வச்சேன்” என்றார் பார்வதி.

மீண்டும் நன்றி கூறி, மகிழ்ச்சியோடு தன் பெரியம்மாவைக் காணக் கிளம்பினாள் அனு.

■

## பெண்

ஆண்கள் போட்ட சட்டத்திலும்
அவர்கள் போட்ட வட்டத்திலும்
குந்தியிருக்க
பிறந்தவர்களா பெண்கள்

வீட்டினுள்
பெண்களைப் பூட்டி
அடுப்பங்கரைதான்
கதி என்று
ஆழப்பதியப்பட்ட விந்தைதான் என்ன

பட்டங்கள் பல பெறவும்
சட்டங்கள் இயற்றவும்
தரணியில் தனித்துவம்
பெறுவோமடி நாம்



**சமீஹா சபீர்**
ஏறாவூர்

# காத்திருக்கிறேன்..

நான் காத்திருக்கிறேன்;
எனக்கான, என் வாழ்க்கைக்காக...

என் தனிமை காத்திருக்கிறது;
என்னவனின் வருகைக்காக...

எனது கண்கள் காத்திருக்கிறது;
எனக்காக இறைவனால் படைக்கப்பட்ட
என்னவனைக் காண்பதற்காக...

எனது வாய் காத்திருக்கிறது;
என்னவனின் செவிகளில்
கொட்டித் தீர்ப்பதற்காக...

எனது இதயம் காத்திருக்கிறது;
என்னவனின் அன்பிற்காக...

எனது மனவலிகள் காத்திருக்கிறது;
என்னவனின் அன்பான
ஆறுதல் வார்த்தைகளுக்காக...

எனது தவிப்புகள் காத்திருக்கிறது;
என்னவனின் மார்பில்
முகம் புதைத்து அழுவதற்காக...

எனது கவலைகள் காத்திருக்கிறது;
என்னவனின் தோள்
சாய்ந்து பரிமாறுவதற்கு...

எனது சிறுபிள்ளைத்தனம்
காத்திருக்கிறது;
என்னவன் சிரித்து மகிழ்வதற்கு...

எனது கிறுக்குத்தனம் காத்திருக்கிறது;
என்னவனின் கண்கள் குளிருவதற்கு...

எனது விளையாட்டுத்தனம்
காத்திருக்கிறது;
என்னவனின் செல்லமான
கன்னக்கிள்ளலுக்கு...

என்னவன்; எங்கிருக்கின்றான்,
எப்படி இருக்கின்றான் என்று
எனக்கும் தெரியாது;
ஆனாலும்,
அவனுக்காக நித்தமும்
காத்திருக்கிறேன்.

படைத்தவன்; அவனுடன்
ஒன்று சேரப்பான்
ஹலாலான முறையில்...
அந்நாளுக்காக காத்திருக்கிறேன்...

அன்று தான்;
எனது வாழ்வின்
திருப்பு முனையாக இருக்கும்;
என்னவனின் வருகை...

பலருக்கு கேள்விக்கு விடையாகவும்,
சிலருக்கு விடைக்கு கேள்வியாகவும்
இருக்கும் என்னவனின் வருகை...

அன்று தான் என் வாழ்வில்
ஒளியேற்றிட வருவான்;
நான் என்றும் காத்திருக்கிறேன்
என்னவனுக்காக!!!..

**ஷஹ்னா ஸப்வான்**
தர்கா நகர்
இலங்கை

# தாயைப் போற்றுவோம்

— வஃபீரா வஃபி

உலகத்தில் தாயின் மகத்துவம் தெரிந்த பெரும்பாலானவர்கள் இருந்தாலும், தாயவளின் அருமை தெரியாத சிலரும் நம்மில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இது ரொம்பவும் வேதனைக்குரியது. எனது உறவுக்காரப் பெண்ணொருத்தி தன் இளம் வயதில் பல இன்னல்களுக்கு மத்தியில் வளர்ந்தவர். கல்யாண வாழ்க்கையும் அவருக்குக் கைகொடுக்காமல் துரோகம் இழைக்க,தன் மூன்று குழந்தைகளையும் சொல்லொணா சிரமப் பட்டு வளர்த்தவர். அவர்களின் நல்ல எதிர்காலத்துக்காக வெளிநாடு சென்று கஷ்டப்பட்டு உழைத்தது கொஞ்சநஞ்ச வருடங்களல்ல,ஏறக்குறைய 40 வருடங்களுக்கும் அதிக காலமாகும். அங்கும் அவர் சுகவாழ்க்கை வாழவில்லை. எந்நேரமும்கடினஉழைப்பு.உழைப்புக்கேற்ற ஊதியம் கூட கிடைக்காமல், கிடைத்ததை தன் பிள்ளைகளுக்கு அனுப்பி விட்டு, தமக்கென எந்த சந்தோஷத்தையும் தேடிக் கொள்ளாதவர். தம் பிள்ளைகள் நலனுக்காக அவர் தொலைத்தது தன் முழு இளமைக்காலத்தை. தன் கனவுகளை.இப்படி அவரின் தியாகங்களைப் பட்டியல் போட்டுச் சொல்லலாம்.இவருக்கென சொந்தமாக ஒரு அங்குலம் நிலமேனும் கிடையாது. உழைத்து உருக்குலைந்து உடல் தளர்ந்து, இனி தன்னால் முடியாது எனத் தாய்நாட்டுக்கு வந்த தாயின் நிலையோ அந்தோ பரிதாபம்! பிள்ளைகள் ஓரளவு வசதியாகவேதான் வாழ்கிறார்கள் சொந்த வீட்டில். வந்த புதிதில் தலைமேல் தாங்கியவர்கள், கையிலுள்ள இருப்பு குறையத் தொடங்கியதும் பாரமாக நினைக்கத் தொடங்கி விட, ஆரம்பிக்கிறது பிரச்சினை.ஒருமகன்போனால்போகிறதென ஒண்டிக்கொள்ள இடம்கொடுத்து தங்க வைத்துக் கொண்டாலும் தாமரையிலைத் தண்ணீர் போல் ஒட்டாத ஒரு நிலைதான் அவர்கள் வாழ்க்கை. உயிர் உள்ளவரை தான் எல்லாமே என்ற உண்மை இவர்களைப் போன்றோருக்கு உறைப்பதே இல்லையே!

தாயின்காலடியில்சுவனம்இருப்பதாகச் சொல்வார்கள். ஆனால் உயிர் உள்ளவரை தாயை ஒழுங்காக,மனம் கோணாமல் பார்த்துக் கொள்பவனின்வீடுசுவனமாகமாறும்என்பதை இவர்கள் புரிந்து கொள்வது எக்காலம்?

தியாகச்சுடரான தாய் எப்போதும் தம் பிள்ளைகள், பேரக்குழந்தைகள் நலனையே நாடி, இருகையேந்தி இறைவனிடம் பிரார்த்திப்பவர்கள். அவர்கள் மனதை வருத்தும் பிள்ளைகள் எப்படி சுவனம் சேரமுடியும்?

அந்தத் தாய் தங்கத் தட்டில் உணவு கேட்கவில்லை. தூங்க பட்டுமெத்தை கேட்க வில்லை. அணிய புத்தாடைகள், நகைகள் கேட்கவில்லை. அவர்களின் மனம் நாடுவதெல்லாம் பிள்ளைகளின் அரவணைப்பையும் அன்பான நாலு ஆறுதல் வார்த்தைகளையும்தான்என்றபுரிதல்கூடஇல்லாவிட்டால், அவர்கள் படித்த கல்வியில் என்ன பயன்? வேலையிலிருந்து வீடு திரும்பும் பிள்ளை, தான் வெளியில் கொண்டு வரும் உணவை தாய்க்கு கொடுக்காமல் மறைத்து உண்ணட்டும். ஆனால், "அம்மா எப்படியிருக்கீங்க? சாப்பிட்டீங்களா?" என ஒரு வார்த்தை கேட்பதில் சொத்து குறைந்துதான் விடுமா என்ன?

ஏழ்மையாக இருந்தாலும் எல்லோரையும் ஓரிடத்தில் அமர்த்திப் பகிர்ந்துண்ணும்பலஏழைக்குடும்பங்களிடமிருந்து இவர்கள் கற்றுக் கொள்வார்களா?

கொஞ்சம் மருந்து, மாத்திரைகளையும், சோப், பற்பசையும் வாங்கி வந்து நீட்டிவிட்டால், அவர்களின் கடமை முடிந்து விடுமா? அல்லது அந்தத் தாயின் எதிர்பார்ப்புதான் பூர்த்தியாகி விடுமா என்ன? 24 மணிநேரத்தில் தாயுடன் பேச ஓர் ஐந்து நிமிடங்கள் செலவழிக்க முடியாதவரா நீங்கள்? அந்தத் தாய் மனதில் எவ்வளவு காயங்கள், ரணங்கள் இருக்கும்? தனக்கென. தன் சந்தோஷத்துக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாமல் தன் பிள்ளைகள் நலனே பிரதானம் என்று வாழ்ந்த இவர் உலகுக்கே ஓர் எடுத்துக்காட்டு.

மற்றது மருமகள் எனும் ஸ்தானம், ஒரு வீட்டை மாளிகையாய் மாற்றுவதும்,மண்குடிசையாக்குவதும் அவர்கள் கையில் தானே! அவர்களுக்கு மாமியார் ஒரு சுமை; பேரக்குழந்தைகளைப் பார்க்கும் ஆயா; அறுசுவை உணவு தரும் சமையல்காரி; வீட்டுக்கு வேலைக்காரி; யாரும் இல்லாத பொழுதுகளில் வீட்டைக் காவல் காக்கும் காவலாளி. இவ்வளவு காலம் உழைத்து ஓய்ந்த அவளுக்கு ஓய்வையும் மனநிம்மதியையும் தராத குடும்பம். இவ்வளவுக்கும் நான் குறிப்பிட்ட அப்பெண் சாது. வாயில்லாப்பூச்சி. இவரைப் பாரமாக நினைத்து எப்போதடா வீட்டை விட்டு ஒழிப்போம் எனக் காத்திருக்கும் ஒரு மருமகள். குழந்தைகள் பேசும் நக்கலான பேச்சுகளை கண்டிக்காமல் வேடிக்கை பார்க்கும் இவர்களுக்கு நாளைய எதிர்காலம் இதே அளவுகோலால் தான் தன் பிள்ளைகள் மூலம் பாடம் கற்பிக்கும் என்ற உண்மை புரிகையில் ,எல்லாமே கைமீறிப் போயிருக்கும். அதென்ன தன் வீட்டு உறவுகள் என்றால் தலையில் வைத்துக் கொண்டாடுவதும், விழுந்து விழுந்து உபசரிப்பதும்? இது ஒரு கண்ணில் வெண்ணெயும், மறுகண்ணில் சுண்ணாம்பும் தடவுவதற்குச் சமம் அன்றோ?

வீட்டுக்கு தாயை காவல் வைத்து விட்டுக் காரில் ஊர் சுற்றத் தெரிந்தவர்கள், வெளியில் நல்ல உணவு விடுதிகளில் சாப்பிடத் தெரிந்தவர்கள், ஒரு முறையாவது தாயையும் அழைத்துப் போகலாம். வெளியிலிருந்து வருகையில் தன் தாய்க்கும் ஏதும் சாப்பிடக் கொண்டு வந்து கொடுக்கலாம். இதில் அந்த தாய்க்கு கிடைக்கும் மனநிறைவை எந்த பணத்தாலும் ஈடுசெய்ய முடியுமா?

மற்ற அனைத்து விடயங்களிலும் விதிமுறைகள் பேசத் தெரிந்தவர்கள் தன் தவறை உணர்ந்து கொள்வதே இல்லை என்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

இப்படிப் பலர் இவ்வுலகில் எந்த அர்த்தமும் இல்லாமல் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க்கை என்பது குறுகிய வட்டம். அதிலும் எவ்வளவு காலம் வாழப்போகிறோம் என்பதும் நாம் அறியாதது.

நிலையில்லா இவ்வாழ்வில் நாம் வாழ்ந்த வருடங்கள் நினைவில் நிற்கப் போவதில்லை.நாம் செய்த நல்லவை மட்டுமே நினைவில் நிற்கும். அதைச் செய்வதில் என்ன தயக்கம்? தாயின் மனம் மகிழ்ந்தால், பிள்ளைகள் வாழ்வு பூஞ்சோலையாகும். தாயைப் போற்றிப் பாதுகாத்துத் தரணியில் உயர்வோமாக! ■



# தின்முனைக்கவிதைகள்

◆

ஒதுங்க நினைத்தேன்
மனதில் இடம் கொடுத்தாய்.
கார்காலம் இன்னும்
எத்தனை நாளோ?

◆

ஆகாயப் பட்சிகள் விதைப்பதில்லை
என்னை அடிக்கடி விதைக்கிறேன்.
பயிராக நீயே முளைப்பதால்
அறுவடை நாள் அருகிலில்லை.

◆

ஊசி இலைக் காடுகளை
உரசி வந்த தென்றலே!
திருவிழா பக்கம் வராதே.
பலூன் விற்க வேண்டுமவன்.

◆

மலைச்சாரலும் மழைச்சாரலும்
சுகமானவை; இதமானவை.
பறக்கவிடு நம் காதலை
ஸ்பரிசம் பெறட்டும் பலமுறை.

◆

‘பருவ’ மழை வருடந்தோறும்
‘அடை’ மாரியாய் பெய்தாலென்ன?
பருவம் அடைய வில்லையே
அவள் இன்னும்.

◆

இரண்டு குடைகள்
எதற்கு என்கிறாய்.
உன்னுடன் இணைந்து
நனையுமே என் காதலும்.

◆

மழைக்கால மண்வாசனை
இமை மூடி ரசிக்கிறாய்.
சுமந்து வந்த தென்றல்
சுமைக்கூலி கேட்கையில்.

◆

குடையை வேகமாய் மடி
மறைய காத்திருக்கும் வானவில்.
உன் தரிசனம் ஒன்றே
நிதர்சனம் என்னும் நிறங்கள்.

◆

“வானில் இட ஒதுக்கீடு
எத்தனை விழுக்காடு?”
வானவில் கேட்கிறது.
என் இனிய மழையே!

◆

பெயரை மறந்தவளே!
எனக்கொரு பெயரிட மாட்டாயா?
மறந்தே போனதென் நாமம்
பெயரின்றி வாழ்ந்திடுவோம் நாமும்.

◆

உன்னையே மருந்தாய்
பூசிட வருகிறாய்
காதலில் விழுந்தும்
காயமில்லை எனக்கு.

◆

வெளிபடுத்தாக் காதலை
ஒலிபரப்புகிறது மௌனம்.
கல்லூரி வாழ்வின் இறுதிநாள்
கனமாய் கழியும் கணங்கள்.



- முனைவர் வே. புகழேந்தி,

பெங்களூரு.

# தம்பி நீ சற்று எண்ணிப்பார்;

# கோபித்துக்கொள்ளாமல்

எலெக்ட்ரிக் ரெயில்வே, மோட்டார், கப்பல்,நீர்மூழ்கிகப்பல்,அதைக்கண்டுபிடிக்கும் கருவி, விஷப்புகை, அதைத் தடுக்கும் முக மூடி, இன்ஜெக்ஷன் ஊசி, இனாகுலேசன் ஊசி, இவைகளுக்கான மருந்து, ஆப்பரேசன் ஆயுதங்கள், தூரதிருஷ்டி கண்ணாடி, கிராம போன், ரேடியோ, டெலிபோன், தந்தி, கம்பியில்லாத் தந்தி, போட்டோ மிஷின், சினிமா படமெடுக்கும் மிஷின், விண்கலம், ஆளில்லா விமானம், டைப் மிஷின், அச்சு இயந்திரம், ரசாயன சாமான், புதிய உரம், விவசாய கருவி, சுரங்கத்திற்குள் போக கருவி, மலை உச்சியேற மிஷின், சந்திர மண்டலம் வரை போக விமானம், அணுவைப் பிளக்கும் மிஷின், இன்னும் எண்ணற்ற புதிய பயன் தரும் மனிதனின் கற்பனைக்கே எட்டாதிருந்த மனிதரின் உழைப்பைக் குறைக்கும் முறைகள், கருவிகள், பொருள்கள் ஆகியவற்றைக் கண்டுபிடித்தவர்களெல்லாம் இன்னமும் கண்டுபிடிக்கும் வேலையிலே ஈடுபட்டு கொண்டிருப்பவர்களெல்லாம் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை கொண்டாடாதவர்கள்.

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ், இந்தியாவிற்கு வழி கண்டு பிடித்தவாஸ்கோடகாமா,இவர்களெல்லாம் ஆயுத பூஜை கொண்டாடியவர்கள் அல்ல.

நவராத்திரிகள் கொண்டாடியவர்கள் அல்ல.

100க்கு 100 சதவிகிதம் படித்துள்ள மேல் நாட்டிலே ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை இல்லை.

ஏனப்பா கொஞ்சம் யோசிக்க கூடாதா?

ஓலை குடிசையும், கலப்பையும், ஏரும், மண்வெட்டியும், அரிவாளும், மாட்டுவண்டியும், மண்குடமும், உனக்குத் தெரிந்த கண்டுபிடிப்புகள்.

தீக்குச்சிப் பெட்டி கூட நீ செய்ததில்லை.

கற்பூரம் கூட நீ செய்ததில்லை.

கடவுள்படத்திற்குஅலங்காரத்திற்கு போடும் கண்ணாடி கூட சரஸ்வதி பூஜையை அறியாதவர் கொடுத்துதான் நீ கொண்டாடுகிறாய்.

ஒரு கணமாவது நீ யோசித்தாயா?

எவ்வளவு பூசைகள் செய்து வந்த நாம், நமது மக்கள் இது வரை என்ன புதிய அதிசய பொருட்களைக் கண்டுபிடித்தோம் உலகிற்கு தந்தோம் என யோசித்துப் பாரப்பா.

கோபப்படாதே உண்மை இப்படித் தான் முதலில் நெஞ்சை உறுத்தும்!

சிந்தித்துப் பார் உன்னையும் அறியாமல் நீயே சிரிப்பாய்.

உன் பழைய நாட்களில் இருந்த பேரறிஞர்கள் தங்கள் புண்ணிய நூல் களைக் கூட ஓலைச்சுவடிகளிலேதான் எழுதினார்கள்.

அந்தப் பரம்பரையில் வந்த நீ அவர்கள் மறைந்து ஆங்கிலேயர் வருவதற்கு இடையிலே இருந்த காலத்திலே அச்சு இயந்திரமாவது கண்டு பிடித்திருக்கக் கூடாதா?

மேல் நாட்டார் கண்டுபிடித்து தந்த அச்சு இயந்திரத்தின் உதவி கொண்டு உன் பஞ்சாங்கத்தை அச்சடித்துப் படித்து அகமகிழ்கிறாயே!

அவன் கண்டுபிடித்த ரயிலில் ஏறிக்கொண்டு உன் பழைய அற்புதம் நடைபெற்ற திருத்தலம் போகிறாயே.

அவன் கண்டுபிடித்த ரேடியோவில்

# உயிரற்ற கவிதை நான்

புதிதாய் படைக்கப்படும் எதுவுமே
பொலிவுடன் இல்லையென - அடிக்கடி
உருக்குலைந்து போகிறேன்

எதுகை மோனையென
எதுவுமே கைகூடவில்லை எனக்கு,
இப்போதெல்லாம் வெறுமையின்
வண்ணங்களே எடுப்பாக

வறுமை தின்று வலிமை குன்றிய
தூரிகை மட்டும் தினமும்
என் கிறுக்கல்களைக் கண்டதும்
இறுக்கமான தன் உதடுகள் விரிய
பல்லிளித்துச் சிரிக்கின்றது.

மொழியின் தேவதை இவள்,
மூக்கும் முழியும்
செப்பமில்லையென - இருந்தும்
போக்கிடம் வேறில்லையென
கட்டுகட்டாய் தாள்களை
அடுக்கிப் பார்க்கிறேன்

கனவு காணாதே
கவிஞன் நீயில்லையென
காலம் என்னைப் புறம் தள்ளி
அழித்துவிட எண்ணுகிறது.

ஒத்துக் கொள்கிறேன்
களைத்துப் போன
என் நா வறண்ட வார்த்தைகள்
எழுந்து நிற்க வலிமையின்றி
இன்றோ நாளையோவென
இறப்பை நோக்க

எஞ்சியிருக்கும்
என் பலவீன எதிரொலிகள்
கைகால்கள் பிணைக்கப்பட்டு
வாழ்க்கை கனவென ஓடி
கற்பனை நெரிசலில்
தொலைந்து போய்த் தடுமாற
உயிரற்ற கவிதை நான்
எழுத்துக்களை எடுத்தெடுத்து
அணிந்து பார்க்கிறேன் - எங்கே
நான் தொலைத்த
நடையழகின் உயிர்ப்பென
குறிப்புக்கள் எடுத்தபடி

**வானம்பாடி முஜா**
நிந்தவூர்.

உன் பழைய பஜனை பாட்டைக் கேட்டு மகிழ்கிறாயே!

எல்லாம் மேல் நாட்டவர்கள் கண்டு பிடித்து கொடுத்த பிறகு அவைகளை உபயோகப்படுத்திக் கொண்டு பழைய பெருமையை மட்டும் பேசுகிறாயே. சரியா? யோசித்துப் பார்.

சரஸ்வதி பூஜை விமர்சையாக நடந்தது என்று பத்திரிக்கையில் செய்தி வருகிறது.

அது நாரதர் சர்விஸ் அல்லவே.

அதுஅசோசியேட். தந்தி முறை அவன் தந்தது.

தசரதன் வீட்டிலிருந்து வந்ததில்லை.

ராகவன் ரேடியோ கேட்டதில்லை.

சிவன் சினிமா பார்த்ததில்லை.

தர்மராசன் தந்தி கம்பம் பார்த்த தில்லை.

இவைகௌல்லாம் மிக மிக சாமானி யர்களால் சுலபமாகக் கிடைக்கிறது. அனுபவிக்கிறோம்.

அனுபவிக்கிம் போது கூட அரிய பொருள்களைக் கொடுத்த அந்த அறிஞர்களை மறந்து விடுகிறோம்.

அவர்கள் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை அறியாதவர்கள் என்பதையும் மறந்து விடுகிறோம்.

ரேடியோவில் ராகவனைப் பற்றிய பாட்டும், சினிமாவிலே சிபி சக்கர வர்த்தியின் கதையையும்கேட்டும்பார்த்தும்மகிழ்கிறோம்.

இது முறைதானா? பரம்பரை பரம்பரையாக நாம் செய்து வந்த ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை நமக்குப் பலன் தர வில்லையே!

ஆனால் அந்த பூசையைச் செய்ய தெரியாதவர்கள்நாம்ஆச்சர்யம்படும்படியான அற்புதங்களை அறிவின் துணையைக் கொண்டு கண்டுபிடித்து விட்டார்களே என்று யோசித்தால் முதலில் கோபம் வரும் பின்பு வெட்கமாக இருக்கும்.

அதையும் தாண்டினால் வேகம் பிறக்கும் யோசித்துப் பார் அடுத்து ஆண்டிற்குள்ளாவது!

– பேரறிஞர் அண்ணா

# இரக்கமில்லாக் கொரோனாவே

கண்ணுக்குக் காட்சிபடா
நுண்ணிய கிருமியே
மண்ணுக்குள் இருந்து
மாயமாய் வந்தாயா?

விண்ணில் இருந்து
வீறுகொண்டு எழுந்தாயா?
எண்ணற்ற துயரை
எங்களுக்குத் தருகிறாயே

குதூகலம் நிறைந்து
நிம்மதி கலந்து
பக்தி சுமந்த வாழ்வில்
பயத்தை திணிக்கிறாயே

அவனி முழுவதுமெனப்
பரவிய உன்னை
அறிந்திடவே யெமக்கும்
அறிவும் இல்லையே

வறுமையில் மக்கள்
நிலை கொண்டிடவே
நீயே வயிற்றுப் பிழைப்பில்
மண்ணள்ளியிட்டாயே

உன்னால் உறவுகள் கூடி
மகிழ்ந்திட முடியாதே
மழலைகள் விளையாட்டை
மறக்கச் செய்திட்டாயே

பாரெங்கும் முடங்கிப்
பள்ளிகள் எல்லாம்
பரிதாபம் ஆயிற்றே
படிப்பும் மந்தமாகியதே

ஒன்றெனப் பிணைந்த
உறவுகள் எல்லாம்
உன்னால் இன்று
உடைந்து விட்டதே

உடன் பிறப்பின்
இறந்த உடலையும்
நெருங்கிட முடியா
வேதனையும் தந்தாயே

அதிகார மோங்கிய
ஆள்புல மெல்லாமே
அடங்கிக் குறுகியதே-உன்
ஆணவ வீரியத்தால்

ஆண்டு இரண்டாகியும்
அழிவுகளை நிறுத்தாமல்
ஆவேச உச்சத்தில்
ஆட்டிப் படைக்கிறாயே

ஆற்றலில்லா நாங்களோ
அடிமையானோம் உன்னிடம்
அமைதியாய் வாழ்ந்திடவே யெமக்கு
அனுமதி தாராயா

மனித மனங்களிலே
உன் தாக்கமே
மறக்க முடியா
மாபெரும் வடுக்களானது

ஃபைஸர்,ஸினோஃபார்மென
பாய்ச்சிய மருந்தானாலும்
மாறி மாறிப்
பரிணாமம் ஆகிறாயே

மனுக் குலத்தின்
மருத்துவத் துறையையே
மண்டியிட வைத்து
மமதை கொள்கிறாயே

மனிதர் வாழ்வினை
மண்ணோடழிக்கத் துணியும்
உனக்குக் கொஞ்சமேனும்
உயிரிலும் இரக்கமில்லையா?

உலகமெலாம் கோடி
உயிர்களைக் குடித்தாயே
இன்னும் ஏன்
உன் தாகம் தணியவில்லையா?

மனிதர்கள் நாம்
மன்றாடி வேண்டுகிறோம்
எங்களை வாழவிட்டு
எப்போது தொலைவாயோ
இரக்கமற்ற கொரோனாவே?



"ஏரூர்க்கவி"
எச்.எம்.எம்.றஹீம்

# கல்யாணப் பரிசு

இதயம் என்னும் சிறு அறையில் ..!
அன்பு என்னும் விதையை விதைத்து ..!
சுகமான நேரத்தை நேசித்து – மேலும்
சுரக்க உதவும் பொருளின் பெயர்தான் – பரிசு.




## தாமோதரன் சாது

கூட்டாம்புளி ,தூத்துக்குடி.


அம்முவுக்கும் ஸ்ரீதரனுக்கும் திருமண நிச்சயதார்த்தம் நல்ல படியாக முடிந்தது. அடுத்த வாரம் இந்நேரத்தில் மணமேடையில் இணைய காத்திருக்கும் அவர்கள். இருவரும் இன்பவெள்ளத்தில் மிதந்தனர்.

இந்நிலையில் தயாராக இருந்த திருமணப் பத்திரிக்கைகளை வாங்குவதற்காக அம்முவின் வீட்டிற்கு மாப்பிள்ளை ஸ்ரீதரனே நேரடியாக சென்றிருந்தான்.

அந்தக் காலைப் பொழுதிலே



வீட்டின் வாசலில் வண்ணக் கோலமிட்டுக் கொண்டிருந்தாள் அம்மு. வாசல் தெளித்த தண்ணீரில் அவள் முகம் சூரிய ஒளியால் பிரதிபலித்தது அவன் முகத்தில்.

ஸ்ரீதரன் வந்து நின்றதைக் கூட கவனிக்காமல் கோலம் போடுவதிலேயே மும்முரமாக இருந்தாள் அம்மு.

பூப்போட்டநைட்டியில்ஒருசெந்தாமரை இன்னொரு தாமரையை கோலமிடுவதைப் பார்த்து ரசித்தான் அவன்.

சிந்தியது வியர்வைத் துளி ..!

விழுந்தது தாமரைக்கு பொட்டாக ..!

வியர்வை படர்ந்த நெற்றியில் கற்றைக் கூந்தலை தன் கைகளால் காதோரம் தள்ளிவிட்டபடி எழுந்த அம்மு தன்னருகே அவன் நிற்பதைக் கண்டதும்...

அச்சோ..

வாங்க! என்ற படபடப்போடு

நீங்க வந்ததை கவனிக்கல சாரி..! என்றாள்.

பரவாயில்லை அம்மு..!. ஏன் இவ்ளோ பதட்டம் ..? ரிலாக்ஸ்..

நீங்கள் கோலம் போடும் அழகை கொஞ்சநேரம் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

சும்மா சொல்லக்கூடாது கோலம் பிரமாதம்..!

அசத்திட்டீங்க..

தனக்கு மனைவியாக வரப்போகும் அம்முவின் கோல அழகை மனதார

ரசித்துப் பாராட்டினான்.

வண்ணத்து பூச்சி போல அவளுடைய கண்கள் படபடத்தது; நாணத்தில் தலைகுனிந்து சிரித்த அவள், அவனை இல்லத்திற்கு அழைத்துச் சென்றாள்.

ப்ளீஸ்.. உட்காருங்க! என்றாள்; நேராக கிச்சனுக்குள் நுழைந்தாள்.

அம்மா..அம்மா..அவரு வந்திருக்காரும்மா!

ஏன்டி காலையிலேயே இப்படி கத்தற?

யாரு வந்திருக்கா?

காபி போட்டுக்கொண்டிருந்த லதாவதி மகளை கேட்டாள்.

அம்மா.. அவருதாம்மா. திருமணப் பத்திரிக்கை வாங்க வந்திருக்கார் போலிருக்கு.

ஏய்.. மாப்பிள்ளையா வந்திருக்கார்! உட்காரச் சொன்னியாடி! என்று சற்று பதட்டமான லதாவதி தன் புடவையை சரிசெய்து கொண்டு கையில் காபியுடன் மாப்பிள்ளையை வரவேற்கச் சென்றாள். வாங்க மாப்பிள்ளை! .. அவரு பூஜையில இருக்காரு இப்போ வந்திடுவாரு.

இந்தாங்க காபி எடுத்துக்கோங்க..

பரவாயில்லை.. என்று கூறிய ஸ்ரீதரன் காபியை பருகினான்.

வீட்ல எல்லோரும் நலமா மாப்பிள்ளை?

அம்மா அப்பா எப்படி இருக்காங்க? குலசம் விசாரித்தாள் லதாவதி.

எல்லாம் நல்லா இருக்காங்க..

அப்பாதான் திருமணப் பத்திரிக்கையை வாங்கிவரச் சொன்னார். என்றான் அவன்.

அதற்குள் பூஜை அறையில் இருந்து பயபக்தியோடு வெளியே வந்தார் மெய்யப்பன் .

அடடே..வாங்கவாங்கமாப்பிள்ளை.

மாமனாரைக் கண்டதும் எழுந்தான் அவன்.

அட.. பரவாயில்லை உட்காருங்க..

நீங்க இன்னைக்கு வர்றதா. அப்பா போன்ல சொன்னார். என்ற கூறியபடியே ஸ்ரீதரனின் பக்கத்தில் அமர்ந்தார் மெய்யப்பன்.

லதா.. சாமி படத்துப் பக்கத்துல திருமணப் பத்திரிக்கை இருக்கு எடுத்

# ஹைக்கூ

●

சுவையாகும் உழைப்பு
கரும்புச் சக்கையை நகர்த்துகிறது
எறும்புக்கூட்டம்

●

தரையிறங்கிய மகிழ்ச்சி
சறுக்கல் விளையாட்டில் தெரிகிறது
குடை மேல் மழைத்துளி

●

செல்போன் உபயோகம்
தலைமீது கொட்டு வைக்கிறது
குருவியின் எச்சம்

●

பூட்டின் துளை
உள் இரகசியத்தை அறிந்திருக்குமோ?
நுழைந்த குளவி

●

கனமழை பெய்கின்ற நேரம்
சுவருக்குள்ளே கல்லறையைத் தேடும்
சாலையோர ஓவியம்

**வெ.அஜீத்குமார்,**
கல்பாரப்பட்டி, சேலம் – 637504.

துட்டு வா! கணவரின் சொல்லுக்கு கட்டுப் பட்டவளாய் பத்திரிக்கை பார்சலை பவ்வி யமாக எடுத்துவந்தாள் லதாவதி.

முருகா.. முருகா என்றவாறே பத்திரிக்கைபார்சலைப்பிரித்து ஸ்ரீதரனிடம் கொடுத்தார்.நிதானமாக வாசித்த ஸ்ரீதரன் நல்லா இருக்குங்க. என்றான்.

ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை.

ஆயிரம் பத்திரிக்கைகள் இருக்கு அப்பா ஐநூறு கேட்டிருந்தார்.. என்றவாறு பத்திரிக்கைகளை எண்ணி அவனிடம் கொடுத்தார். இன்னும் தேவையான பத்திரிக் கைய எடுத்துக்கோங்க. மெய்யப்பன் சொன்னார்.

போதும் மாமா..இதுவே போதும்.

பரவாயில்ல மாப்பிள - கைகளில் மேலும் நூறு பத்திரிக்கைகள் தந்தார் மெய்யப்பன் .

சரி மாமா..

நான் கிளம்பறேன்! என்று எழுந்தான் அவன்.

கிச்சன் ஜன்னலின் வழியே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அம்மு.

நிலைமையை புரிந்துகொண்ட மெய்யப்பன்.

ஒருநிமிடம் இருங்க மாப்பிள..

உங்கள் நிச்சயதார்த்த விழாவுல கலந்துக்கமுடியாமபோச்சி'ணு'என்னோட பால்ய நண்பர் ரொம்ப வருத்தப்பட்டார். எதிர்வீட்லதான் இருக்கார். உங்களைப் பார்த்தா ரொம்ப சந்தோஷப்படுவார். கொஞ்சம் பொறுங்க.. என்ற மெய்யப்பன் தன் மனைவி லதாவதியையும் உடன் அழைத்துச் சென்றார்.

அம்முவுடன் சிறிதுநேரம் பேசமுடிய வில்லையே என்று ஏங்கிய ஸ்ரீதரனுக்கு புத்துணர்ச்சி பொங்கியது.

ஏன் வெளியே வரமாட்டிங்களா அம்மு?

ஸ்ரீதரனின் வார்த்தைகளைக் கேட்ட அம்மு நாணத்தோடு வெளியே வந்தாள்.

இல்ல.. அம்மா அப்பா பேசிட்டு இருந்தாங்க அதான்... என்று இழுத்தாள் அம்மு.

வீட்டுக்கு போய்ட்டு போன் பண்ணுங்க.. அடக்கான குரலில் சொன்னாள்.

நாங்க பண்றோம்..

நீங்க மட்டும் சீக்கிரம் போன் வெச்சிடுங்க.. சரியா? கிண்டலடித்தான் ஸ்ரீதரன்.

ஒருநிமிஷம் இருங்க.. என்று வேகமாக உள்ளே ஓடியவள் கையில் எதையோ மறைத்து எடுத்து வந்தாள்.

என்ன அம்மு கையில?

ஆச்சர்யமாக கேட்டான் ஸ்ரீதரன். மெல்ல உள்ளங்கைகளை விரித்தாள் அம்மு.

அழகான பால் பாய்ண்டு பென்..

இந்தாங்க.. உங்களுக்காக இதை வாங்கி வெச்சிருந்தேன். உங்க பாக்கெட்ல வெச்சிக்கோங்க. நல்லா எழுதும்.. என்று ஸ்ரீதரனிடம் நீட்டினாள்.

ஓ.. தேங்க் யூ.. என்று மகிழ்ந்த ஸ்ரீதரன் அந்த அழகான மருதாணி வைக்க லாமலே சிவந்த கைகள் தொட்டவாறே பேனைவை வாங்கி தன் சட்டைப் பாக்கெட்டில் சொருகினான்.

அதற்குள் மெய்யப்பன் லதாவதியும் எதிர்வீட்டு ஜெயராமனோடு வர..

ஓடி ஒளிந்தாள் அம்மு. தனக்கு வரப்போகும் மாப்பிள்ளையை ஜெயராம னுக்கு அறிமுகப் படுத்தி இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்தார் மெய்யப்பன் .

கல்யாணப் பரிசு கிடைத்த சந்தோ ஷத்தில் அங்கிருந்து விடைபெற்றான் ஸ்ரீதரன்.

மாப்பிள்ளை.. பேனா பத்திரம். என்று குரல் கொடுத்தார் மெய்யப்பன்.

தன் பாக்கெட்டில் கை வைத்த படியே சங்கோஜத்தில் நெளிந்து சென்றான் ஸ்ரீதரன்.



## முடிசூட்டி வாழ்த்துவோம் வாரீர் !

விழிகொண்டு நோக்கிட பாதையெங்கும்
வானவில் தோரணங்கள் கண்டிடுவீர் !
செவிமடுத்துக் கேட்பதற்கு ஆனந்தபைரவி
சங்கீதம் மிதந்து வரும் கேட்டிடுவீர் !

ஆடும் மயிலும் கூவும் குயிலும்
மேடையிட்டு நம்மருகே வருகுது !
மென்தென்றல் ஊர்வலமாய் வீதியெங்கும்
மேனி குளிரத் தளராது தழுவுது !

செவ்வாழைக் குலையோடு மாந்தளிரும்
சேர்ந்தாடும் வசந்த விழா நம்மோடு !
மங்கலம் நிறைந்த மரபோடு கைசேர்க்க
தங்கும் கலாச்சாரம் மிளிரும் வளமோடு !

பவித்திர மாதமாம் மார்கழி பிறப்பெடுக்க
பாவையர் நோன்பிருப்பர் புவிமீது !
பனித்திரைக்குள் நிலமைந்தும் செழித்தோங்க
இனிக்குமொழி தமிழ் வீற்றிருக்கும் நாமீது !

மண்மீது கவியெழுதும் புலமைக்கு முடிசூட்டி
விண்ணதிரத் தடம்பதிக்கும் தமிழ்நெஞ்சம் !
தமிழ்ப்பணியில் பொன்விழா காணுகின்ற
அமின் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவோம் !

- கா. ந. கல்யாணசுந்தரம்
சென்னை

## கல்வெட்டு

சிறுமியின் கைகளில்
புத்தகங்கள்

அவற்றில் ஒன்றை
எனக்குத் தருகிறாள்

நான் புரட்டிப்பார்க்கிறேன்

இரத்தங்களால் எழுதிய
பக்கங்கள்

இர்ஷாத்,
வாழைச்சேனை.

## குளக்கரை மீன்கள்

குளக்கரையின் கரையோரத்தில் கொக்கு ஒன்று ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தது. துள்ளிக் கொண்டிருந்த மீன்களில் ஒன்று கொக்கிடம் வந்து என்ன கொக்காரே! உமது ஆகாரத்தைக் கொத்தாமல் சும்மா நிற்கிறீர்? என்று கேட்டது. அதற்கு கொக்கு செம்படவன் ஒருவன் வந்து ஒட்டுமொத்தமாக உங்கள் அனைவரையும் பிடித்துச் செல்லப் போகிறான் என்றது.

இதனைக்கேட்ட அம்மீன் உடனே உள்ளே சென்றுவிட்டது. சில நிமிடம் கழித்து பல மீன்கள் மேலே வந்து கொக்கின் முன்பு துள்ளியது. அனைத்து மீன்களும் கொக்கிடம் வந்து உதவிக்கேட்டன. அதற்கு கொக்கு உங்களை இந்த குளத்திலிருந்து வேறு குளத்திற்கு மாற்றிவிட்டால் வேண்டுமானால் நீங்கள் தப்பிக்க முடியும் என்றதும் மீன்களும் சம்மதித்தது.

நடைக்கு ஒவ்வொன்றாக குளத்திலிருந்த மீன்களையெல்லாம் கௌவிக் கொண்டுபோய் சில மீன்களைத் தின்று, மற்ற மீன்களை ஒரு பாறையில் உலரவைத்தது. குளத்திலிருந்த நண்டு ஒன்றிற்கு தானும் வேறு குளத்திற்குச் செல்ல உள்ளுக்குள் ஆசை சுரந்தது. கொக்கிடம் என்னையும் அவ்விடத்திற்குக் கொண்டுப் போங்கள் என்று கெஞ்சியது. ஒப்புக்கொண்ட கொக்கு, நண்டையும் கௌவிக்கொண்டு பறந்தது.

பறக்கும் போது வழியில் மீன்களின் முள்ளுடல்கள் ஆங்காங்கே சிதறி இருப்பதைக் கண்டது நண்டு. தன் உயிராசையால் நண்டுக்கு ஒரு உபாயம் தோன்றியது. அதனால் கொக்காரே! நீங்கள் என்மேல் இரக்கப்பட்டு எடுத்துக்கொண்டு வந்தீர்கள். அங்கே என் உறவினர்கள் பலர் இருப்பதால், என்னை மீண்டும் அங்கே கொண்டு சென்றால் அவைகளையும் காண்பிப்பேன் என்றது நண்டு.

ஆஹா! நமக்கு யோகம் அடித்தது என்று மகிழ்ந்த கொக்கு மீண்டும் நண்டைக் கௌவிக் கொன்று பழைய குளத்தை நோக்கிப் பறந்தது. குளத்துக்கு நேராக வரும்போது அதுவரை அமைதியாக இருந்த நண்டு தன் கொடுக்கினால் கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாக்கிவிட்டு குளத்து நீரில் விழுந்து உயிர் பிழைத்துக் கொண்டது.

நீதி :
பிறர் சொல்லும் யோசனைகள் அனைத்தையும் அப்படியே ஏற்பது நன்றன்று.

# அருள்புரிவாய் கந்தவேளா

இராம வேல்முருகன் வலங்கைமான்



1
நாசி வழிச்செல்லும் நற்காற்றாய் நாளுமிந்த
காசினி காத்தருளும் கந்தவேலா - நேசிக்கும்
தொண்டர் நலம்காக்கும் தொல்தமிழ் வேந்தனே
அண்டுவோர் வெல்ல அருள்
2
வெல்லும் வழிகாட்டி வெற்றியெலாம் ஈட்டவரும்
கல்வி அளிப்பவனே கந்தவேலா - நல்லுலகில்
வேண்டும் வரமளிக்கும் வேந்தனுனைப் பாட்டெழுதித்
தீண்டும் மகிழ்வெனக்குத் தா
3
தாண்டவன் ஈன்ற தமிழ்மகனே செல்வமே
காண்போர்க் கருள்கின்ற கந்தவேலா - ஆண்டவா
நெற்றி வழிவந்த நீள்புகழ் நாதனே
வெற்றி தருமுன்றன் வேல்
4
வேலைக் கரத்தேந்தி வெவ்வினை நீக்கவந்த
காலை இளங்கதிரே கந்தவேலா - ஆலையிட்ட
செங்கருப்புச் சாறாய்ச் செழிப்பை அருள்பவனே
அங்கநலம் காக்குமுன் அன்பு
5
அன்பு வழிநின்(று) அகிலத்தைக் காக்கின்ற
கன்னித் தமிழ்மகனே கந்தவேலா - என்னையும்
வல்லத் தமிழர் வழிநின்(று) உயர்ந்திடவே
வெல்லும் வழிசொல் விரைந்து
6
துய்ய மனத்தெழுந்து தூய தமிழ்வளர்க்கும்
பெய்கருணை மாரியே கந்தவேலா – உய்யவழி
காட்டும் தமிழ்க்கடவுள் தாரணியில் நீயென்றன்
பாட்டில் வந்தமர்ந்து பாடு
7
பாட்டே தமிழ்த்தேவே பைந்தமிழர் காப்பியங்கள்
காட்டும் மலைவணங்கும் கந்தவேலா - நாட்டோர்
தினம்வணங்கும் சேந்தா திருமால் மருகா
இனம்போற்றும் வேந்தா இணங்கு
8
குன்றக் குடியருளும் கோமகா ஆறுமுகா
கன்னல் மொழியழகா கந்தவேலா - இன்னருளால்
நல்லன எல்லாம் நலமுடன் நான்பெறவே
அல்லன யாவும் அகற்று
9
அன்புக் கரங்கொண்(டு) அரவணைத்(து) ஆள்பவனே
கன்னித் தமிழ்மறவா கந்தவேலா - இன்பமழை
எங்கும் பொழிபவனே ஏரகனே சாமிநாதா
தங்கும் வளமனைத்தும் தா
10
தானைத் தலைவனே தண்டபாணித் தெய்வமே
சேனைத் தலைவனே கந்தவேலா – ஆனை
முகத்தோன் இளையனே முத்தமிழ்க் கோவே
அகம்நுழைந்து நற்செயல் ஆக்கு

# தீர்ப்பு

மலர்விழி மணியம்

“அரசே.. அரசே!... என்று சற்று கண்ணயர்ந்து தலைசாய்த்த எமதர்மரை எழுப்பினார் சித்ரகுப்தன்.

“மம். என்ன.... சித்ரகுப்தா?”என்று பாதி கண்களைத் திறந்து கேட்டார்.

“ஒரு கொலைக் கேஸ் வந்திருக்கு” என்றார் சித்ரகுப்தன்.

“ம.... வரச் சொல் உள்ளே.” என்று அனுமதியளித்தார்.

ஐந்து பேர் உள்ளே வந்தனர். அவர்கள் ஐவரையும் ஒரே வரிசையில் நிற்கச் செய்தார் சித்ரகுப்தன்.

தன் சாட்டையை எடுத்துக்கொண்டு எமதர்மர் சென்றார். ஐவரில் முதலில் நிற்பவனிடமிருந்து விசாரணையைத் தொடங்கினார்.

“நீ செய்த தவறென்ன சொல் மானுடா” என்று கேட்டார்.

“நான் ஒன்னுமே பண்ணல ராஜா . கொலை பண்ணத பார்த்துட்டு இருந்தேன். அவன் தான் கொலை பண்ணினான்” என்று நான்காவதாக நின்றவனைக் காட்டினான்.

“ம்ம்ம் ஹூம்ம்” என்று தலையை லேசாக ஆட்டிவிட்டு, இரண்டாவதாக நின்றவனிடம் சென்று “நீ என்ன செய்தாய்? “ என்று கேட்டார்.

“ஐயா.. நான் அவன் கொல பண்ண உதவி தான் செஞ்சேன், ஆனா கொலைய அவன் தான் செஞ்சானுங்க, நான் இல்லைங்க.» என்றான்.

“ ஹூம்ம்” என்று தலையை லேசாக ஆட்டிவிட்டு , மூன்றாவதாக நின்றவனிடம் சென்று, “நீ என்ன செய்தாய்” என்று கேட்டார்.

“கொலைய நான் தடுக்கப் போனேன் சாமி. அவன் அளவுக்கு எனக்குப் பலம் இல்லாததால என்னைய அவன் அடிச்சு கீழத் தள்ளிட்டான். நான் மயங்கி விழுந்துட்டேன். மன்னிச்சிடுங்க என்னால கொலையத் தடுக்க முடியல” என்றான்.

“ம்ம் “ என்று தலையை லேசாக ஆட்டிவிட்டு நான்காவதாக நிற்பவனிடம், “நீ என்ன செய்தாய் ? “ என்று கேட்க, அவன் “ஓ “ வென்று அழுதுகொண்டு, “நான் தான் கொலை பண்ணின பாவி. ஆத்திரத்துல புத்தி இல்லாம என் நண்பனையே கொன்னுட்டேன். என்னய மன்னுச்சிடுங்க.” என்றான்.

“ம்ம் “ என்று தலையை லேசாக ஆட்டிவிட்டு ஐந்தாவதாக நிற்பவனிடம் சென்று, “நீ என்ன செய்தாய்? “என்று கேட்டார்.

“நான் தான் கொலை செய்யப்பட்டவன். தப்பு என்மேலயும் இருக்கு. அவன் ஆத்திரப்படுற மாதிரி நடந்துகிட்டேன் அதான் அவன் என்னய கொன்னுட்டான்.” என்றான்.

பெருமூச்சுடன் தன் அரியனையை



நோக்கிச் சென்று அமர்ந்தார் எமதர்மர்.

ஐவரையும் சற்று நோக்கி விட்டு தீர்ப்பை எழுதினார் .

“சித்ரகுப்தா.. இதை வாசித்து. நான் எழுதியது போல செயல்படுத்து “ என்று தீர்ப்பு ஓலையைக் கொடுத்தார்.

“ஆகட்டும் அரசே“ என்று தீர்ப்பு ஓலையைப் பிரித்து வாசித்தார் சித்ரகுப்தன்.

“கொலை செய்தவனும், கொலை செய்யப் பட்டவனும் தங்கள் தவறை உணர்ந்து மன்னிப்பு கோரியதால் இவர்கள் இருவரும் சொர்க்கத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

கொலைக்கு உதவியவனும், கொலையைச் சும்மா நின்று பார்த்துக் கொண்டு இருந்தவனும் நரகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்” என்று எழுதியிருந்ததைப் படித்தார்.

தீர்ப்பைக் கேட்டு ஐவருமே அதிர்ச்சியடைந்தனர் .

“ஐயா... அப்போ நானுங்க!??” என்று கொலையைத் தடுக்கச் சென்றவன் கேட்டான்.

எமதர்மர் எழுந்துநின்று, “ மானுடா உனக்குத் தவறைத் தட்டிக் கேட்க மேலும் மனவலிமையும் உடல் வலிமையும் தந்து பூலோகம் அனுப்பி வைக்கிறேன்” என்றார்.

அனைவரும் வாய் பிளந்து நின்றனர்.

“தவறு செய்ய உதவுபவன் மட்டு மல்ல , தவறை வாய் மூடி கைகட்டி பார்த்து நிற்பவர்களும் தண்டனைக்கு உரியவரே.” என்றார் எமதர்மர்.

# துளிப்பா

புறாவை வரைந்தச் சிறுமி
பறக்க விடுகிறாள்
காகிதத்தைக் கிழித்து

சூரியன் எழுதிய
கருப்புக் கவிதை
காரிருள்

பூந்தோட்டத்தில்
பட்டாம் பூச்சிகள்
பாடம் நடத்துகின்றன

விட்டில்கள்
விளக்கை அணைத்தன
ஊதி ஊதி

ஆண்மையைப் பெண்மையாக்கி
அழவைத்து விடுகிறது
காதல் தோல்வி

பிச்சைக்காரனின் வாழ்க்கையை
மௌனமாய்ச் சொல்கின்றன
மொய்க்கும் ஈக்கள்

தேங்கும் மழைநீரை
விழுந்து மறைத்தன
பழுத்த இலைகள்

மீன்பேசும் ரகசியத்தை
ஒட்டுக் கேட்கிறது
கரையோர நாரை

வெற்றுத் தாளுக்குள்
ஒளிந்திருந்தது
ஓர் கவிதை

விரல் நகத்தில்
ஓர் சொட்டுத் தேன்...
அமர்ந்துச் சென்ற பட்டாம்பூச்சி

- கருமலைப் பழம்நீ

# என் பார்வை முழுதும்...

நீ

தினமும் என்முன்னே
நீ செய்யும் குறும்பு
என் கவிக்கு கருவானது இன்று!

முதல்முதலாய் நாம்
ஒன்றிணைந்த பொழுதுகள்
நீ சிரிக்க நான் ரசித்த
தினங்கள்
நீ பேச நான் கேட்ட
வார்த்தைகள்
இருகரம் கோர்த்து
இறுக்கி விரல் பிடித்து
உலாவந்த நம் ஒற்றையடி
பாதைகள்
இப்படி எதனை சொல்வது
நாம் சேர்ந்து வாழ்ந்த
நாட்களை பற்றி !

அழியா ஓவியமாய்
என் மனதில் நீ இருக்க
ஒவ்வொரு நொடியும்
என் செவியருகே
உன் குரலே ஒலிக்க
என் பார்வை முழுதும்
உன் விம்பம் மலர
உணர்கிறேன் நான்
எனை பிரிந்து நீ
சென்ற காலடி சத்தத்தை!

சில காலம் என்னோடு
வாழ்ந்த நீ இன்று
மலையேறி விட்டாய்
எனை பிரிந்து!

கார் இருளில் பூத்த
வெண்ணிலவே
என் தவிப்புகளுக்கும்
என் ஏக்கங்களுக்கும்
பதில் கொடுப்பாயோ!

# வெற்றியின் இரகசியம்

இன்றைய வேலையை
நாளை என பிற்போடாதே!

உன்னால் முடியும் என்றால்
உன் வேலையை
பிறரிடம் பணிக்காதே!

நீ முன்னேற முன்
உன் செல்வத்தை செலவிடாதே!

உனக்கு பயனற்றதை
பயனாக்கி கொள்ளாதே!

தெரியாதென்று எண்ணி
தலைகுனிந்து நிற்காதே!

முன்வைத்த காலை
பின்வைக்காதே!

எதிர்மறையாய் சிந்தித்து
உன்னை வதைக்காதே!

ஒவ்வொரு வழியிலும்
நேர்வழியை தெரிவு செய்!

வாழ்வில் வெற்றியின்
இரகசியம் உன்னிடமே!

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம்!

# உணர்வுகளின் வடிவங்கள்



சோவென்ற மழைக்குப்
பின்னால் கடைசியாக
ஒரு மழைத்துளி
பச்சை இலையொன்றின் மீது
மேல் டப்பென்று
ஆசனமிட்டு விடுகின்றது

அந்தப் பாரத்தை
சுமக்க முடியாத அவ்விளம்
இலை நீர்த்துளியை
அப்படியே மெதுவாகத்
தள்ளிவிடுகின்றது

இப்படித்தானே சில
வேளைகளில் எங்கள் சித்தமும்?
உள்ளத்தில் இனியும் தாங்க
முடியாதவாறு ஏதாவதொன்று
ஊற்றெடுத்து விடுகின்றது

நாமும் டக்கென்று
வார்த்தைகளின் வடிவிலோ
வாயின் மூலமோ இல்ல
ஒரு வட்சப் ஸ்டேடஸின் மூலமாவது
வெளிப்படுத்தி விடுகின்றோம்.

**முஸ்லிஹா முஸ்தபா**

பேராதனை தேசிய கல்வியற் கல்லூரி வளாகம்.
பேராதனை.

# அன்பான காதலனே...!

விஷத்தின் மேலாடையாய்
ஒரு
பாலாடை போர்த்திய
உன்
மூன்றாம் விரல்
பேசுகிறேன்...!

இன்பமாய்
நீ எனை
இழுத்துக்
கொடுக்கும்
முத்தத் தழுவல்
ஆஹா...!

சிவந்தது என்தேகச்
சிறுமேனி...!
சூடானது உன்தேகப்
பெருமேனி...!

அதோ பார்...!
உன்தேகப் பெருமூச்சு

எனைப் பிரிந்த
வெண்மேகம் பெறும்மூச்சாய்...!

ஆம்...!

நீ விடும்
முத்தப்புகை

உன் தேகத்தை
மேகத்தில் சேர்க்க
நாம் பார்க்கும்
ஒத்திகை...!

- சீக்ரெட் ஆஃப் சிகரெட்

**“மை கிறுக்கல்” மாதவன்**

# விபரீதங்கள்

கோப உணர்ச்சி என்பது எல்லா மனிதர்களுக்கிடையிலும் ஏற்படக்கூடிய ஒரு செயலாகும்.

இருமனிதர்களுக்கிடையிலான புரிந்துணர்வின்மை, சந்தேகம், வலி கவலை, நம்பிக்கையின்மை என்பவற்றின் மூலம் இவை ஏற்படுகின்றன.

இதனால் பகை, குரோதம், சண்டை உறவுகள் முறிவு என்பன உறவுகளுக்கிடையே வருகின்றன.

கோபம் ஏற்படும் போது உடலில் ஊக்கிகள் (hormones) சுரக்கப்பட்டு செயற்படுகின்றன. மேலும் கோபம் கவலை ஏற்படும் போது மூளையிலுள்ள கலங்கள் அழிவடைக்கின்றன.

உளவியலாளர்களின் கருத்துப்படி "கோபம் மோசமான உணர்வல்ல என கூறுகிறார்கள்." கோபத்தை வெளிக்காட்டும் விதத்தில்தான் அதன் விபரீதங்கள் தங்கியுள்ளது. (தேவையற்ற வார்த்தை பிரயோகம், தேவையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல்) .

யதார்த்த நிலையில் இருந்து கோபத்தை நோக்கும்போது கோபம் ஏற்படும் போது மனிதர்கள் சுயாதீன நிலையில் இருந்து விலகுகிறார்கள். [ hormones (ஊக்கிகள்) இன் தாக்கத்தினால் ] அதன் போது பேசும் வார்த்தைகள், நடவடிக்கைகள் தன்னையறியாமலே நிகழ்கின்றன. இவ்வாறான விடயங்கள் கோபத்தில் நிகழ்ந்தாலும் மனிதன் சுயாதீன நிலையை அடைந்ததும் இரு உறவுகளும் இணைந்து மன்னிப்பு கேட்டுக் கொள்வதன் மூலம் கோபம் இல்லாமல் போகின்றன.

பஹ்ரியா பாயிஸ்
ஹெம்மாதகம



# மழைக்காலம்

பெருவானம்
கொட்டித்தீர்க்கும்
பெருமழை...!

தனிமையில்
புற்கள் மேயும்
மாடு. அதன்
அருகில் இரண்டு கொக்குகள்..!

நெடுந்தொலைவில்
மலையுச்சியில்
கலைந்தும்
தவழும் மேகங்கள்....!

மழை பெய்ய
தயராகும் வானம்..!

காய்ந்த பிறகு
புற்களுக்கு
மகிழ்ச்சியில் மழை வெள்ளம்.

காலைநேரத்து
பனித்துளியொன்றில்
பெருவானம்
குடியேறும்.

அ. செல்வராஜ். க. நா. ஊர்.
உடுமலைப்பேட்டை




# கடவுள் மறந்த கடவுச் சொல்

**ஆசிரியர் : ஜின்னா அஸ்மி.**

**மதிப்புரை கோ.லீலா**

பதிப்பகம் : படைப்பு பதிப்பகம்.

கஸல் என்றொரு இறையின் இசை.

"கடவுள் மறந்த கடவுச் சொல்" என்ற தலைப்பே கஸலாக இசையை வழியவிடுகிறது.

வனப்பும்,மேன்மையும் கூடிய சிறு மானின் விழியசைவின் மென்மையை போன்றது கஸல்.

கஸலின் வழியே காதலை, மன்னர்களை, இறைவனை பாடுவது இயல்பாக இருந்தாலும், கஸல் கவிஞர் ஜின்னா அஸ்மியின் கஸல் இறைத்தன்மையை பாடுவதாக உணர்கிறேன்.

காதலியாக இருந்தாலும், இறைமையாக இருந்தாலும் முழுமையாக நம்மை ஒப்பளிப்பு செய்யும் போதுதான்,பேரன்பு பிரபஞ்சத்தின் பேரொளியென காலத்தைக் கடந்து மிளிரும்.

எதையும் எதிர்பாராத ஒப்பளிப்பின் மகத்துவம் பெரிதல்லவா? இந்த ஒப்பளிப்பின் மூலம் தான் காதலென்பது கஸலின் இசையாகிறது.

கஸல் கவிஞர் ஜின்னா அஸ்மியின் கஸலில் அத்தகைய இறைத்தன்மை தன்னை முழுமையாக இசைத்துக் கொண்டிருக்கிறது.

தன்னை தொலைத்து தன்னை தேட சொல்லும் கஸல் எத்தனை தத்துவார்த்தமான உண்மையை எளிதாக சொல்லி விடுகிறது. முதல் கஸலிலேயே என்னை தொலைத்து, அதன் இறைத் தன்மையை துய்த்துக் கொண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு கசலும் ஒரு வியப்பை ஏற்படுத்தவேண்டும், கஸலின் காஃபியாவோ, ரதீஃப் இரண்டில் ஒன்று அதை «கடவுள் மறந்த கடவுச் சொல்» முழுதும் அப்பணியை செய்கின்றன.

கஸல் "வாஹ்" போட வைக்க வேண்டும். அத்தனை கஸலிலும் "வாஹ்" போட வைத்து தன்னை இசைத்துக் கொள்கிறது: "கடவுள் மறந்த கடவுச் சொல்» எனும் கஸல்.

கசல் கவிஞர் ஜின்னா அஸ்மி, நுண்மையான சொற்களைக் கொண்டு ரசிகர்களுக்கு கஸலை அனுபவிப்பதற்கான சூழலை உருவாக்கி தந்துள்ளார்.

பொதுவாக ஒரு "ஷேர்" உருவானப் பிறகு அடுத்த ஷேர் உருவாக பல ஆண்டுகள் ஆகலாம்.அப்படியாக தன்னியல் பில் அவை அமையும் போது அந்த கஸல் முழுமைப் பெறும்.

அதனால்தான் கஸல் கவிஞர் ஜின்னா அஸ்மி அவர்கள் ப்த்தொன்பது ஆண்டுகள் கழித்து "கடவுள் மறந்த கடவுச்

சொல்'' என்ற கஸலை வெளியுலகின் செவிகளுக்கு இசைக்க விட்டிருப்பதாக உணர்கிறேன்.

ஒவ்வொரு கசலையும் ஆய்ந்து எழுத மனம் ஆசைக் கொண்டாலும், இனிமேல் இக்கஸலை இசைக்க இருப்பவர்களின் உணரும் உரிமையை பறித்தலாகிவிடும் என்பதால் ஆசைக்கு அணையிடுகிறேன்.

எனினும், அணைச் சுவர் வழியே கசியும் நீரென சில கஸல்களின் இசை ததும்பி வெளிவருவதை தடை செய்ய ஏலவில்லை..

உன்னை
நேரில் பார்ப்பது சுகம்
நினைத்துப் பார்ப்பது
அதை விடச் சுகம்»

எத்தனை நுண்மையான தத்து வத்தை உள்ளடக்கிய கஸல்.இஸ்லாத் திலும், சைவ, வைணவத்திலும், இறையை உருவமற்ற நிலையிலே தொழக்கூடிய ஒரு நிலையே பக்தியின் உன்னத நிலை என்று சொல்லப் பட்டிருக்கிறது. அது இறைத்தன்மைக்கும், காதலுக்கும் பொருந்தும்.

காதலை காண்பவருக்கு காதலை யும், இறைத்தன்மையை உணர்ந்தவருக்கு இறைத்தன்மையும் இசைக்கிறது கஸல், ரசிகருக்கு ஏற்றது எதுவோ அதை அவரே இக் கஸலில் இருந்து இசைத்துக் கொள்ளலாம். ''வாஹ்'' போட்ருவோம்.

காதலின் வழியே தான் இறைத் தன்மையை அடைய முடியும் என்பதை ஓஷோவும், சூஃபியும், ஸென்னும் சொல் கிறது. அதையே ''கடவுள் மறந்த கடவுச் சொல்'' கஸலும் உறுதிப்பட இசைக்கிறது.

காதலின் சிறகுகளைக் கொண்டு தான் இறைத்தன்மையை நோக்கி பறக்க முடியும்.

சிறகையும்,பறத்தலையும் வானுக்கு ஒப்பளிப்பு செய்து விடும் பறவையாக «தான்» என்பதை ஒப்பளிப்பு செய்த பின் நாம் இக்கஸலின் மூலம் காதலையோ/ இறைத்தன்மையையோ அடைய முடியும்.

ரசிகனுக்கும்,கவிஞருக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைத்து, இரு வரையும் இணைக்கிறது ''கடவுள் மறந்த கடவு சொல்'' கஸலில் இசை யென வழியும் இறைத்தன்மை.

புரியாதவர்களுக்கு கஸல் காதல் கவிதையாக மட்டுமே காட்சியளிக்கும்.

கஸல் என்ற அரபின் கொடையை, இலக்கியஅழகைஎல்லோருக்கும்கொண்டு சேர்க்கவும், ரசிகர்களின் சிந்தனையை, துய்த்தலை மேம்படுத்த பேரன்போடு இக் கஸலை வெளியிட்டு இருக்கும் கஸல் கவிஞர் ஜின்னா அஸ்மியை வாழ்த்தி கஸலை இசைப்போம்.

அய்யா ஈரோடு தமிழ்ன்பன் அவர் களின் அணிந்துரையும், அய்யா முகமது பாட்சா அவர்களின் ஆய்வுரையும் வெகு அருமையும், ரசிக்கத்தக்கதும் ஆகும். புதிதாக கஸலை அணுகுவோருக்கு ஒரு வழிக்காட்டியாகவும் உள்ளது. வழிக்காட்டி களுக்கு நன்றியும்,அன்பும்.

படைப்பு குழுமத்திற்கும், நிர்வாகி ஜின்னா மற்றும் தோழமைகள், ஓவியர்கள் அனைவருக்கும் நன்றியும், பாராட்டும், மனம் நிறைந்த வாழ்த்துக்களும்.

அட்டைப்படம் வெண்மை நிறத்தில் வடிவமைக்கப்பட்டிருப்பது அவரவருக் கான இசையை அவரவர் இசைத்துக் கொள்ளுங்கள் என சொல்வதாய் உணர் கிறேன்.

ஓரிரு கஸலை மட்டுமே சொல்லி யிருக்கிறேன். ஏனெனில் சுவைக்கும் இனி மையை அவரவர் படித்து சுவைக்கட்டும் என்பதற்காக தான்.

என்றென்றும் அன்புடன்

**கோ.லீலா.**



# பிரம்ம மரம்

நெளஷாத் கான் லி
அபுதாபி

இந்த உலகில் அவதரித்த எல்லா உயிர்களின் வாழ்நாளும் ,இறுதி நாளும் பிரம்ம மரத்தின் இலைகளில் குறிக்கப் பட்டிருக்கும். ஒரு உயிரின் ஜனனம் முதல் மரணம் வரை உள்ள எல்லா நடவடிக்கையும் அந்த இலைகளில் பொறிக்கப் பட்டிருக்கும்.

பிரம்ம மரத்திலிருந்து ஒரு இலை உதிர்கிறது என்றால் இந்த உலகில் ஒரு உயிர் போக போகிறது என்று அர்த்தம் .ஒவ்வொரு பிரம்ம மரத்தின் இலையிலும் ஒவ்வொரு உயிரின் பெயரும், வாழ்க்கை நிகழ்வுகளும் எழுதி இருக்கும்?



பிரம்ம மரம் கடவுள் , தேவர்கள் ,வானவர்கள் மட்டுமே அறிய கூடிய ரகசிய அதிசய மரமாகும். சாதாரண மானிடர்க்கு எல்லாம் அந்த மரம் புலப்படாது.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் கடவுள் பிரம்ம மரத்தின் மூலமே இப் பிரபஞ்சத்தில் நடத்தி வருகிறார்.

மனித இனம் தோன்றி பல நூற்றாண்டு ஆகியும் இதுவரை படைத் தலிலும் மனித உயிர்களை அழித்தலிலும் இதுவரை எந்த சிக்கலும் , பிரச்னையும் ஏற்பட்டதில்லை !

21 ஆம் நூற்றாண்டு மனிதர்கள் வாழும் பூலோகம் வசந்த்க்கு கல்யாணமாகி அஞ்சு வருஷம் ஆச்சு அவனுக்கும் சரி அவன் பொண்டாட்டி கனிமொழிக்கும் சரி எந்த குறையும் இல்லை ஆனால் அவர்கள் வீட்டில் இன்னும் மழலை செல்வம் மலர வில்லை. அவன் வேண்டாத தெய்வம் இல்லை. போகாத கோயில் இல்லை.

வசந்தின் பாசமலர் கல்யாணிக்கு கல்யாணமாகி எட்டு வருஷம் ஆச்சு கல்யாணிக்கும் ,அவள் கணவன் தங்க ராஜுக்கும் எந்த குறையும் இல்லை என்று மருத்துவர்கள் சொல்லி விட்டனர் .அவர்கள் இல்லற வாழ்க்கையும் எந்த குறையுமின்றி சந்தோஷமாகவே போய் கொண்டிருக்கிறது, இருந்தும் அந்த வீட்டில் இன்னும் மழலை ஒலி இசைக்காதது ஏன்? என்று புரியாத புதிராகவே இருக்கிறது. குழந்தை செல்வ மெல்லாம் ஆண்டவன் கொடுக்கிற வரம் என்ன கோபமோ தெரிய வில்லை அந்த குடும்பத்திற்கு ஆண்டவன் இன்னும் குழந்தை செல்வத்தை கொடுக்க வில்லை. தனது மகன் வசந்துக்கும் குழந்தை இல்லை,தனது மகள் கல்யாணிக்கும் குழந்தை இல்லை மொத்தத்தில் என் வாரிசுகளான குடும்ப விளக்குகளுக்கு அவர்கள் வாழ்வில் தீப ஒளி ஏற்றுவதற்கு குழந்தை செல்வத்தை கொடு ஆண்டவா

என்று அனுதினமும் வேண்டினாள் வசந்த் - கல்யாணியின் தாய், திரு நள்ளாருக்கு சென்று சனி தரிசனம் செய்து வந்தால் நம்மை பிடித்த தீமைகள் விலகும் என்று சாஸ்திரம் சொல்கிறது ஒருவர் தெரிந்தோ, தெரியாமலோ முன் ஜென்மத்திலோ, அல்லது வாழ்கின்ற பிறவியிலோ செய் கின்ற பாவத்திற்கு தண்டனை உண்டு என்று இந்து சாஸ்திரம் சொல்கிறது. அதே சமயத்தில் மனம் திருந்தி ஆத்மார்த்த மனதோடு சனி பகவானை தரிசனம் செய்யும் போது உங்களின் பாவங்கள் விலகுகிறது என்று இந்து சாஸ்திரத்தில் இருக்கிறது என்பதை வசந்த்-கல்யாணியின் தாய் மேனகா படித்ததால் வாரந்தோறும் தன் மகனுக்காகவும், மகளுக்காகவும் சனி பகவானை வணங்கி நெய் விளக்கும் போட்டு வந்தாள்.

நிச்சயம் வசந்த் - கனி மொழி தம்பதிக்கும், கல்யாணி-தங்கராஜ் தம்பதிக் கும் ஆண்டவன் குழந்தை செல்வத்தை கொடுப்பான் என்ற நம்பிக்கையின் ஒளியில் அந்த குடும்பங்கள் வாழ்ந்து வருகிறது .

அவர்களுக்கு பிறக்க போகும் குழந்தைகள் அதிர்ஷ்டசாலிகள் ஏனென் றால் அந்த குடும்பம் குழந்தைகளை தேவதைகளை போல வளர்ப்பார்கள் ,துன்பத்தை, வறுமையை அறியாதவர்களாக வளர்ப்பர். அன்பையும், பாசத்தையும் பாலோடும், தேனோடும் ஊட்டி, ஊட்டி வளர்ப்பர். எந்த தேவதைகளுக்கு அந்த குடும்பத்தில் பிறக்க கொடுத்து வைத்திருக்கிறதோ? ஹரி - பிரியா இணை பிரியாத காதலர்கள். உலகில் இவர்களை போல ஒரு காதலர்களை யாராலும் பார்த்திருக்க முடியாது. அவ்வளவு புனித மான காதல் இவர்களுடையது .ஒரு நூற்றாண்டு முன்பு உள்ள காலத்தில் இவர்கள் பிறந்திருந்தால் இவர்கள் காதல் வரலாறாகி இருக்கும். ஹரி மட்டும் ஒரு அரசனாக, செல்வந்தனாக இருந்திருந்தால் ப்ரியாவுக்காக ஆயிரம் கோடி தாஜ்மஹாலை இப்பிரபஞ்சத்தில் உருவாக்கி இருப்பான். அம்பிகாபதி - அமராவதி உயிரோடு இப்போது இருந்திருந்தால் இவர்கள் காதல் முன்பு அவர்கள் காதல் எல்லாம் தோற்று போய் இருக்கும். இவர்கள் காதலுக்கு எல்லைகள் இல்லை இவர்கள் அன்புக்கு அளவே இல்லை. அந்த வானத்தின் நீளத்தால் கூட இவர்கள் காதலை அளவிட முடியாது. அந்த சமுத்திரத்தின் நீரால் கூட இவர்கள் காதலை மூழ்கடிக்க முடியாது . மண்ணுக்குள் இவர்கள் புதைந்தாலும் ,தீயினால் இவர்கள் உடல்கள் அழிந்தாலும் அவர்கள் காதல் அவர்கள் ஆன்மாவிலிருந்து அழியாது .

சாதி, மதம், மொழி கடந்தது இவர்கள் காதல். பிரியா பாரம்பரிய தமிழ் மரபை சார்ந்த குடியானப் பெண். ஹரி தெலுங்கு பிராமண குடும்பத்தை சார்ந்தவன் எந்த சம்பந்தமும் இல்லாமல் ஒருவர் மீது வரும் உண்மையான அன்பே காதல் ஆகும் . அந்த அன்பு தான் இவர்கள்


ஓவியம் : ரஜினிகாந்தன்

இருவரையும் இணைத்தது. எங்கேயோ ஆந்திராவில் ஒரு கிராமத்தில் பிறந்த ஹரியையும், எங்கோ தமிழ்நாட்டில் உள்ள ஒரு மலை வாழ் நகரத்தில் பிறந்த ப்ரியாவையும் அற்புதமான காதல் தான் வாழ்வில் ஒன்றிணைத்தது.

பல பிரச்சனைகளை காதலால் சமரசமாக்கி, பல மோதல்களை எல்லாம் காதலால் மண்ணாக்கி, இப்போது கல்யாணம் வரை வந்திருக்கிறது. கல்யாண தேதி குறிக்க பட்டதுமே இவர்கள் முகத்தில் பூத்த புன்னகைக்கு அளவே கிடையாது.

---

## தொடாதே! மதுவை!

கலையாத கனவுகள்
கனமான போதும்
தொலையாத துன்பங்கள்
தொடர்கதையாய் தொடரும்

விடியாத பொழுதுகள்
விடிந்தென்ன லாபம்
வியாதியில் விழுந்திட்ட
கணவனின் அவலம்

கேளாது குடியில்
மூழ்கிட்ட மனதில்
கோளாறு உடம்பில்
குடியென கொள்ளும்

கொண்டவனின் துயரைப்
பார்க்க இயலவில்லை
துயிலாத இரவுகள்
இரக்கமற்று கழியும்

மன்னவனின் மனதினி
மீண்டெழுந்து விட்டால்
குதூகலம் காணும்
துயரறுத்துக் குடும்பம்

மலையான சோகம்
பனியாக மறையும்
உள்ளங்கள் பூரித்து
உவகைக் கொண்டாடும்.

நாகி. ஆர். ராஜேந்திரன்
நாகியம்பட்டி.சேலம்.

---

ஒரு நாள்...

பூலோகத்தில் வானம் திடீரென பகலில் இருட்டியது .சூரியன் திடீரென மாயமானது, சுட்டெரிக்கும் சூரியன் மறைந்து சூறாவளி காற்றை வீசியது அப்போது மழை வானத்தை பொத்து கொண்டு ஊத்தியது.

கல்யாண தாலி வாங்க நகை கடைக்கு வந்த ஹரி தாலியை வாங்கி கொண்டு திரும்ப வீட்டிற்கு செல்ல திரும்பி கொண்டிருக்கும் போது இந்த கன மழையில் மாட்டி கொண்டான். இன்னும் அரை மணி நேரத்திற்குள் பிரியா வீட்டிற்கு செல்ல வேண்டும் இதனால் மழையையும் கண்டு கொள்ளாமல் பைக்கை ஓட்டிக் கொண்டு சென்றான்.

வாகனத்தை ஓட்டிச் சென்ற அத்தருவாயில் ப்ரியாவின் போன் கால் வேறு வருகிறது. இப்போது அவனது மொபைல் போன் தொடர்ந்து ஒலித்து கொண்டே இருக்கிறது. அவன் அட்டண்ட் செய்யவே இல்லை. காரணம்...

தேவலோகத்தில் இருந்து ஹரியின் பெயர் பதித்த பிரம்ம மரத்தின் பிரம்ம இலை பூமியை நோக்கி உதிர்கிறது ,

வானிலிருந்து வந்த அந்த பிரம்ம இலை பூமியை தொடும் ஒரு நொடிக்கு முன் ஹரி இந்த மண்ணில் பிணமாக சரிந்தான்.

ஆம் ஹரி இப்போது உயிரோடு இல்லை ,கனத்த மழையால் மின்சார கம்பி சேதமடைந்து ரோட்டில் பைக்கில் சென்று கொண்டிருந்த ஹரி மீது விழுந்தது அதிக வாட்ஸ் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே ஹரி பலியானான்.

மாப்பிளை கோலத்தில் மணவறை ஏற வேண்டியவன்,பிணவறை சென்றான் சடலமாக.

பிரியாவுக்கு அவன் இல்லாத வாழ்க்கையை இந்த உலகில் நினைத்து கூட பார்க்க முடிய வில்லை அதனால் யாரும் செய்ய கூடாத முட்டாள் தனத்தை அவள் துணிந்து செய்தாள்.

ஆமாம் தன் வாழ்க்கை தலைவனுக்காக, கனவுலகிலேயே குடும்பம் நடத்திய தன் கணவனுக்காக , தன் ஆத்மார்த்தமான காதலின் காதலுக்காக, தன் உயிரின்

உயிருக்காக தனது உயர்ந்த, புனிதமான உயிரை தன் காதலுக்காக ,தனது ஹரிக்காக விஷம் குடித்து துறந்தாள்.

அன்று சனிக்கிழமை வேறு .அங்கு கூடி இருந்தவர்கள் வாய்ய வச்சுக்கிட்டு சும்மா இல்லாம வாய்க்கு வந்ததை எல்லாம் தன் இஷ்டத்துக்கு பேசினர், இந்த லோகத்துல தான் அவா லாளே ஒண்ணா சேர முடியல,வாழ முடியல, ஆனா சொர்க்கத்துல அவங்க கல்யாணம் நிச்சயமா நடக்கும். அவங்க பண்ண புண்ணியம் நிச்சயம் சொர்க்கத்துல சேர்க்கும். நிச்சயம் அந்த லோகத்துல அந்த பிள்ளைங்க சந்தோசமா இருப்பா. யார் கண்ணு பட்டதோ பிள்ளைங்க இப்படி வாழுற வயசுல இப்படி பாதியில துள்ள துடிக்க போய்ட்டா. பெருமாளே இது உனக்கே அடுக்குமா?

யோவ்... சும்மா இருக்கிறப்போ அந்த பெருமாள எதுக்குயா இழுக்கிற, எல்லாம் அந்த சனி பண்ணுற வேலையா, எல்லாம் அவன் செய்யுற சூழ்ச்சி.

சும்மாவா பெரியவங்க சொன்னாங்க. சனி பொணம் தனியா போகாதுன்னு இன்னைக்கு சனி கிழமை வேற. அதுக்கு உகந்த நாள் ,அதான் சனி அதன் வேலையை காட்டிடுச்சு. எப்படி எப்படியோ நல்லா வாழ வேண்டிய பசங்க அநியாயமா போய்ட்டாங்களே. சனி, இது உனக்கே நியாயமா இருக்கா என்று அங்கு கூடியிருந்தவர்கள் ஒரு சிலர் புலம்பினர்.

இதை எல்லாம் வானத்தில் இருந்து கேட்டு கொண்டிருந்த சனி பகவானை ரொம்பவும் கோபப் படுத்தியது. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழிலையும் படைத்த இறைவனே செய்கிறான், அப்படி இருக்க ஒன்றுமே செய்யாதவன் மீதல்லவா இந்த மடையர்கள் வீண் பழி சுமத்துகிறார்கள்.

ஒருவன் படைக்கும் போதே அவனது ஆயுள் காலம் குறிக்க பட்டு விடுகிறது அவன் நல்லவனா , கெட்டவனா என்பதை கணக்கிட்டு சொர்க்கம், நரகம் அனுப்பி வைக்க படுகிறார்கள்.

ஒருவன் எவ்வளவு நல்லவனாக இருந்தாலும் சரி ,அவனது விதி ,ஆயுள்



ஓவியம் : ரஜினிகாந்தன்

முடிந்து விட்டது என்றால் அவனது இவ்வுலக வாழ்க்கை முடிய போவது உறுதி ஆகி விடுகிறது ,பிரம்ம மரத்தில் இருந்து பெயர் பொறிக்க பட்ட ஒரு பிரம்ம இலை உதிர்ந்தால் அவன் உயிர் இந்த பூலோகத்தில் போவது ஆயிரம் சதவிகிதம் உறுதியான ஒன்று.

அப்படி இருக்க இந்த மதி கெட்ட மனிதர்கள் என்னை ஏன் குறை கூற வேண்டும் என்று வருத்தப் பட்டார் சனி பகவான்.

ஒருவன் திட்டினால் கூட பரவா யில்லை, அந்த இறப்பிற்கு வந்த ஒட்டு மொத்த கூட்டமே அல்லவா என்னை திட்டுகிறது.

இறைவா நீ இதை எல்லாம் கேட்க மாட்டாயா ?

இறைவன் சனி பகவான் முன் தோன்றினார்;

சனி பகவானே வருத்தப் படாதே ,இறந்த நபர்களின் மீது கொண்ட அன்பாலே மட்டுமே கூடி இருந்த கூட்டம் உன்னை திட்டியது,திட்டு உனக்கு

விழுந்தாலும் அதன் பலன், பாதிப்புக்கு உரியவன் நானே ஆவேன், நீ வருத்தப் படாதே.

சில நேரங்களில் நல்லவர்களின் உயிரையும் இளம் வயதிலேயே பறித்து விடுவேன், இதுவும் என் விதிகளில் ஒன்று. அந்த பூமியின் உலகம் நிரந்தரம் இல்லாதது, விரைவில் அழியக் கூடியது. இறக்கும் வரை பிறருக்கு பிரயோஜனமாய் இருக்கும் நல்லவனுக்கும் கெட்டது செய்வேன் பூலோகத்தில் மட்டும் ,அடுத்தவர்க்கு கெட்டது செய்யும் கெட்டவனுக்கும் நல்லது செய்வேன் பூலோகத்தில் மட்டும் ஆனால் அவை எல்லாம் மாயை, இந்த உலகமே நிரந்தரமானது,இந்த மேலோகத்தில் நல்லவர்க்கு சொர்க்கம் கிடைக்கும், நல்லது செய்யும் மனிதர்கள் தேவர்களுக்கு இணையாக நடத்தப் படுவார்கள். நல்லவர்களுக்கு மகிழ்ச்சி மட்டுமே இவ்வுலகில் கிடைக்கும் கெட்டவர் களுக்கு கொடுமையான, கொடூரமான தண் டனைகளும், நரகமும் தான் இங்கு கிடைக்கும். ஒவ்வொரு நொடியும் கெட்டவர்களுக்கு அவர்கள் ஆன்மா வேதனை அடையும் அளவுக்கு சித்ரவதை செய்யப் படுவார்கள் ,இவை எல்லாம் என் திருவிளையாடல்களில் ஒன்று என்றார் கடவுள்.

இறைவா இருந்தாலும் அந்த காதல் ஜோடிகளை இன்னும் கொஞ்ச காலம் வாழ வைத்திருக்கலாமே.

சனி பகவானே ,எல்லாம் நியாயங் களும், எல்லாம் தர்மங்களும் எனக்கும் தெரியும்.

அந்த காதல் ஜோடிகளுக்கு நான் தர போகும் இடத்தை கண்டால் நீயே சந்தோசப் படுவாய் என்றார் கடவுள்.

பிரம்ம மரத்தில் இரண்டு புதிய இளம் இலைகள் துளிர்த்தன.

பத்து மாதங்களுக்கு பிறகு...

வசந்த் - கனி மொழி தம்பதிக்கு அழகான ஆண் குழந்தையும், கல்யாணி - தங்க ராஜ் தம்பதிக்கு அழகான பெண் குழந்தையும் பிறந்தது. அந்த குடும்பமே சந்தோஷத்தில் மிதந்தது.

இப்பவே கல்யாணி தன் அண்ணனிடம் கறாராக சொல்லி விட்டாள். இங்கே பாருண்ணே, உன் மவன் தான் என் வீட்டு மருமவன் .என் பொண்ணு தான் உன் வீட்டு மருமவ புரிஞ்சுதா என்றாள்.

தங்கச்சி சொன்னா மறு பேச்சே இல்லம்மா என்றான் வசந்த்.

அந்த இரு குழந்தைகளுக்கு ஹரி - பிரியா என்று பெயர் வைத்தனர்.

மீண்டும் ஆனந்தத்துடன் ஆரம் பிக்கும் ஹரி - பிரியாவின் காதல் கதை ...!!

■

# திணறும் உயிர்

அயற்சியில்
அல்லாடுகிறோம்

பொய்யாய்
சிரிக்கிறோம்

போலியாய்
ரசிக்கிறோம்

பயமில்லாதவராய்
நடிக்கிறோம்

முத்தங்களின்
கல்லறைகளாகிவிட்டன
இதழ்கள்

தளர்ந்து துவண்டு
கிடக்கின்றன
தழுவத்துடிக்கிற கரங்கள்

பொழுதுகள்
அழுதுவடிகின்றன
அழுது வடிவதைக்
காட்டமுடியாமல் திணறுகிறது
உயிர்.

- சிங்கார சுகுமாறன்

# அடிக்கரும்பின் அற்புதப்பிழிவு

சின்னக் குழந்தைக்
கையைத் தூக்கிச்
சிரித்து எழுந்தால் தூக்கிடு – அதைச்
சிரிக்க மேலும்
வைக்க முடிந்தால்
சிறுசிறு விளையாட்டு காட்டிடு.

எண்ணம் தூய்மை
குழந்தை மனத்தில்
இருப்பது உண்மை தெரிந்திடு – உன்
இதயம் அதுபோல்
ஆகிடவேண்டும்
இதற்குக் காரணம் புரிந்திடு.

உன்னைக் குழந்தை
பிற்கா லத்தில்
உளத்தில் தாங்கிடும் வழியிது – அதன்
உணர்வில் கலந்து
உண்மை அன்பை
உணர்த்தும் கரும்பின் பிழிவிது.

மண்ணை என்றும்
மகிழ்ச்சியில் வைக்கும்
மாறா நிலையில் அன்பொன்றே – நம்
மக்கள் எல்லோரும்
இக்கணம் உணர்ந்தால்
மலரும் அமைதி மலரின்றே!

நாளின் பகுதியை
நன்றாய்ப் பகுத்து
நம்குழந் தைக்கே செலவிடுவோம் – அது
நாளைய தலைமுறை
சீர்பெற உதவும்
நல்லுணர்வுக்கே தளமிடுவோம்!

தோளில் தூக்கிடு
குழந்தை சிரிக்கும்
துணையாய் நிலைக்கும் பிற்காலம் – உன்
தோல்வியில் கூட
பங்கிட்டு அழுதிடும்
தொடரும் என்றும் பொற்காலம். –

**- நீரை. அத்திப்பூ**



# படபடக்கும் பட்டாம்பூச்சி

படபடக்கும் பட்டாம்பூச்சி!
இன்றும் உன்னைப் பார்த்தாலே!
என் மனதில் பறக்குது
பல வண்ணத்துப்பூச்சி!

அன்று தாவி பிடித்தேன்
என் மனதின் மகிழ்ச்சிக்காக!
இன்றும் துரத்தி வருகிறேன்
என் மகளின் மகிழ்ச்சிக்காக!

உனக்கு
வானமே எல்லை
எனக்கு
வார்த்தைகளில் கூட எல்லை

உனக்கு
வண்ணங்களில் வாழ்க்கை
எனக்கு
எண்ணங்களில் மட்டுமே வாழ்க்கை

அன்று
உன்னைப் பார்த்ததுமே
கையில் பிடிக்க தோன்றும்
இன்றோ உன்னைப் பார்த்ததால்
படிக்கிறேன் கவிதை ஒன்று.

- ஜனனிகுமார்
நாகை.





## அன்பை நேசியுங்கள்!

கவிஞர் பொன்விலங்கு
பூ. சுப்ரமணியன்

அன்பு
எல்லாப் பரிசுகளையும்
ஏற்றுக் கொள்கிறது
குண்டூசியைக்கூட..

அன்பு
எல்லாக் கடிதங்களையும்
படித்து ரசிக்கிறது
சோகமாக இருந்தால்கூட.

அன்பு
எல்லாத் துன்பங்களையும்
தாங்கிக் கொள்கிறது
மரணத்தின் பிடியில்கூட

அன்பு
எல்லாக் கவிதைளையும்
படித்து மகிழ்கிறது
கண்ணீர் கவிதையைக்கூட

அன்பு
பனித் துளிகளை
கண்டு மகிழ்கிறது
கண்ணீர் துளிகளைக்கூட

அன்பு
எல்லாக் கண்களையும்
கருணையுடன் பார்க்கிறது
குருடாக இருந்தால்கூட

அன்பு
எல்லா உயிரையும்
தன்னுயிர்போல நினைக்கிறது
சிற்றெறும்பைக்கூட.



## வாக்களிக்கப்பட்ட நாடு

பாஹியா

இதனைப் பாருங்கள்,
வரைபடத்தில் இல்லையென்றாலும்
இது ஒரு நாடு.
இது மங்கிப் போகிறது, மறைகிறது
இது எப்படி...

இது என் இடம்
இங்கே என் பெற்றொர் பிறந்தார்கள்
மூதாதையோரும் கூட - வாழ்ந்தார்கள்...

பாருங்கள்,
இது இங்கே இருந்தது
நான் பிறக்கும் வரையில்.
எனினும்
யாரோ யாருக்கோ
அவர்களுக்குச் சொந்தமில்லாத
ஒரு நிலத்தை
ஒரு இல்லத்தை
ஒரு நாட்டை
வாக்களித்தார்கள்.



Originally written in English
Original Title : Promised Land

கேட்பதற்கு மிக எளிமைதான்...
ஆனால் நான் பிறந்த வீட்டில்
நான் தூங்கிய படுக்கையில்
நான் சமைத்த சமையல் கட்டில்
நான் அந்நியனேன்...
என்னுடைய காலடி மண் மங்குகிறது
வேறொரு நாடாய் ஆகிறது.
பாருங்கள்
தாளில் மையை அழித்தல்போல
அழித்தல் எளிது.
எனது வரைபடத்தின் பச்சை மை
வெண்மையாய் உலர்கிறது.
எனது நாடு ஏன் இப்படி மங்குகிறது?
எனக்கு யாராவது சொல்லமுடியுமா?
எங்கெனும்
எனது நாடு இரத்தத்தில்
தோய்ந்து கிடக்கிறது.
நாங்கள் சிகப்பு ரோஜாக்களின் கூழ்போல
இரத்தத்தால் எங்கள் நாட்டுக்கு நீர்
ஊற்றுகிறோம்..
எனினும் எப்படி எனது நாடு
இங்ஙனம் மங்கி மறைகிறது?



# தனிமை என்பது

தனிமையெனச்
சொல்லில்லை.
சூழவும் சொற்களின்
புகைமூட்டம்.

சிந்தனைகள்
வர்ணங்களாய்.

அழுக்காறு,பொய்
எள்ளல், காமம்
எனவுமாகத்தான்
ஓடுகிறது எல்லாமும்.

எல்லார்க்கும்
இதுவிரயம்.
உனக்குக் கேலி
எனக்குவாழ்க்கை.
இவற்றோடுதான்
போகிறதுகாலம்
துடிப்போடு.

சிக்கல் விரும்பிகள்
எப்போதும் நெரிசலாய்
நிற்கிறார்கள்
வருகிறார்கள்
உபதேசிக்கிறார்கள்

தவமியற்றி
வழிகள் சொல்லி
பலமாய்க் கூச்சல்
எழுப்புகிறார்கள்.

உட்கார்ந்த
இடத்திலிருந்தே
தெரிகிறது
அழுத்தமாய்
எனக்கான எல்லாமும்

நிலவு நட்சத்திரம்
வானம் சூரியன்
மேகங்கள்
உதிர்ந்த சருகுகள்
இன்னும் வேண்டுவனவும்.

கண்சிமிட்டும் நேரம்
வெல்வேன் வருவேன்
தத்துவங்களையும்
சொற்களையும்
மிதித்துக் கொண்டு.

**நா. விச்வநாதன்**

# கள்ளிப்பூ காதல்

முள்ளால் நிறைந்து முன்னிற்கும் உன்னிதயத்தில்
கல்லாய் இருந்த என்மனதின் காதல்
செல்லாது என்மனமும் செக்கில் சுற்ற
செந்தூரப் பூவாகி செழிப்புடன் வளர்ந்தாயே!

காதல் வசந்தமாய் நீகாட்சி அளிக்க
காட்டு விலங்காய் வனத்தில் நிற்கின்றேனே
குத்தி என்னைக் கொள்வாய் நானறிவேன்
சக்திமிகு காதலால் நிலையை மறந்தேன்

பித்தனாய் நானும் சுயமும் இழக்கிறேன்
பிதற்றியே நாளும் வாழ்ந்து மடிகிறேன்
மிச்சமாய் என்னுயிரும் வாடி இருக்க
நிச்சயம் ஏற்பாய்க் காதலை என்றுள்ளேன்

எச்சமாய் எனைநீ நினைத்தாலும் சரி
என்னுயிர் இருப்பதே உன்னால் தெரியுமா
பற்றுவேன் கரங்களால் பழுதாவேன் என்றாலுமே
பகிர்ந்துக் காதல் பரிமாறி உயிர்விடுவேன்.



வா.சண்முகம்